அன்பளிப்பு 40P

# களத்தில்

தாயகத்தின் உண்மை நிகழ்வுகளை தாங்கிவரும் பத்திரிகை 15-04-1994

உள்ளே...

1. கப்டன் துளசிரா !
மீண்டும். உன்னுடன் பகிர்வதற்காய் நிறைய
2. சிறுகதை - கூண்டுக்கிளி
3. முறியடிக்கப்பட்ட முற்றுகை
4. தவளைத் தாக்குதலில் துணைப்படையினர்
5. இரத்தமும் தசையும் உயிருமாக...
தென் தமிழீழ மக்களின் வாழ்க்கை
6. போரும் சமாதானமும்
7. தமிழீழ மேன்முறையீட்டு நீதிமன்று

## சிறீலங்கா சபாநாயகருக்கு ஜனாதிபதி தடையுத்தரவு

# தீர்வு வராது - வரப்போவது யுத்தமே

அமைதித் தீர்வுக்கான வழி வகைகள் குறித்து ஆராய்வதற்காக, தமிழீழத் தேசியத் தலைவர் பிரபாகரன் அவர்களைச் சந்திப்பதற்கு யாழ் செல்லவிருந்த சிறீலங்கா சபாநாயகர் எம். எச். முகமட் அவர்களை, அங்கு விஜயம் செய்ய வேண்டாமென சிறீலங்கா ஜனாதிபதி டி. பி. விஜயதுங்கா தடையுத்தரவு பிறப்பித்துள்ளார்.

இதுகுறித்து சிறீலங்கா சபாநாயகர் விடுத்துள்ள அறிக்கையில், "மிக அதிகளவிலான உயிர்களைப் பலிகொண்டு, நாட்டின் பொருளாதாரத்திற்கு மோசமான சேதத்தை ஏற்படுத்திவரும் யுத்தத்தை முடிவுக்கு கொண்டுவர ஏதாவது வழிவகைகளைச் செய்யும்படி என்னை உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் கடந்த பல மாதங்களாக என்னைச் சந்தித்த இலங்கையரும், பிறரும் கேட்டு வந்தனர். இதற்காக சிறீலங்கா ஜனாதிபதியின் அனுமதியுடன் விடுதலைப் புலிகளுடன் ஆரம்ப பேச்சு வார்த்தைகளில் ஈடுபட்டேன். இதன் விளைவாக விடுதலைப் புலிகள் பெரிய வெள்ளியன்று என்னை யாழ்ப்பாணத்தில் சந்திப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்ததுடன் விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரனைச் சந்திப்பதற்கும் ஏற்பாடுகளைச் செய்தனர்.

இந்த விஜயத்தின் நோக்கம் அமைதி வழித்தீர்வினை முன்னெடுத்துச் செல்வதற்கான வழிவகைகளை ஆராய்வதேயாகும். திரு. பிரபாகரன் அவர்களின் கருத்துக்களைக் கேட்டறிந்து, அதனை சிறீலங்கா அரசாங்கத்திற்குத் தெரிவித்து அமைதிப் பேச்சு வார்த்தை இப்பொழுதே ஆரம்பமாக சாத்தியங்கள் உண்டா? என ஆராய எண்ணியிருந்தேன்.

ஆனால் இன்று காலை நான் பிரான்சில் இருந்து வந்ததும் இவ் யாழ்ப்பாண விஜயம் குறித்து பேசுவதற்காக ஜனாதிபதி என்னை அழைத்தார். தர்க்க ரீதியான கஸ்டங்கள் (Logical difficulties) காரணமாக என்னை யாழ்ப்பாணம் செல்ல வேண்டாமென ஜனாதிபதி விஜயதுங்க ஆலோசனை கூறினார்.

எனது விஜயத்தை பிற்போடுவது குறித்து வேதனையடைகிறேன். ஆயினும் பொதுமக்களுக்கு எனது விஜயத்தின் அடுத்த திகதி குறித்து விரைவில் அறிவிப்பேன். நாங்கள் விரைவில் சந்தித்து, நீண்டகாலமாக

தொடர்ச்சி 14ம் பக்கம் ....



"ஒப்பரேசன் தவளை" சமருக்குப் புறப்பட்ட புலிவீரர்கள் முன் உரை நிகழ்த்தி அவர்களை வழியனுப்பிவைக்கும் தலைவர்.
"சென்று வாருங்கள் வென்று வாருங்கள்"
(கட்டுரை 6ம் பக்கம்)

## சர்வதேச நாடுகளில்

# நேரடி ஆயுதக் கொள்வனவில் சிறீலங்காவின் முப்படை அதிகாரிகள்

தமிழின ஒழிப்பு ஒன்றையே தனது நோக்காகக் கொண்டுள்ள சிறீலங்கா ஜனாதிபதி டி. பி. விஜயதுங்கா தனது பாதுகாப்புப் படை உயர் அதிகாரிகளை நேரடியான ஆயுதக் கொள்வனவில் ஈடுபடுவதற்காக சீனா, ரஸ்யா, தென் ஆபிரிக்கா போன்ற நாடுகளுக்கு அனுப்பி வைத்துள்ளார்.

ரீ-55 ரக தாங்கிகளை வாங்குவதற்காக ரஸ்யாவுக்குச் சென்றுள்ள சிறீலங்காவின் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கமில்டன் வணசிங்க, தாங்கிகளைப் பரிசீலித்து தகுந்தவையா எனப் பார்ப்பதற்காக ஒரு இராணுவ நிபுணர்கள் குழுவொன்றையும் அழைத்துச் சென்றுள்ளார். இவர்கள் ரஸ்யாவிலிருந்து புறப்பட்டு தென் ஆபிரிக்காவுக்குச் சென்று அங்கு பவள்ஸ் கனரக வாகனங்களைக் கொள்வனவு செய்யவுள்ளனர்.

இதற்கிடையில் சிறீலங்காவின் விமானப்படை தலைமை அதிகாரி என்சலன் பிரில் ரஸ்யா சென்று எம். ஐ. 17 ரக விமானங்களை கொள்வனவு செய்வதற்கான ஒப்பந்தங்களில் கைச்சாத்திட்டு விட்டு வந்துள்ளார்.

சிறீலங்காவின் கடற்படை தளபதி மொகான் சமரசேகர தமது உயர் அதிகாரிகள் நால்வருடன் சீனா சென்று அங்கு மிகக்கடுமையான பேரத்தை எதிர்நோக்கிய போதிலும் அதனை கடன் முறையில் கட்டுவதாக ஏற்று, நான்கு நவீன கப்பல்களை 115 கோடி ரூபா செலவில் கொள்வனவு செய்துள்ளார். ■

# மீண்டும் சீனாவுடன் சிறீலங்கா கடும் நட்பு

சிறீலங்கா அரசாங்கம் 1970 களில் சீனாவுடன் கொண்டிருந்த இறுக்கமான நட்பு, இந்தியத் துணைக்கண்டத்தில் சார்பு தன்மைகள் ஏற்பட வழிவகுத்தது. தற்போது மீளவும் சிறீலங்கா சீனாவுடன் இருபத்திரண்டு ஆண்டு இடைவெளிக்குப் பின்னர், மிக இறுக்கமான நட்பு நிலையினை வெளிப்படுத்தத் தொடங்கியுள்ளது. சமீபத்தில் சிறீலங்காவுக்கு 500 கோடி ரூபா பெறுமதியான ஆயுதங்களை வழங்கிய சீனா, தற்பொழுது 115 கோடி ரூபா பெறுமதியான 4 கப்பல்களை வழங்கியுள்ளது. 250 தொன் எடையுள்ள தாங்கிக் கப்பல் ஒன்றும், நீர்மூழ்கிக் கப்பல்களைத் துரத்தும் 50 மீற்றர் நீளமான 'கினான்' வகை படகு ஒன்று, இரண்டு அதிவேக விசைப்படகுகள் என்பன இதில் அடங்கும். அத்துடன் கடந்த மாதம் சீன உதவிப் பிரதமர் குயன் குன்கென் சிறீலங்காவுக்கு விஜயம் மேற்கொண்டு சிறீலங்கா ஜனாதிபதியுடன் பேச்சுக்களை நடத்தியுள்ளார். இதையடுத்து சீனாவுக்கு மே மாதம் 5ம், 6ம் திகதியளவில் சிறீலங்கா ஜனாதிபதி உத்தியோக பூர்வமான விஜயமொன்றை மேற்கொள்ளவுள்ளார். சீனாவுடனான இக் கடும் நட்பு, மீளவும் இந்திய உபகண்டத்தில் சார்பு நிலைகள் தோன்றவும், தென் ஆசியாவின் அமைதிக்கு ஊறுகள் ஏற்படுத்தவும் கூடுமென சர்வதேச அவதானிகள் அச்சம் தெரிவித்துள்ளனர். ■

# இலங்கைப் பிரச்சினைக்கான தீர்வில் விடுதலைப் புலிகளே மையசக்தி

☆ முன்னாள் இந்திய வெளிவிவகாரச் செயலாளர் டிக்சிற்

"விடுதலைப் புலிகளின் இராணுவ அடிப்படையிலான ஆற்றலும் தயார் நிலையும் தளர்ச்சியடையாமல் உறுதியாகவே உள்ளது. பூநகரி இராணுவ முகாம் மீது அவர்கள் மேற்கொண்ட தாக்குதலில் பெற்ற வெற்றி இந்த உண்மையைக் கோடிட்டுக் காட்டுகிறது. பூநகரித் தோல்வியைத் தொடர்ந்து இலங்கையின் அரசியல் பிரமுகர்கள் பலர் மீண்டும் இந்திய உதவி பெறப்பட வேண்டுமெனச் சிந்திக்கத் தொடங்கியுள்ளனர் என உறுதிப்படுத்தப்படாத செய்திகளும், எதிர்பார்ப்புக்களும் வெளியாகின. ஆனால், இதற்கான சரியான ஆதாரங்கள் எதுவும் இல்லை. எதிர்காலத்தில் இந்தியா இதற்குள் இறங்காது என்பதை எவரும் துணிந்து கூறலாம். எனவே இலங்கைப் பிரச்சினைக்கான எந்த ஒரு தீர்விலும் விடுதலைப் புலிகள் அமைப்புத்தான் மைய சக்தியாக இருக்கும்"

இவ்வாறு இந்திய வெளிவிவகாரச் செயலாளராக இருந்து அண்மையில் ஓய்வுபெற்ற, திரு. டிக்சிற் "இந்து" பத்திரிகை க்கு எழுதியுள்ள கட்டுரை ஒன்றில் விளக்கியுள்ளார். அக்கட்டுரையில் அவர் மேலும் கூறியதாவது:

### தென் ஆசியாவுக்கு முக்கியமானது

"இலங்கைத் தீவில் வன்முறைகள் நாட்டின் நிலைமைகளுக்கு எற்ப கூடிக்குறைந்து ஒரு சக்கரம் போல் சுற்றிக்கொண்டுள்ளது. ஒரு பக்கத்தில் பல பொருள்படும்படியான சிறீலங்கா அரசாங்கத்தின் போக்கும் மறுபக்கத்தில் தனது அபிலாசைகளுக்கான விடுதலைப் புலிகளுடைய உறுதிப்பாடும் உள்ளது. இந்தச் சம்பவங்களை இந்தியா எவ்வாறு அணுக முடியும்? அண்மைக்கால சம்பவங்களை ஆய்வு

தொடர்ச்சி 14ம் பக்கம் ....

# மேலும் பல கனடிய எம்.பி.க்கள் பேச்சு வார்த்தைக்கு வற்புறுத்து

## "இது சர்வதேச சதி" என்கிறார் பிக்கு

இலங்கைத் தீவின் தேசிய இனப்பிரச்சினைக்கு அமைதிவழித் தீர்வு காணும்படி சர்வதேச சமூகத்தால் சிறீலங்கா அரசாங்கத்திற்கு ஏற்படுத்தப்பட்டுவரும் வற்புறுத்தல்கள் அதிகரித்து வருகின்றன.

கனடிய ஒன்டோரிய மாகாண பாராளுமன்ற உறுப்பினர் டிம் மூர்பி, கனடிய அரசாங்கத்திடம் சிறீலங்கா அரசாங்கத்தை அமைதி வழித் தீர்வுக்கு வற்புறுத்தும்படி கேட்டுள்ளார். இவர் தாம் கனடா ஒன்டோரியாவில் வாழும் தமிழ் மக்களின் முக்கிய தலைவர்கள் பலரிடமும் பேசி

தொடர்ச்சி 14ம் பக்கம் ....

புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்



# மாற்றங்கள்

சமூகத்தின் உறுப்பினன் என்ற வகையில் மனிதன் கைப்பற்றிய அறிவு, நம்பிக்கை, கலை, ஒழுக்கப்பண்புகள், சட்டம், வழக்கம் போன்ற பல திறமைகளையும், பழக்கங்களையும் உள்ளடக்கிய முழுமையே 'பண்பாடு'ஆகும். இந்தத் திறமைகளை மாற்றுகின்ற ஒரு சக்தி அந்த சமூகத்திடையே தோன்றும்பொழுது அந்த சமூகத்தின் பண்பாட்டில் மாற்றம் ஏற்படுகின்றது.

தமிழீழ விடுதலை உணர்வு என்கின்ற சக்தி, இலங்கைத் தீவில் நிலமானிய சிந்தனைகளின் எச்ச சொச்சங்களுடன் வாழ்ந்துகொண்டிருந்த தமிழர்களின் அறிவில், நம்பிக்கையில், கலை ஒழுக்கப்பண்புகளில், சட்டத்தில், வழக்கத்தில், பழக்கத்தில் எத்தனையோ சமூகப்பிரக்ஞையான மாற்றங்களை ஏற்படுத்தி இலங்கைத் தமிழர்களின் 'பண்பாட்டில்' மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. இதுவே அரசியல் மாற்றங்களின் காரணிகளாகும்.

ஒரு தொகுதியில் நிகழ்கின்ற மாற்றம் ஏனைய பகுதிகளில் உரிய மாற்றத்தை உண்டாக்குகின்ற அளவிற்குத் தொடர்புடைய நடவடிக்கைகளின் தொகுதியை "முறை" என்கிறார்கள். முறையாக அமைக்கப்பட்டிருந்தாலும் இல்லாவிட்டாலும் எங்கும் விரவிநிற்கின்ற ஒருவகை நடவடிக்கைகளையே "நியதி" என்பார்கள். தமிழர்களிடை "நியதி" என்ற நிலையில் காணப்பட்ட பல்வேறு சமூக அடக்குமுறை நடவடிக்கைகள் போராட்ட "முறை"களால் மாற்றியமைக்கப்பட்டு சுதந்திர -சமத்துவ -சகோதரத்துவ உறவுகளுடன் கூடிய "நாட்டு விடுதலையை தங்கள் உயிரிலும் மேலாக நேசிக்கும் மனிதர்கள் தமிழீழ மண்ணிலே "போராடுகிறார்கள்". இவர்களிடம் உள்ள தெளிவு -துணிவு, எந்த நெளிவுகளும் இன்றி விடுதலை நோக்கிய நேர்கோட்டில் அவர்களை விரைவாக நடக்க வைக்கிறது. இத்தகைய அரசியல் விழிப்புணர்வு பெற்ற மக்களை எந்த அடக்குமுறையாலும் வெல்ல முடியாது. எந்த பதவிகள், சலுகைகளாலும் வாங்கவும் முடியாது. தானும் தன் எதிர்கால சந்ததியும் தங்கள் தாயகத்தில் சுயநிர்ணய உரிமையுடனும், அமைதியுடனும் பாதுகாப்பாகவும் வாழக்கூடிய நீதியான அமைதியை அவர்கள் தேடுகின்றனர். இந்த நெடும்பயணத்தை ஆயுத அடக்குமுறைகளால் அடக்கிவிடலாம் என எண்ணுபவர்களுக்கு எதிராக ஆயுத எதிர்ப்பின் மூலம் தங்கள் மனஉறுதியை வெளிப்படுத்தி நிற்கிறது தமிழீழ சமுதாயம். இந்த மக்களின் மனஉறுதியும் -அந்த மனஉறுதியை படைத்திட்ட தலைவன் பிரபாகரனும்தான் தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் வெற்றிகளின் அடிக்கற்கள்.

இதனை முன்னாள் இந்திய வெளிவிவகார அமைச்சின் செயலாளர் திரு. டிக்சிற் தெளிவாகக் கூறியுள்ளார். "விடுதலைப் புலிகளின் இராணுவ அடிப்படையிலான ஆற்றலும் தயார் நிலையும் தளர்ச்சியடையாமல் உறுதியாகவே உள்ளது. பூநகரி இராணுவ முகாம் மீது அவர்கள் மேற்கொண்ட தாக்குதலில் பெற்ற பெருவெற்றி இந்த உண்மையைக் கோடிட்டுக் காட்டுகிறது" என்பது அவரின் இன்றைய கருத்து.

திரு. டிக்சிற் மாற்றங்களை ஏற்றுக்கொள்கிறார். அதற்கு காரணத்தை அவரே சொல்கிறார். "இலங்கைப் பிரச்சினைக்கான எந்தத் தீர்விலும் விடுதலைப் புலிகள்தான் மையசக்தியாக இருப்பர். கூட்டணி, ஈ. பி. ஆர். எல். எவ். போன்றவை பொருத்தப்பாடு அற்றவையாகிவிட்டன" எனக்கூறும் அவர், "தமிழீழத் தேசியத் தலைவர் பிரபாகரன், தன்னை ஒரு தனியாட்சிக்கான கெரில்லாப் படையின் தலைவர் என்ற நிலையிலிருந்து ஓர் இனமக்களின் வீரத்தலைவராக தன்னை மாற்றிவிட்டார்" என்கிறார். இது புகழுரையல்ல. தீர்ப்புக்கூறும் விமர்சனம். அதுமட்டுமல்ல "தமிழர்களுக்கு நியாயமானவற்றைக் கொடுக்காதுவிட்டால் நாடு பிளவுபடுவது ஒன்றே மாற்றுவழியாகும்" என அரசியல் யதார்த்தத்தினை விளக்கும் டிக்சிற், "மத அல்லது இன அடிப்படையில் ஏற்படும் ஒரு பிளவு இந்தியாவின் சொந்த நலன்களைப் பாதிப்பதாக அமையும்" எனக்கூறி தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் இந்தியாவின் நிலைப்பாட்டையும் தெளிவுபடுத்துகிறார். அத்துடன் இந்தியாவின் சொந்த நலன்களைக் கருத்திற்கொண்டு இந்தியா, புலிகளுடன் மீண்டும் நல்லுறவை ஏற்படுத்தி, சிறீலங்கா -புலிகள் பேச்சுவார்த்தைக்கு உதவ வேண்டும் என்றும் வலியுறுத்துகிறார். திரு. டிக்சிற் இந்திய நலனின் பின்னணியில் அரசியல் யதார்த்தத்தை தனது கட்டுரையில் தெளிவுபடுத்தி நடைபெற்றுவிட்ட மாற்றங்கள் குறித்து தனது கருத்துக்களை கூறியுள்ளார்.

ஆனால் சிறீலங்கா ஜனாதிபதி டி. பி. விஜயதுங்காவோ மாற்றங்களை ஏற்க மறுக்கிறார். அரசியல் யதார்த்தத்தை மறந்து கற்பனா உலகில் இரு தேசிய இனங்களுக்குமிடையில் அமைதி வாழ்வைக் குலைத்து வருகிறார். டிக்சிற்றின் விமர்சனமாவது சிறீலங்கா ஜனாதிபதியின் கண்ணைத் திறக்கப்பயன்படட்டும். புலிகள் பயங்கரவாதிகளல்ல; விடுதலைப் போராளிகள். தலைவர் பிரபாகரன் கெரில்லாத் தலைவனல்ல; ஒரு இனத்தின் வீரத்தலைவன். நியாயம் வழங்கப்படாவிடில் நாடு பிளவுபடும். இந்த அரசியல் யதார்த்தத்தை சிறீலங்கா ஜனாதிபதி உணருவாரானால் நியாயமானதும் நடைமுறைக்கேற்றதுமான மாற்றங்கள் ஏற்படும். இல்லையேல் மாற்றங்களூடாகவே மாற்றங்கள் தங்கள் யதார்த்தத்தை நிலைநிறுத்திக் கொள்வது உலக வரலாறு. ■

### சமாதான முயற்சியில் ஈடுபடும்

# கிறீஸ்தவ அமைப்புகள் மீது பௌத்த அமைப்புகள் பாய்ச்சல்

## அரசியல் தீர்வு தவறான வழி முறையாம்

இனப்பிரச்சினைக்கு சமாதான ரீதியில் அரசியல் தீர்வொன்றைக் காணும் முயற்சியில் ஈடுபட்டுள்ள கிறிஸ்தவ அமைப்புக்கள் கடும் சீற்றம் கொண்டுள்ளன. வடக்கு -கிழக்கு பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணப்படல் வேண்டும் என்ற தேவாலயங்களின் விருப்பம் முற்றிலும் பிழையானவை எனவும் அவ் அமைப்பினர் தெரிவித்துள்ளனர்.

இக்கண்டனத்தை வெளியிட்டுள்ள முக்கிய சிங்கள -பௌத்த தீவிர அடிப்படைவாத அமைப்பான சிங்கள -பௌத்த மகாசங்கத்தின் தலைவர் குணதாசா வடக்கு -கிழக்கு பிரச்சினை தீர்விற்கு ஒரே வழி யுத்தம்தான். இதை நாம் தெளிவாக உணர வேண்டும். வடக்கு -கிழக்கு பிரச்சினையை அரசியல் பேச்சுவார்த்தை மூலம் தீர்க்கப்பட வேண்டும் என்று பல்வேறு அமைப்புக்கள், தேவாலயங்கள் விரும்புகின்றன. இவர்களின் நோக்கம் முற்றிலும் பிழையானது என்றே கூறவேண்டும் எனத் தெரிவித்தார்.

யுத்தத்தினால் இப்பிரச்சினையைத் தீர்க்க முடியாது என எண்ணுபவர்கள் இந்த அரசாங்கத்தின் கீழ் இருக்கக் கூடியவர்கள் அல்ல. அவர்களை இந்த அரசாங்கம் வெளியேற்ற வேண்டும். இவர்களின் இந்த நடத்தையினால் விடுதலைப்புலிகளுக்கு எதிரான நடவடிக்கையில் ஈடுபடும் இராணுவத்தினர் உள ரீதியாக பாதிப்பு அடைந்து பல வீனம் அடைந்துள்ளனர்.

விடுதலைப்புலிகளுடன் எந்தவொரு பேச்சு வார்த்தையும் நடைபெறக் கூடாது. அவர்களை பேச்சுக்குக் கூட அழைக்கக் கூடாது. நாம் பத்து வருடங்களாக தெரிவித்து வந்த பயங்கரவாதப் பிரச்சினைதான் இது என்பதை, இன்றைய ஜனாதிபதி முழுமையாக ஏற்றுக்கொண்டுள்ளார். இது சிங்களவர்களின் நாடு என்பதை சகலரும் ஏற்றுக் கொள்ள வேண்டும் எனவும் தெரிவித்தார்.

இதேவேளை சகல பௌத்த பீடங்களையும் சேர்ந்த பௌத்த பிக்குகளும் இத்தகைய சீற்றத்தை வெளிக்காட்டியுள்ளனர். ■

# விடுதலைப் புலிகளின் வலிமை இராணுவத்திற்கு பதிலடி தரும்

□ மேர்வின் டி சில்வா

விடுதலைப் புலிகள் சிறீலங்கா இராணுவத்தினருக்கும், கடற்படையினருக்கும் பதிலடி கொடுக்கக் கூடிய வல்லமையைப் பெற்றுவிட்டதாகவும் அவர்கள் இனி சிறீலங்கா விமானப் படையை மட்டுமே சமாளிக்க வேண்டியுள்ளதாக 'லங்கா கார்டியன்' ஆசிரியரும் பிரபல அரசியல் விமர்சகருமான மேர்வின் டி சில்வா கூறியுள்ளார்.

சிறீலங்கா ஜனாதிபதி டி. பி. விஜயதுங்கா விடுதலைப்புலிகளுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்போவதாக முழக்கமிடுவதன் மூலம் சிங்கள பௌத்த மக்களின் ஆதரவைப் பெற முயல்கின்றார். இதே வேளை எதிர்க்கட்சித் தலைவி கொழும்பு தமிழ்க்குழுக்களுடன் பேச்சு வார்த்தை நடாத்தி சமாதான சூழல் ஒன்றை உருவாக்க முயல்கிறார். எனினும் இதுபோன்ற நடவடிக்கைகள் விடுதலைப் புலிகளை ஒருபோதும் திருப்திப்படுத்தப் போவதில்லை என்று அவர் மேலும் தெரிவித்தார். ■

### கொழும்பிலிருந்து வரும் சமாதான யோசனைகள்

# தமிழர்களுக்குப் பொருந்தாது ! கிறிஸ்தவ குருமார் கண்டனம் !!

கிறீஸ்தவ மதத்தின் முக்கிய பிரிவுகள் உள்ளடங்கிய றோமன் கத்தோலிக்கம், அங்கிளிக்கன், மெதடிஸ்ட் மற்றும் தென்னிந்திய திருச்சபையின் யாழ் பிரிவைச் சேர்ந்த மதகுருமார்களும் பொதுமக்களும் கலந்து கொண்ட ஒருங்கு கூடல் நிகழ்வு கடந்த பெப்ரவரி 9ம் திகதி புதன்கிழமை நடைபெற்றது. கொழும்பு அங்கிளிக்கன் திருச்சபையின் மேற்றிராணியார் அதிவணக்கத்துக்குரிய கென்னத் பெர்னாண்டோ. மெதடிஸ்த திருச்சபையின் செயலாளர் வண. கலாநிதி கிங்ஸ்லி முத்தையா ஆகியோரும் கலந்து கொண்ட இக்கூட்டத்தில் கருத்துரை வழங்கிய கிறீஸ்தவ மதத்தின் சகல பிரிவுகளையும் சேர்ந்த வடபகுதி குருமார்கள், நடந்து கொண்டிருக்கும் யுத்தத்தினை முடிவுக்குக் கொண்டு வருவதற்காக அவசரமானதும் காத்திரமானதுமான சமாதான முயற்சிகள் மேற்கொள்ளப்படவேண்டியதன் அவசியத்தினை வலியுறுத்தினர்.

றோமன் கத்தோலிக்க திருச்சபையின் யாழ் மறை மாவட்டத்தைச் சேர்ந்த பிரதம குருவான வண. பிதா எஸ். ஜே. இம்மானுவேல் பேசுகையில், வண. கென்னத் பெர்னாண்டோவின் யாழ். விஜயத்துக்கான நோக்கம் மிகவும் அவசரமானது என்று கூறியதுடன், இறுதிக்கட்ட முயற்சியாக வேறு வழியின்றி ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்களின் அபிலாசைகளையும் கவனமாகக் கேட்டறிய வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்தினார்.

தொடர்ச்சியான குண்டு வீச்சுக்களுக்கும் செல்லடிகளுக்கும் மத்தியில் வாழ்ந்து கொண்டிருக்கும் தமிழ் மக்களுக்கு கொழும்பிலிருந்து எழக்கூடிய போலித்தனமான பேச்சுவார்த்தைகள் எவ்வகையிலேனும் பொருந்தாது எனக் கூறிய வண. பிதா இம்மானுவேல் அவர்கள், இவ்வாறான முயற்சிகள் அரசாங்கம் தெற்கில் தனது நலன்களை சுமுகமாகப் பேணுவதற்கான அவகாசம் தேடும் முயற்சியே என்ற தமிழர்களின் அச்சத்தினையும் வெளிப்படுத்தினார்.

அங்கிளிக்கன் திருச்சபையைச் சேர்ந்த வண. கலாநிதி கென்றி விக்டர் பேசுகையில், போராளிகள் ஆயுதங்களை ஒப்படைக்க வேண்டுமெனக் கோரும் எந்தவொரு சமாதான முயற்சியும் தமிழ்மக்களின் நம்பிக்கையைப் பெற உதவ மாட்டாது எனச் சுட்டிக்காட்டியதுடன், அதி. மேற்றிராணியாரின் சமாதான முயற்சிகள் தமிழ் மக்களிடையே நம்பிக்கையை ஏற்படுத்த வேண்டுமாயின், அவ்வாறான ஆயுத ஒப்படைப்பு நிபந்தனைகள் கைவிடப்படவேண்டுமெனவும் வலியுறுத்தினார்.

"சாந்தி அகம்" இயக்குனர் வண. பிதா செல்வரத்தினம் பேசுகையில் கல்வி அமைப்பிலுள்ள அநீதிகள் களையப்பட வேண்டுமெனக் கேட்டுக் கொண்டார். ■

# தபால் சேவை அத்தியாவசிய சேவை இல்லையாம் !

வடபகுதிக்கான தபால் சேவையினைச் சீராக நடாத்துவதற்கான ஏற்பாடுகளை தபால் துறை உயரதிகாரிகளே மேற்கொள்ள வேண்டுமென அத்தியாவசிய சேவைகள் மேலதிக ஆணையாளரும், பாராளுமன்ற விவகார மற்றும் சுற்றாடல் பாதுகாப்பு அமைச்சின் செயலாளருமான திரு. தேவநேசன் நேசையா தெரிவித்துள்ளார். வடபகுதி மக்களுடனான - பிரதான தொடர்பு ஊடகமாக விளங்கும் தபால் போக்குவரத்து மிகவும் சீர்கேடான நிலையை அடைந்துள்ளதால் அதனைச் சீராக்குவதற்கான நடவடிக்கைகளை அவரது அமைச்சு மேற்கொள்ளுமா என பத்திரிகை நிருபர்கள் திரு. நேசையாவிடம் கேட்டபோதே அவர் இதனைத் தெரிவித்ததுடன், தமது அமைச்சு தபால் சேவையினை ஒரு அத்தியாவசிய சேவையெனக் கருதவில்லை எனவும் குறிப்பிட்டார்.

தபால்துறை அதிகாரிகளின் திறமையீனத்தினாலேயே வடபகுதிக்கான தபால் சேவை சீர்குலைந்துள்ளதெனக் கூறிய திரு. நேசையா, அதனைச் சீராக்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டிய பொறுப்பு தபால் திணைக்களத்தைச் சார்ந்ததாகும் எனவும் குறிப்பிட்டார். ■

# மனோதிடத்தைக் கைவிடாத மக்களைப் பாராட்டுகிறேன்

## வடக்கு - கிழக்கு குறித்து தொண்டமான்

யாழ்ப்பாணத்தில் போர் சூழ்நிலை நிலவுகிறது. எனினும் பாடசாலைகள், பல்கலைக்கழகம் என்பன இயங்குகின்றன. மாணவர்கள் கல்வியில் கவனம் செலுத்துகின்றனர். மலையகத்தில் அவ்வாறானதொரு சூழ்நிலை இல்லை. தேவையான வாய்ப்புக்கள் இல்லை என்பதை நான் ஒப்புக்கொள்கிறேன் என அமைச்சர் தொண்டமான் தெரிவித்தார்.

கண்டியில் பாடசாலை பரிசளிப்பு வைபவம் ஒன்றில் கலந்துகொண்டு அவர் பேசினார். பெரும்பான்மை இனம் ஒற்றுமைப்பட வேண்டும் என வலியுறுத்தப்பட்டுவரும் இன்றைய நிலையில் சிறுபான்மை இனமும் ஒன்றுபட முன்வர வேண்டும். நம் மத்தியில் சிறுபான்மை இனங்களின் எதிர்கால நலன் கருதி செயற்படாத பலர் இருக்கின்றனர். இவ்வாறான சக்திகளினால்தான் பெரும்பான்மை இனக்கட்சிகளும் சிறுபான்மை இனங்களைப் பிரித்து சின்னாபின்னப்படுத்த முன்வருகின்றன.

வடக்கு - கிழக்கில் இன்று நடப்பது என்ன? சாவுகளும் துன்பதுயரங்களுமே. எனினும் மக்கள் தமது மனோதிடத்தை கைவிடவில்லை. உறுதியாக நிலைத்து நிற்கின்றனர். அம்மக்களை நான் பாராட்டுகின்றேன்.

ஐ.தே.க.வுக்கு தேர்தல் பிரச்சாரம் செய்ய நான் அழைக்கப்பட்டேன். ஆனால் நான் இந்த அழைப்பை ஏற்றுக்கொள்ளவில்லை. வடக்கு -கிழக்கில் தமிழ் மக்களுக்கு எதிராக பிரச்சாரத்தில் ஈடுபடவோ வேறு எவருக்கும் உதவி செய்யவோ நான் விரும்பவில்லை. இதனை நான் ஒரு கொள்கையாக எடுத்துச் செயற்படுகிறேன். எனவே நான் வடக்கு -கிழக்கிற்கு தேர்தல் பிரச்சாரத்திற்கு அழைத்தும் போகவில்லை என அமைச்சர் தொண்டமான் தனது உரையில் மேலும் தெரிவித்தார். ■

# அதிவேக ரோந்துப் படகு சிறீலங்காக் கடற்படையில் இணைப்பு

சிறீலங்கா கரையோர கண்காணிப்புச் சேவைக்கு டொக்யார்ட் நிறுவனத்தால் தயாரிக்கப்பட்ட அதிவேக ரோந்துப் படகு ஒன்றை சிறீலங்காக் கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் சமரசேகராவிடம் அண்மையில் கையளிக்கப்பட்டது.

சிறீலங்கா கரையோரக் கண்காணிப்பு சேவையில் சேர்க்கப்படஇருந்த நான்கு அதிவேகப் படகுகளில் ஒன்றே மேல்குறிப்பிட்ட படகு ஆகும். இந்நான்கு அதிவேகப் படகுகளில் இரண்டு 36 கோடி ரூபா செலவில் கொழும்பு டொக்யார்ட் நிறுவனம் தயாரித்து வந்தமை குறிப்பிடத்தக்கது.

ஒப்படைக்கப்பட்ட முதலாவது அதிவேகப் படகு பிரான்ஸ் நாட்டு உதவியுடன் உருவாக்கப்பட்டது. இது தொடர்பாக டொக்யார்ட் நிறுவனத்தின் 20 அதிகாரிகள் பிரான்சில் பயிற்சி பெற்று வருகின்றனர். இத்தகைய அதிவேகப் படகுகளைத் தயாரிப்பதில் இவர்கள் பயிற்சி பெறுகின்றனர். ■

# மரநிழலில் கற்பது எப்படி? யாழ்ப்பாணத்தில் பரீட்சிப்பு

முதன்மை ஆசிரியர்களுக்கான கற்பித்தல் கற்கைநெறியொன்று அண்மையில் யாழ் கல்வித் திணைக்களத்தில் உள்ள மரநிழலின் கீழ் நடைபெற்றது.

சுமார் முப்பதிற்கு மேற்பட்ட ஆசிரியர்கள் மாமரத்தின் கீழ் இருந்து காலை 9 மணி முதல் 12 மணிவரை இக் கற்கை நெறியினைப் பயின்றுகொண்டிருந்ததை அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

பாடசாலை புறச் சூழலில் கல்வி கற்பதற்கான சூழ்நிலையை அமைத்துக் கொள்ள முடியும் என்பதைக் காட்டுவதே இதன் நோக்கம் எனத் தெரிவிக்கப்படுகிறது. ■

# கப்பல் பயணிகள் மீது கெடுபிடி

திருகோணமலைக்கும் பருத்தித்துறைக்கும் இடையில் நடைபெற்றுவரும் கப்பல் மூலம் பயணம் செய்யும் பயணிகள் மீது நீண்ட நாட்களாக சோதனை நடவடிக்கை என்ற பெயரில் பல கெடுபிடி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. காங்கேசன்துறையிலும், திருகோணமலையிலும் இவ்வாறான நடவடிக்கைகள் மேற்காள்ளப்பட்டு வருகின்றன.

இவ்வாறான படையினரின் நடவடிக்கைகளைக் கண்டித்து மகஜர் அனுப்பும் நடவடிக்கை அண்மையில் யாழ். செஞ்சிலுவைச் சங்க மாவட்ட தலைமையகத்தில் நடைபெற்றது. இதன்போது தயாரிக்கப்பட்ட மகஜர் அரச அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர் மூலம் பாதுகாப்பு அமைச்சின் உயர் அதிகாரிகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டது. ■

# இராணுவ முகாமிற்கு அருகிலுள்ள விவசாயிகளுக்கே உரம் கிடைக்கும்

## — கிழக்கு மாகாண இணைப்பதிகாரி

மட்டக்களப்பு மாவட்டத்தில் இராணுவ முகாம்களுக்கு ஒன்றரை மைல் சுற்றளவுள்ள வயல்களுக்கு மட்டுமே யூரியா விசிற அனுமதி கொடுக்கப்படும் என கிழக்கு மாகாண இணைப்பதிகாரி ரோகான் குணவர்த்தனா அறிவித்துள்ளார்.

இதேசமயம் படுவான்கரைப் பிரதேசத்தில் ஒரு வீட்டில் ஐம்பது மூடைகளுக்கு மேல் நெல் வைத்திருக்க முடியாது. இதற்கும் பிரிகேடியரின் அனுமதி பெற்றிருக்க வேண்டும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. வயல்களில் தங்கியிருப்போர், வேலை செய்வோர் பற்றி அருகிலுள்ள இராணுவ முகாம்களில் பதிவு செய்ய வேண்டும் எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அறுவடை செய்துகொண்டு வரும் நெல் ஏக்கருக்கு முப்பது மூடைகளுக்கு மேல் கொண்டுவர முடியாது. அதுவும் இராணுவ முகாம்களில் இவற்றின் எண்ணிக்கை காட்டப்பட வேண்டும். உரியவரின் காணியில் அவரே பயிரிட வேண்டும். வேறு எவரும் பயிரிட்டால் கைது செய்யப்படுவர் எனவும் நெல் ஆலை உரிமையாளர் பிரிகேடியரிடம் பதிவு செய்ய வேண்டும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. ■

# கசிப்பு வைத்திருந்தவருக்கு 70000 ரூபா அபராதம்

அல்வாய் மேற்கைச் சேர்ந்த ஒருவர் கசிப்பு வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் பருத்தித்துறை காவல்துறையினரால் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டார்.

இவர் 5 போத்தல் நிறமூட்டப்படாத கசிப்பும், 2 போத்தல் நிறமூட்டிய கசிப்பும் வைத்திருந்தமைக்காக நீதிமன்றம் 70 ஆயிரம் ரூபா குற்றப்பணமாக செலுத்துமாறு கட்டளையிட்டது.

குற்றத்தை ஒப்புக்கொண்ட இந்நபர் பணத்தையும் உடனே நீதிமன்றத்தில் செலுத்தினார். ■

# விடுதலைப் புலிகள் பிரதிநிதிகள் இந்து குருமார்கள் சந்திப்பு

இந்து குருமார் ஒன்றியத்தைச் சேர்ந்த இந்து குருமார்களை அண்மையில் விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகள் சந்தித்தனர். இச்சந்திப்பு ஒருமணி நேரம்வரை நீடித்தது.

இச்சந்திப்பில் சமாதானப் பேச்சுவார்த்தை தொடர்பான புலிகளின் நிலைப்பாடு குறித்து தெளிவுபடுத்தப்பட்டது. இந்த இந்து மதகுருமார் ஒன்றியம் தென்னிலங்கை சென்று அங்குள்ள மதத்தலைவர்களுக்கு தமிழீழ நிலை குறித்து எடுத்து விளக்கவுள்ளனர்.

இந்த மதகுருமார்களுடனான சந்திப்பில் விடுதலைப் புலிகள் சார்பில் விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம், தமிழீழ அரசியல்துறை துணைப்பொறுப்பாளர் கரிகாலன் ஆகியோர் கலந்துகொண்டனர். ■

# புலிகளின் பாதுகாப்பு பகுதியில் நிவாரணத் தொகை வழங்கத் தடை

வடக்கிலிருந்து தென்னிந்தியா சென்று தற்போது அங்குள்ள அகதி முகாம்களில் தங்கியுள்ள அகதிகளில் தாயகம் திரும்ப விரும்பும் அகதிகளின் விபரங்கள் மீண்டும் திரட்டப்படுவதாக 'ரேப்பியா' அமைப்பின் ஆணையாளர் திலக்சந்திரசேகர தெரிவித்தார்.

இதேவேளை தாயகம் திரும்பிய அகதிகளில் புலிகளின் கட்டுப்பாட்டினுள் உள்ள மன்னார் பகுதியில் மீண்டும் குடியேற விரும்பும் அகதிகளுக்கு மீள் குடியேற்ற நிவாரணத்தொகை வழங்கவேண்டாம் என பாதுகாப்பு அமைச்சு புனர்வாழ்வு அமைச்சிற்குப் பணித்துள்ளது. புலிகளின் கட்டுப்பாட்டிற்குள் உள்ள பகுதியில் மீளக்குடியேறி வருபவர்களுக்கு 1000 ரூபா மட்டுமே வழங்கப்பட்டு வருகிறது. ■

### 1992 இல் மட்டக்களப்பில் கைது

# நியூ மகசீன், களுத்துறை சிறைகளில் 640 தமிழ் இளைஞர்கள் தவிப்பு

மட்டு மாவட்டத்தில் 1992 இல் சிறீலங்காப் படையினரால் கைது செய்யப்பட்டு சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள பொதுமக்களின் விபரங்கள் அண்மையில் வெளியிடப்பட்டுள்ளன.

இவ்வாறு கைது செய்யப்பட்டு நியூமகசீன், களுத்துறை சிறைச்சாலைகளில் மட்டும் 640 பேர் தடுத்து வைக்கப்பட்டுள்ளளர். மட்டு மாவட்டத்தில் 08-01-1992 முதல் 31-11-1992 வரை கைது செய்யப்பட்ட 308 பேர் களுத்துறை சிறைச்சாலையிலும், 07-01-1992 முதல் 01-12-1992 வரை கைது செய்யப்பட்ட 322 பேர் நியூமகசீன் சிறைச்சாலையிலும் தடுத்து வைக்கப்பட்டிருப்பதாகச் சாமாதானக்குழுவின் செயலாளர் செழியன் பேரின்பநாயகம் தெரிவித்துள்ளார். ■

# புறக்கோட்டைப் பகுதியில் 45 தமிழ் இளைஞர்கள் கைது

கொழும்பு புறக்கோட்டைப் பகுதியில் உள்ள வர்த்தக மையமொன்றிலிருந்து 45 தமிழ் இளைஞர்கள் கொழும்பு குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

'பீப்பிள்ஸ் பார்க்' எனும் வர்த்தக மையமொன்றை சுற்றிவளைத்த பொலிசார் இவர்களைக் கைது செய்தனர். இப்பகுதி சுற்றிவளைக்கப்பட்டபோது சிலர் தப்பியோடிவிட்டதாகவும், கைதானவர்களில் விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் இருக்கலாம் எனவும் பொலிசார் தெரிவித்தனர். ஆயினும் இவர்களில் அநேகர் கடைச் சிப்பந்திகள் எனத் தெரிகிறது. ■

# அபாயகரமான மருந்துப் பொருட்கள் இலங்கைக்கு இறக்குமதி

தடைசெய்யப்பட்ட மற்றும் அபாயகரமான மருந்துப் பொருட்கள் சில வெளிநாட்டு நிறுவனங்களின் உதவியுடன் கொழும்புத் துறைமுகத்தினூடாக நாட்டினுள் நுழைந்துள்ளதை சிறீலங்கா புலனாய்வுத்துறையினர் கண்டறிந்துள்ளதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

வெளிநாட்டு பதிவின் கீழ் கண் மருந்து உட்பட 20க்கும் மேற்பட்ட வகையிலான மருந்துகள் இவ்வாறு இறக்குமதி செய்யப்பட்டுள்ளன. ஏனைய நாடுகளில் பாவனைக்கு உதவாதவை என நிராகரிக்கப்பட்ட பல்வேறு மருந்துப் பொருட்களை இறக்குமதி செய்ய வெளிநாட்டு நிறுவனங்கள் உள்ளூரில் உள்ள சில நிறுவனங்களை அணுகியதாக விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளது.

இதே சமயம் சர்வதேசப் பொலிசார் கொங்கொங்கிலுள்ள போலி மருந்து தயாரிப்பு இடத்தை கண்டுபிடித்துள்ளனர். இந்நிறுவனத்தின் பெயர் கொண்ட ஒரு தனி அறை மட்டுமே இருந்ததாகவும், பெரிய நிறுவனக் கட்டிடம் எதுவும் அங்கு காணப்படவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

போலியான மருந்துகள் கண்டுபிடிக்கப்பட்டதையடுத்து மருந்தகங்களிலும், தனியார் வைத்திய சாலைகளிலும் உள்ள சந்தேகத்திற்கு இடமான மருந்துகளை நீக்கிவிடுமாறு சுகாதார அமைச்சு பணித்துள்ளது. ■

# "ராக்கிங்" புரிந்தோருக்கு எதிராக நடவடிக்கை

புதிதாக அனுமதிக்கப்பட்ட பல்கலைக் கழக மாணவர்கள் மீது துன்புறுத்தலில் ஈடுபட்ட யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் மீது துணைவேந்தர் நடவடிக்கை எடுத்துள்ளார்.

அவர் துன்புறுத்தலில் ஈடுபட்ட மாணவர்களுக்கு அனுப்பியுள்ள கடிதத்தில், மேற்படி செயலானது பல்கலைக்கழக சட்ட விதிகளுக்கு முரணானது என்று சுட்டிக் காட்டியுள்ளதுடன் இதற்கு தண்டனையாக அவர்களுக்கு வழங்கப்படும் உதவிப் பணத்திலிருந்து ஆயிரம் ரூபா குற்றமாக அறவிடப்படுமென தெரிவித்துள்ளார். எதிர்காலத்தில் இவ்வாறு நடந்துகொண்டால் பல்கலைக்கழகப் பதிவு இரத்துச் செய்யப்படுமெனவும் உபவேந்தர் மாணவர்களை எச்சரிக்கை செய்துள்ளார்.

சுமார் பதினெட்டு மாணவர்கள் இவ்வாறு எச்சரிக்கப்பட்டுள்ளனர் எனத் தெரியவருகிறது. ■

# 7 கோடி 50 இலட்சம் காப்புறுதி ஒதுக்கிடு

பூநகரித் தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களுக்காக சிறீலங்காக் காப்புறுதிக் கூட்டுத் தாபனம் 7 கோடியே 50 இலட்சம் ரூபாவை ஒதுக்கியுள்ளது. கூட்டுத்தாபனத் தலைவர் நிகழ்ச்சி ஒன்றில் பேசும்போது இதைக் கூறியுள்ளார். ■

# மக்களுக்கெதிரான சமூகக் குற்றங்கள் பெருமளவு ஒழிக்கப்பட்டுள்ளன

## ■ தமிழீழ காவல்துறைப் பொறுப்பாளர் அறிக்கை ■

தமிழீழ காவல்துறை உருவாக்கம் பெற்று கடந்த இரண்டு வருடகாலத்தில் மக்களுக்குப் பெரும்சவாலாக இருந்த பல சமூகக் குற்றங்களை மக்களின் ஒத்துழைப்புடன் வெகுவாகக் குறைத்துள்ளதாக தமிழீழ காவல்துறையின் அறிக்கை யொன்று கூறுகிறது.

இதுதொடர்பாக காவல்துறைப் பொறுப்பாளர் திரு. நடேசன் விடுத்துள்ள அறிக்கையின் முழுவிபரமும் வருமாறு:

தமிழீழ காவல்துறை உருவாக்கம் பெற்று கடந்த இரண்டு வருட காலத்தில் யாழ் குடாநாட்டில் ஒன்பது காவல் பணிமனைக ளும், நான்கு விசேட பிரிவுக ளும், வன்னிப் பிராந்தியத்தில் நான்கு காவல்பணிமனைகளும் திறக்கப்பட்டு தமது பணியை மேற்கொண்டு வருகின்றன.

போர்க்கால சூழ்நிலையில் சிங் கள அரசின் பொருளாதாரத் தடை, இராணுவ நடவடிக்கை களுக்கு மத்தியில் ஏற்படும் பல் வேறுபட்ட சமூகப்பிரச்சினைகள் ஆகியவற்றை முறியடித்து சமா தானமும், சமூக நீதியும் கொண்ட ஓர் உன்னத சமுதாயத் தைக் கட்டியெழுப்பும் பணியில் தமிழீழ காவல்துறை செயற்பட்டு வருகின்றது. இப்போர்க்கால சூழ்நிலையில் இவ்வாறு நாம் செயற்படும்போது, நாமும் எமது மக்களும் பலவிதமான சோத னைகளுக்கு முகம் கொடுக்கின் றோம். இச்சோதனைகளுக்கு மத்தியில் செயற்பட்டு, எமது மக் களுக்கு பெரும் சவாலாக இருந்த பல சமூகக் குற்றங் களை பெரியளவில் வெற்றிகர மாகக் குறைத்துள்ளோம். விடு தலைக்காகப் போராடும் எமது மக்களின் நலனுக்காக உருவாக் கப்பட்ட தமிழீழ காவல்துறை யின் கடந்த இரண்டு வருட செயற்பாட்டினை புள்ளிவிபர அடிப்படையில் எமது மக்களுக்கு அறியத்தருவதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

1992, 1993 ஆகிய ஆண்டுகளை மையமாக வைத்து இப்புள்ளி விபரம் தரப்படுகிறது. குற்றச் செயல்களில் பாரிய குற்றங்கள் எனக் கருதப்படும் குற்றங்கள் பற்றிய முறைப்பாடு யாழ் குடா நாட்டில் 1992 ஆம் ஆண்டில் 5242 குற்றங்களும், 1993 ஆம் ஆண்டில் 1832 குற்றங்களும் பதிவு செய்யப்பட்டுள்ளன. இப் பாரிய குற்றங்கள் 1992 ஆம் ஆண்டிலும் பார்க்க 1993 ஆம் ஆண்டு 3410 ஆல் வீழ்ச்சிய டைந்துள்ளது என்பது குறிப்பிடத் தக்கது.

பெண்களுக்கெதிரான குற்றச்செ யல்கள் 1992 ஆம் ஆண்டில் 13-97 ம், 1993 ஆம் ஆண்டில் 157 ம் பதிவாகியுள்ளன. இப்புள்ளி விபரக் கணிப்பீட்டின்படி பெண் களுக்கெதிரான குற்றச்செயல்கள் 1992 ம் ஆண்டிலும் பார்க்க 1993 ஆம் ஆண்டில் 1240 ஆல் வீழ்ச்சி கண்டுள்ளது.

வீதி விபத்து சம்பந்தமாக 1992 ஆம் ஆண்டில் 25 பேர் சாவைத் தழுவிக் கொண்டுள்ளனர். 1993 ஆம் ஆண்டில் 196 வாகன விபத்துக்கள் பதிவாகி 14 பேர் சாவைத் தழுவிக் கொண்டனர் கள். 1992 ம் ஆண்டிலும் பார்க்க 1993 ஆம் ஆண்டில் வாகன விபத்துக்கள் 98 ஆல் வீழ்ச்சி யடைந்துள்ளன. சாவைத் தழு விக் கொண்டவர்களின் எண் ணிக்கையும் 11 ஆல் வீழ்ச்சிய டைந்துள்ளது.

இப்போர்க்கால சூழ்நிலையிலும் இவ்வாறு குற்றச்செயல்கள் பாரியளவில் வீழ்ச்சியடைந்ததற் குக் காரணம், எமது மக்கள் தமிழீழ காவல்துறைக்கு அளித்த ஒத்துழைப்பும், பங்களிப்புமே யாகும் என்பதை இச் சந்தர்ப்பத் தில் சுட்டிக்காட்ட விரும்புகி றேன். ■

# சமாதானத்தின் பாதை கடினமானது

❑ கென்னத் பெர்னாண்டோ

"சமாதானத்துக்கான பாதை மிகவும் நீண்டதும் கடினமானது மாகத் தென்படுகிறது. இத்த கைய சிக்கலான பாதைகளினூ டாக சமாதானத்தை அடைவ தற்கு நாம் அனைவரும் சேர்ந்து உழைக்க வேண்டும்." இவ்வாறு வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் வருடாந்த பரிச ளிப்பு வைபவத்தின்போது கலந் துகொண்டு உரையாற்றிய ஆங் கிலத் திருச்சபை ஆயர். வண.- கென்னத் பெர்னாண்டோ தெரி வித்தார்.

அவர் தொடர்ந்து பேசுகையில், "நான் இம்முறை யாழ்ப்பாணம் வந்தபோது எனக்கு சகல பிரி வினரிடமிருந்தும் வரவேற்புக் கிடைத்தது. என்னைச் சந்தித்த பலரும் இந்த துன்ப துயரங்களி லிருந்து விடுதலை எப்போது எமக்குக் கிடைக்கும் என்று கேட் டனர். தமிழ் மக்கள் சுதந்திர உணர்வு மிக்கவர்களாகக் காணப்படுகின்றனர். மக்களின் சுதந்திர உணர்வு மொழி ரீதியா கவும் கலை, கலாச்சார ரீதியா கவும் கட்டி வளர்க்கப்பட வேண் டும்" என்றார்.

இவ்விழாவில் கல்லூரி அதிப ரின் உரையுடன் பல கலை நிகழ்ச்சிகளும் நடைபெற்றன. ■

# மன்னார் தீவில் தீவிர தேடுதல் மக்கள் மத்தியில் பதற்றம்

சிறீலங்கா இராணுவத்தினர் மன்னார் தீவுப்பகுதியில் மேற் கொண்டுவரும் சோதனை நட வடிக்கைகளின் விளைவாக அப் பகுதியில் பெரும் பதற்ற நிலை தோன்றியுள்ளது.

இராணுவத்தினரின் சோதனை நடவடிக்கைகள் தொடர்ந்தும் நடைபெற்று வருவதால் அங்கு தோன்றிய பதற்றநிலையும் தொடர்ந்து நீடித்துவருகிறது. இவ்வாறு நீண்டநாட்களாக நீடிக்கும் பதற்றநிலை காரண மாக அதிகம் பாதிக்கப்பட்ட முஸ்லீம்கள் ஏற்கனவே அப்பகு தியை விட்டு வெளியேறிவிட்ட னர் என்றும் தொடர்ந்தும் பலர் இவ்வாறு வெளியேறி வருவதா கவும் மன்னார் தீவில் இருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக் கின்றன. ■

# பேச்சு வார்த்தைகளால் யுத்தம் முடிவுக்கு வராது

❑ அஸ்கிரிய பீடாதிபதி

"சிங்கள, முஸ்லீம் மக்கள் பெரும்பாலானோர் இன்று அகதி முகாம்களில் வாழவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. தமிழ் மக் கள் யாழ்ப்பாணத்திலும் நாட்டின் ஏனைய பகுதிகளிலும் பரந்து வாழ்கின்றனர். ஆனால் 24 ஆயிரம் சிங்களவர் முன்னர் வசித்த யாழ்ப்பாணத்தில் இன்று ஒரு சிங்களவர் கூட இல்லை. தமிழ் மாணவர்கள் இலங்கை யின் எல்லாப் பல்கலைக் கழகங் களிலும் கல்வி கற்கின்றனர். ஆனால் சிங்கள மாணவர்கள் யாழ். பல்கலைக் கழகத்தில் கற் கும் நிலை இல்லை."

இவ்வாறு அஸ்கிரிய பீடாதிபதி பலிப்பான சிறிசந்தானந்த தேரோ விமானப்படையின் புதிய தளபதிக்கு ஆசீர்வதித்துப் பேசுகையில் தெரிவித்தார். அவர் தொடர்ந்து பேசுகையில்,

"இந்த யுத்தத்தினை பேச்சு வார்த்தைகள் மூலம் தீர்க்க முடியாதென்பதை கடந்தகால அனுபவங்கள் உணர்த்துகின்றன. ஆகவே பேச்சு வார்த்தைகளி னால் எவ்வித பலனுமில்லை. பேச்சு வார்த்தை அவசியமாயின் முதலில் விடுதலைப் புலிகள் ஆயுதங்களை கீழே வைக்க வேண்டும் என்றார். ■

# பேராசிரியர் துரைராசா பெயரில் தங்கப்பதக்கம்

பேராசிரியர் அ. துரைராசா அவர்களின் பெயரில் யாழ். பல் கலைக் கழகத்தின் திறமையான மாணவர்களுக்கு தங்கப்பதக்கம் வழங்கும் திட்டம் ஒன்று அறிமு கப்படுத்தப்பட்டுள்ளது.

உயர் கல்வியில் ஈடுபடும் மாணவர்களை ஊக்கப்படுத்தும் முகமாக மேற்படி திட்டம் உரு வாக்கப்பட்டுள்ளது. இப்பல்க லைக்கழகத்தில் கல்வி பயிலும் மாணவர்களுக்கு திறமை அடிப் படையில் இத்தங்கப்பதக்கம் வழங்கப்பட உள்ளது.

வருடாவருடம் வழங்கப்படவிருக் கும் இத் தங்கப்பதக்கம் வழங் கும் திட்டத்தை நடைமுறைப் படுத்துவதற்கு வசதியாக நிதியம் ஒன்று உருவாக்கப்பட்டு வருகி றது. இந்த நிதியத்துக்கு ஏற்க னவே பலர் தமது அன்பளிப்புக் களை வழங்கியுள்ளனர். ■

# சிங்களவரை ஒன்றுபடச் சொல்வது ஈழவாதத்தை நியாயப்படுத்தும்

❑ வாசுதேவ நாணயக்கார கூறுகிறார்

"பெரும்பான்மையினர் ஒன் றுபட வேண்டும் எனக்கூறி சிறுபான்மையினரைப் பிரித்துப் பார்க்கும்போது ஈழவாதம் நியா யப்படுத்தப்படுகின்றது" என வாசுதேவ நாணயக்கார சிறீலங் காப் பாராளுமன்றத்தில் தெரி வித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்; படையினரை தேர்தலில் பயன் படுத்துவது நல்லதல்ல. படை யினர் முகாமில் இருக்க வேண் டியவர்கள். தேர்தல் நடத்தும் பொறுப்பு படையினரிடம் இருக் கக் கூடாது. பேரினவாதம் பற்றி இன்று பேசுபவர்கள் தமது பேரினத்தவர்களையே ஜே.- வி.பி. காலங்களில் ஆயிரக்க ணக்கில் கொன்றவர்கள் எனவும் வாசுதேவ நாணயக்கார தெரி வித்தார். ■

# மாவீரர்கள் நினைவாக அடம்பனில் நிகழ்வுகள்

1984ம் ஆண்டு முதல் 1993 ஆம் ஆண்டுவரை முதலாம் இரண்டாம் மாதங்களில் சிறீ லங்கா, இந்திய இராணுவங்க ளுடன் போராடி வீரச்சாவைத் தழுவிக் கொண்ட மாவீரர்களை நினைவு கூரும் நிகழ்வுகள் அடம்பன் வட்டக்கண்டலில் இடம்பெற்றது. இந்நிகழ்வின் போது காலை 8 மணியளவில் உதைபந்தாட்டம், கரப்பந்தாட் டம், வலைப்பந்தாட்டம் ஆகிய மூன்று விளையாட்டுக்களும் இடம்பெற்றன. இந்நிகழ்ச்சியின் போது மங்கள விளக்கை அரசி யல்துறைத் துணைப்பொறுப்பா ளர் ஏற்றிவைக்க தமிழீழத் தேசியக்கொடியை மன்னார் மாவட்டச் சிறப்புத் தளபதி திரு. செபமாலை அவர்கள் ஏற் றிவைத்தார். தொடர்ந்து முத லாவது உதைபந்தாட்ட நிகழ் வையும் ஆரம்பித்து வைத்தார்.

இவ்விளையாட்டுப் போட்டிக ளில் உதைபந்தாட்டக், கரப்பந் தாட்டப் போட்டிகளில் முதலா வது இடத்தை நாவாந்துறை சென்மேரின் விளையாட்டுக் கழகம் பெற்றது. வலைப்பந்தாட் டப் போட்டியில் மன்னார் கருங் கண்டல் றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை மாணவிகள் முதலாவது இடத் தைப் பெற்றனர். தொடர்ந்து இரவு 7மணிக்கு நினைவு தினக் கூட்டம் இடம்பெற்றது. இந்நிகழ் வின்போது பிரதான ஈகைச் சுடரை சிறப்புத் தளபதி செப மாலை அவர்களும், தளபதி லக்ஸ்மன் அவர்களும் ஏற்றி வைத்தனர். தொடர்ந்து 1ம், 2ம் மாதங்களில் வீரச்சாவ டைந்த மாவீரர்களின் பெயர்ப் பட் டியல் வாசிக்கப்பட்டது. பின்னர் மாவீரர்களின் உருவப்படங்களுக் குப் பெற்றோரால் ஈகைச் சுடர் ஏற்றிவைக்கப்பட்டது. தொடர்ந்து அடம்பன், நானாட்டான் வட்ட இணைப்பாளர் திரு. அல்வின் தலைமையில் கூட்டம் ஆரம்ப மானது. இக்கூட்டத்தில் கடற்பு லிகளின் பள்ளமடு வட்ட அரசி யல்துறைப் பொறுப்பாளர் காங் கேயன், மாணவர் அமைப்புத் துணைப்பொறுப்பாளர் திரு. ரவி ராஜ், மன்னார் மாவட்ட அரசி யல்துறை துணைப்பொறுப்பாளர் திரு. நந்தகுமார், மன்னார் மாவட்டத் தளபதி திரு. லக்ஸ் மன் ஆகியோர் உரை நிகழ்த் தினர். இதில் அரசியல்துறை துணைப்பொறுப்பாளர் உரையாற் றுகையில், இன்றைய காலகட் டத்தில் ஒவ்வொரு தமிழனும் களத்திலே நின்று போராட வேண்டியவர்களாக இருக்கின் றோம். எதிரியானவன் எமது மண்ணில் ஒரு பாரிய யுத்தத்தை நடாத்துவதற்கு தயாராகிக் கொண்டிருக்கிறான். இந்த நேரத்தில் எதிரியோடு போரா டுவதற்கு நாம் எம்மைத் தயா ராக்கிக் கொள்ள வேண்டும் எனக் கூறினார். தளபதி உரை யாற்றுகையில், உலகமே வியக் கும் ஒரு புனிதமான தலை வனை நாம் பெற்றிருக்கிறோம். இத்தலைவனுடைய காலத்தில் நாம் தேசத்தை மீட்டெடுக்க வேண்டுமென்றார். தொடர்ந்து பரிசளிப்பு வைபவம் நடைபெற் றது. பின் கலைநிகழ்ச்சிகளும், ஒப்பரேசன் தவளை, 12ம் மாத ஒளிவீச்சு ஆகிய இரண்டு வீடி யோப் படங்களும் காண்பிக்கப் பட்டன. ■

### கப்பல் கட்டணத்தினால் மாவின் விலை அதிகரிப்பு

சிறீலங்கா அத்தியாவசிய சேவைகள் ஆணையாளரினால் யாழ். அரச அதிபருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள அறிவித்தல் ஒன்றில், நிவாரண உணவுப் பொருட்களைத் தவிர்ந்த ஏனைய உணவுப் பொருட்களை கப்பல் மூலம் அனுப்பி வைப்ப தற்கான கட்டணத்தை அரச அதிபரே பொறுப்பேற்ற வேண் டும் என அறிவித்துள்ளார். இதனால் கப்பல் கட்டணத்தை பெறும் பொருட்டு கப்பலில் கொண்டுவரப்பட்ட மாவின் விலை கிலோவுக்கு 4 ரூபா அதிகரித்துள்ளது. ■

# யாழ். மாவட்ட தபால்களை அனுப்பி வைக்க குழு

கொழும்பிலிருந்து வெளி நாட்டு, உள்நாட்டு தபால்களை யாழ் மாவட்டத்திற்கு அனுப்பி வைப்பதற்கான நடவடிக்கையில் ஈடுபட விசேட குழு ஒன்று ஏற் படுத்தப்பட உள்ளது. இக்குழு விற்கு தலைவராக அஞ்சல் மாஅதிபர் டி. திசநாயகம் இருப் பார் என வடமாகாண அஞ்சல் அதிபர் நாயகம் எம். சேதுகாவ லர் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தகவல்தருகை யில், கொழும்பிலிருந்து யாழ் வரும் ஒவ்வொரு உணவுக் கப் பலிலும் தபால் பொதிகள் அனுப்பி வைக்கப்படும் என உறுதியளிக் கப்பட்டுள்ளதாகவும், அதே போல் யாழ்ப்பாணத்திலிருந்து புறப்படும் ஒவ்வொரு கப்பலிலும் தபால் பொதிகள் அனுப்பி வைக் கப்படுமெனவும் தெரிவித்தார்.

கொழும்பில் பாதுகாப்பு அமைச் சின் செயலாளர் கமில்டன் வன சிங்கா, தபால் தந்தி அமைச் சின் செயலாளர் அசோக குண வர்த்தனா, அஞ்சல் மாஅதிபர் டி. திசநாயகம் ஆகியோரைச் சந் தித்துப் பேசியபோதே இவ்வாறு உறுதியளிக்கப்பட்டிருப்பதாக அவர் மேலும் கூறினார். ■

### முன்னாள் அமைச்சர் வீட்டில் பொலிஸ் நிலையம்

மட்டக்களப்பு மாவட்டத்தில் புதிய சோதனை நிலையம் ஒன்றை சிறீலங்காப் படையினர் திறந்துவைத்துள்ளனர். செங்கல டியில் முன்னாள் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் தேவ நாயகம் வீட்டில் புதிதாக ஒரு பொலிஸ் சோதனை நிலையம் திறக்கப்பட்டுள்ளது.

# போரும் சமாதானமும்


நீண்ட காலமாகவே தமிழீழத்தின் சமாதானக் கதவுகள் திறந்து வைக்கப்பட்டிருக்கின்றன. சமாதானத் தூதுவர்கள் எவராக இருப்பினும், எந்த நேரத்திலும், எந்தச் சூழ்நிலையிலும் இங்கு வந்து செல்ல வாய்ப்பளிக்கும் வகையில் அமைதியின் பாதையை அகலத் திறந்து விட்டிருக்கிறார் தலைவர் பிரபாகரன்.

இந்தச் சமாதானக் கதவுகளினூடாக பலர் பல தடவைகள் இங்கு வந்து சென்றிருக்கிறார்கள்; புலிகளின் சமாதானச் செய்தியை தென்னிலங்கைக்குக் கொண்டு சென்றிருக்கிறார்கள். ஆனால், சிங்கள தேசம் இது வரை சமாதானத்தின் கதவுகளைத் திறந்துவிட மறுத்து வருகிறது; சண்டையை நிறுத்தி, சமாதானச் சூழ்நிலையை உருவாக்க பின்னடித்து வருகிறது.

புலிகளின் சமாதானக் கதவுகளூடாக முதன் முதலாக நுழைந்தது நோர்வே அரசாங்கமாகும். 1990 ஆம் ஆண்டின் இறுதிப் பகுதியில், நோர்வே வெளிவிவகார அமைச்சைச் சேர்ந்த ஒரு உயர் அதிகாரி யாழ்ப்பாணம் வந்தார்; எம்முடன் பேச்சுக்களை நடத்தினார்; சர்வதேச சமூகம் சமாதானப் பேச்சுக்களை விரும்புவதாகக் கூறினார். நோர்வே மத்தியத்துவம் வகிக்க விரும்புகிறது; நோர்வேயின் தலைநகரான ஒஸ்லோவில் பேச்சுக்களை ஒழுங்கு செய்யலாம்;

வந்தவர்கள்திரும்பிவிட்டார்கள்.அவர்கள்புதிதாகஎதையும்கொண்டுவரவுமில்லை புதிதாக எதையும் கொண்டுசெல்லவுமில்லை. தமிழ்மக்கள் சமாதானத்தை விரும்புகின்றார்கள்,புலிகளும் சமாதானத்தையே விரும்புகின்றார்கள். இந்தப்பழைய செய்தியைத்தான் கொண்டுசென்றுள்ளார்கள். கொழும்பிலுள்ள அரசியற் செவிடர்களுக்கு இங்கிருந்து எத்தனை தடவைகள் சங்கை ஊதினாலும் கேட்கவா போகின்றது?

சமாதானப் பேச்சுக்களுக்கு முதற்படியாக இரு தரப்பினரும் போர் நிறுத்தம் செய்ய வேண்டும் என வலியுறுத்தினார். நாம் அதற்கு இணக்கம் தெரிவித்தோம். "உண்மையில் நீங்கள் சமாதானத்தை விரும்புவதாக உலகத்திற்கு நிருபித்துக் காட்ட வேண்டும் என்றால், நீங்கள் தான் முதலில் போர் நிறுத்தம் செய்ய வேண்டும். ஒருதலைப் பட்சமாகப் பிரகடனப்படுத்த வேண்டும். நீங்கள் அப்படிச் செய்தால், சிறிலங்கா அரசு மீது நாம் அழுத்தத்தைப் பிரயோ-



கித்து அவர்களையும் போர் நிறுத்தத்திற்கு இணங்க வைக்கலாம்" என்றார். நாம் அதற்கும் இணக்கம் தெரிவித்தோம்.

1991 ஆம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதியிலிருந்து போர் நிறுத்தம் கடைப்பிடிப்பதாக, விடுதலைப் புலிகள் இயக்கம் ஒருதலைப்பட்சமாக அறிவித்தது. ஆனால் சிங்கள அரசு போர் நிறுத்தத்தை நிராகரித்தது; யுத்தத்தை மேலும் தீவிரமாகத் தொடர்ந்தது. ஒன்றும் தெரியாததுபோல நோர்வே அரசாங்கம் மௌனம் சாதித்தது. அந்த ஆண்டு மேற்குலகம் அதிகப்படியான உதவியை சிறிலங்காவுக்கு வாரி வழங்கியது.

அடுத்ததாக புலிகளின் சமாதானக் கதவுகளூடாக குவேக்கர்ஸ் நல்லெண்ணக்குழு பிரவேசித்தது. பல தடவைகள் வந்து சென்றது. பிரிட்டனின் ஆசியுடன் இலண்டனில் பேச்சுக்களை நடத்தலாம் என்று சொன்னது. கிட்டுவுடன் சேர்ந்து ஒரு விரிவான சமாதானத் திட்டத்தைத் தயாரிப்பதாகக் கூறியது. உபகண்டம் ஊடாக போக்குவரத்துச் செய்ய இந்தியாவும் இணங்குவதாகத் தெரிவித்தது. எல்லாவகையிலும் ஒத்துழைப்பு வழங்க நாமும் ஒப்புதல் கொடுத்தோம். இறுதியில் என்ன நடந்தது? குவேக்கர்சின் சமாதான முயற்சி, முடிவில் கிட்டுவின் உயிரை அநியாயமாகப் பலிகொண்டது. இந்தத் துயரமான கதைபற்றி நாம் ஏற்கனவே விளக்கியிருக்கிறோம். வங்கக் கடலில் வைத்து புலிகளின் சமாதானப்படகு இந்தியாவால் மூழ்கடிக்கப்பட்டபோது, பிரிட்டனோ அல்லது மேற்குலகமோ வாய் திறக்கவில்லை, சமாதானத்தூதுவனாகவே கிட்டு தமிழீழம் நோக்கி பயணம் செய்தார் என குவேக்கர் நிறுவனம் வெளியிட்ட ஆட்சேப அறிக்கையையும் உலகம் இருட்டிப்புச் செய்தது.

இது ஒருபுறம் இருக்க, 1992 ஆம் ஆண்டு ஏப்ரில் 22ம் திகதி பௌத்த பிக்குகள் அடங்கிய சமாதானக்குழு ஒன்று யாழ்ப்பாணம் வந்தது. இக்குழுவுக்கு அமரபுர பௌத்த பீடத்தைச் சேர்ந்த வண. சித்தாதிய மகா நாயக்க தேரர் தலைமை வகித்தார். இவர்கள் புலிகளின் பாதுகாப்புடன் யாழ். குடாநாடு முழுவதும் சுற்றிப் பார்த்தனர். தமிழ் மக்களின் அபிலாசைகளைக் கேட்டறிந்தனர். யுத்த அநர்த்தங்களைக் கண்டறிந்தனர். மக்களின் அவல நிலையைக் கண்டு அதிர்ந்து போன இவர்கள், 'போருக்கு முடிவு கட்டி சமாதானச் சூழலை உருவாக்க தம்மாலான முயற்சிகளைச் செய்வோம்' என வாக்குறுதிகளை அளித்தனர். இந்தப் பௌத்த சமாதானக்குழுவினர் சில யோசனைகள் அடங்கிய திட்டத்தோடு வந்திருந்தனர். இத்திட்டத்தில் தமிழர் தாயகக் கோட்பாடு நிராகரிக்கப்பட்டிருந்தது. நாம் இவர்களைச் சந்தித்துப் பேசினோம். எந்தத் தீர்வுக்கும் 'தமிழர் தாயகம்' அடிப்படையானது என வலியுறுத்தினோம். பேச்சுக்களுக்கு சமாதானச் சூழலை உருவாக்கப்படுவது அவசியம் என எடுத்துரைத்தோம். சிங்கள அரசியல் தலைமையுடன் பேச்சுக்களை நடாத்தி, சமாதானச் சூழலை உருவாக்குவோம்; புதிய தீர்வுத் திட்டத்துடன் மீண்டும் யாழ்ப்பாணம் வருவோம், என்று சொன்னார்கள். ஆனால் போனவர்கள் வரவில்லை. கொழும்பு திரும்பிய இவர்களை ஆட்சி பீடத்திலிருந்த சிங்களத் தலைவர்கள் எவரும் சந்திக்க விரும்பவில்லை. இதனால் இவர்களது சமாதான முயற்சி பிசுபிசுத்துப் போனது.

**அன்ரன் பாலசிங்கம்**

இந்த நிகழ்வுகளுக்கு அப்புறமும் சமாதானக் கதவுகளை புலிகள் சாத்திவிடவில்லை.

அடுத்தாக, சென்ற ஆண்டு முற்பகுதியில் அங்கிலிக்கன் ஆயர் கெனத் பெர்னாண்டோ யாழ்ப்பாணம் வந்திருந்தார். சமாதானத்தின் பருவகாலம் வந்துவிட்டது என்றார். புலிகளின் தலைவரை நேரில் சந்திக்க வேண்டும்; அவரது வாயால், அவர் என்ன சொல்கிறார் என்பதைக் கேட்டறியவே சிங்கள தேசம் விரும்புகிறது; ஏனையோரைச் சந்திப்பதில் அர்த்தமுமில்லை, அவசியமும் இல்லை என்றார். ஆயரின் அபிலாசையையும் வற்புறுத்தலையும் நாம் தலைவரிடம் எடுத்துரைத்தோம். ஆயரைச் சந்திக்க தலைவர் இசைந்தார். - 1993 ஜனவரி 10 ம் திகதி சந்திப்பு நிகழ்ந்தது. இரண்டரை மணி நேரமாக தலைவர் பிரபாகரன் ஆயருடன் கலந்துரையாடல் நிகழ்த்தினார்; எல்லா விடயங்கள் பற்றியும் மனம் திறந்து பேசினார்.

தமிழீழம் சமாதானத்தை வரவேற்கிறது. அமைதி வழியில் பிரச்சினையைத் தீர்க்க நாம் தயார். சிங்கள தேசத்திற்கு நாம் நேசக்கரம் நீட்டி நிற்கிறோம். ஆனால் அதைப் பற்றிக்கொள்ள சிங்கள அரசு மறுக்கிறது. சண்டையை நிறுத்தி, பொருளாதாரத் தடைகளை நீக்கி, சகஜ நிலையைத் தோற்றுவித்தால் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிக்கலாம். இப்படிச் சொன்னார் தலைவர்.

தமிழர் தாயகத்தைத் துண்டாடிவிடும் சிங்கள அரசின் முயற்சியையும் தலைவர் கண்டித்தார். தமிழர் தாயகம் என்பது எமது அடிப்படையான கோரிக்கை. அதனைச் சிங்கள தேசம் ஏற்றுக் கொள்ளாத பட்சத்தில் தமி-



தமிழீழம் சமாதானத்தை வரவேற்கின்றது. நாங்கள் நீட்டிநிற்கும் நேசக்கரத்தைப் பற்றிக்கொள்ள சிங்கள அரசு மறுக்கின்றது.

ழரின் தேசிய பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணமுடியாது என்பதனையும் தலைவர் ஆணித்தரமாக வலியுறுத்தினார்.

"நீங்கள் உண்மையில் சமாதானத்தை விரும்புவதாக இருந்தால், உங்கள் நல்லெண்ணத்திற்குச் சான்றாக இரு போர்க் கைதிகளை விடுதலை செய்து என்னிடம் ஒப்படைப்பீர்களா?" என்று கேட்டார் ஆயர். எவ்வித தயக்கமுமின்றி தலைவர் பிரபாகரன் அதற்கு இணங்கினார். ஆச்சரியத்தால் ஆயரின் முகம் மலர்ந்தது.

போருக்கு ஒரு முடிவு கொண்டுவர முயற்சிப்பேன், பொருளாதாரத் தடையால் தமிழ் மக்கள் படும் தாங்கொணாத் துயரைத் தென்னிலங்கையில் எடுத்து விளக்குவேன், சமாதானச் சூழலை உருவாக்கும்படி அரசிடம் வற்புறுத்துவேன், இவ்விதம் வாக்குறுதி அளித்தார் ஆயர்.

தலைவர் பிரபாகரனின் நேர்மைக்கு அறிகுறியாகவும், புலிகளின் சமாதானத் தேடுதலுக்கு சாட்சியாகவும் விடுதலை பெற்ற இரு போர்க் கைதிகளை அழைத்துக் கொண்டு ஆயர் கென்னத் பெர்னாண்டோ கொழும்பு திரும்பினார். கொழும்பில் பத்திரிகையாளருடன் பேசும் பொழுது, "பிரபாகரனிடம் மனிதத்தின் முகத்தைக் கண்டேன்" என்று கூறினார். அவ்வளவு தான் சிங்களப் பேரினவாதம் கொதித்து எழுந்தது; ஆயர் மீதும் புலிகள் மீதும் சேற்றை வாரி வீசியது. "ஆயருக்குப் பைத்தியம் பிடித்துவிட்டது. அதனால்தான் பிரபாகரனை மனிதனாகக் கண்டார்" என ஒரு பத்திரிகை எழுதியது.

ஆயர் எவ்வளவோ முயற்சித்தும், அன்றைய ஜனாதிபதி பிரேமதாசா அவரைச் சந்திக்க மறுத்துவிட்டார்.

சிங்களப் பேரினவாதம் சமாதானத்தை விரும்பாததால், மீண்டும் ஓராண்டு யுத்தத்தில் கழிந்தது. என்றுமில்லாதவாறு இராணுவத்திற்கு அடிமேல் அடி விழுந்தது. பூநகரியில் பேரிடி விழுந்தது. அடிமேல் அடி விழுந்தால் அம்மியும் நகரும் என்பார்கள். ஆனால் சிங்களப் பேரினவாத அம்மி சிறிதேனும் நகரவில்லை.

வழமைபோல, வருட ஆரம்பத்தில் சமாதானப் பருவகாலம் பிறந்ததைத் தொடர்ந்து, யாழ்ப்பாணத்தை நோக்கிய ஆன்மீக யாத்திரைகளும் தொடங்கின. இம்முறை கிறிஸ்தவத்தின் மூன்று முக்கிய மதபீடத் தலைமைகளும் இங்கு வந்து, நிலைமைகளைக் கண்டறிந்து சென்றன. இவர்களைத் தொடர்ந்து பௌத்த மகா சங்கத்தின் பிக்குகள் குழு ஒன்றும் யுத்தத்தால் சிதைந்த யாழ்ப்பாணத்தின் முகத்தைத் தரிசித்துச் செல்ல இருக்கிறது.

கத்தோலிக்க, மெதடிஸ்த, அங்கிலிக்கன் திருச்சபைத் தலைவர்களை நாம் சந்தித்து எமது நிலைப்பாட்டை விளக்கினோம்.

சமாதானப் பேச்சுக்கள் சமாதானச் சூழ்நிலையில் நிகழ்வது தான் நியாயம். அப்பொழுது தான் அது வலுக்கட்டாயமற்ற, சுதந்திரமான பேச்சாக அமையும். இராணுவ, பொருளாதார அழுத்தங்களைப் போட்டவாறு, தமிழரின் தொண்டையை நெரித்துக்கொண்டு பேசச் சொல்வது நியாயமாகாது. நெருக்குவாரத்தின் பிடிக்குள் நின்றுகொண்டு, நட்புறவுடன், நல்லெண்ணத்துடன், நம்பிக்கையுடன் பேச முடியாது. எனவே, அழுத்தம் போட்டு, மிரட்டிப் பயமுறுத்தி, தமிழர் மீது ஏதோ தீர்வு ஒன்றைத் திணித்துவிடலாம் என்று அரசு எண்ணுவது அடிப்படையிலேயே தவறானது. முதற்படியாக சமாதான சூழ்நிலை உருவாக வேண்டும். இதற்கு போர் நிறுத்தம் அவசியம்; பொருளாதார நெருக்குதல் நீக்கப்படுவது அவசியம். தமிழர் மீது தனது நல்லெண்ணத்தைக் காண்பிக்கும் வகையில் அரசு இவற்றைச் செய்யலாம். இப்படியாக ஒரு சமாதானச் சூழ்நிலை பிறப்பிக்கப்பட்டால் நாம் பேச்சுக்களுக்குத் தயார். இவ்வாறு நாம் எமது நிலைப்பாட்டை எடுத்து விளக்கினோம். எமது யோசனையில் நியாயம் இருப்பதை ஆயர்களும் உணர்ந்து கொண்டனர்.

அங்கிலிக்கன் ஆயர், தலைவர் பிரபாகரனை மீண்டும் சந்திக்க விருப்பம் தெரிவித்தார். ஆனால், வற்புறுத்தவில்லை. ஏற்கனவே ஒரு தடவை தலைவரைச் சந்தித்தாகிவிட்டது. நேரில் வந்து, நேசக்கரம் நீட்டி, சமாதானத்துக்கு சமிக்ஞை காட்டியிருக்கிறார் தலைவர். அப்படியிருந்தும் சிங்கள தேசம்தான்

தொடர்ச்சி 15ம் பக்கம் ....

# முறியடிக்கப்பட்ட முற்றுகை

## குடாநாடு மீதான முற்றுகைப் போர் - ஒரு நோக்கு

ஈழப்போர் - 2 தொடங்குமுன்னரே, தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு எதிராக ஒரு போர்முறைத் திட்டமொன்றைச் சிங்கள அரசு வரைந்து வைத்திருந்தது.

யாழ். குடாநாடு மீதமான பூரண இராணுவ -பொருளாதார முற்றுகைப் போர்முறையே அதுவாகும்.

குடாநாட்டின் பத்து இலட்சம் மக்களையும், குடாநாட்டுக்குள்ளேயே சிறை வைத்து, அவர்கள் மீது தீவிரமானதொரு போரைத் தொடுத்து, குடாநாட்டைச் சிங்களப்படைகளிடம் சரணாகதியடையச் செய்வதுதான் அந்த முற்றுகைப் போர் முறைத் திட்டத்தின் நோக்கம்.

குடாநாட்டை சரணாகதி அடையச் செய்தால், தண்டவாளம் இல்லாத புகைவண்டி போல தமிழீழ விடுதலைப் போராட்டம் செயலிழந்துவிடும் என்று, சிங்களத் தலைவர்கள் நம்பினர். அந்தளவுக்கு குடாநாட்டை விடுதலைப் போராட்டத்தின் உந்துதளமாகவும், மையவிசையாகவும் கருதினர்.

ஆனால், 1990 யூன் 10 ஆம் திகதி போர் தொடங்கியபோது, தமிழீழத்தின் அனைத்துப் பகுதிகளிலும், பரவலான முறையில் புலிகள் தொடுத்த அதிரடிகள் - முகாம் தகர்ப்புக்களால் திகிலடைந்த சிங்களப் படைத்துறை, உடனடியாக குடாநாடு மீதான முற்றுகைப் போரைத் தொடுக்க முடியவில்லை.

ஏற்கனவே இருந்த ஆட்பலத்தின் மூலம் குடாநாடு மீதான முற்றுகைப் போரையும், நடாத்திக்கொண்டு, அதேவேளை தமிழீழத்தின் மற்றைய பகுதிகளிலும் தமது இராணுவ நடவடிக்கைகளையும் தொடர முடியும் என்றே, முன்னர் படைத்துறைத் தலைமை எண்ணியது.

ஆனால், போர் தொடங்கியபின்னர் புலிகளின் பலத்தைக் கண்டுகொண்ட அரசு, தனது படையின் ஆள் எண்ணிக்கையை அதிகரித்த பின்னர்தான் குடாநாடு மீதான முற்றுகைப் போரைத் தொடுக்க முடியும் என்று உணர்ந்து கொண்டது.

1990 இன் பிற்பகுதியிலும் 1991 இன் முற்பகுதியிலும் சிங்கள அரசு, பெரும் எண்ணிக்கையில் படைக்கு ஆள் திரட்டிப் போர்ப் பயிற்சி கொடுத்தது.

1991 யூலை ஆனையிறவுச் சமரைத் தொடர்ந்து, சிங்கள அரசு தனது முற்றுகைப் போர்த் திட்டத்தைச் செயற்படுத்தத் தொடங்கியது. ஆனையிறவுச் சமரில் புலிகள் இயக்கம் சந்தித்த பெரும் எண்ணிக்கையிலான உயிரிழப்பால் புலிப்படை பலவீனப்பட்டுவிட்டது என்று எண்ணிக்கொண்டு முற்றுகைப் போரை ஆர்வத்துடன் ஆரம்பித்தது.

### முற்றுகைப் போரின் முதலாவது கட்டம்

குடாநாடு மீதான முற்றுகைப் போரை சுலபப்படுத்துவதற்குரிய முன்நிபந்தனையாக மணலாறு ஆக்கிரமிக்கப்பட வேண்டும் என்று, படைத்துறைத் தலைமை கருதியது. அதன்மூலம் வடக்கு -கிழக்கென்று தமிழர் தாயகத்தை குறுக்கே வேலி போட்டு, புலிகளின் பலத்தை இருகூறாகச் சிதைத்துப் பலவீனப்படுத்தலாம் என்று நம்பியது.

இதன் காரணமாக முற்றுகைப் போரின் முதலாவது கட்டம், மணலாற்றை ஆக்கிரமிப்பதாகவே இருந்தது.

‘ஒப்பரேசன் மின்னல்’ என்று சிங்களப் படைகள் பெயரிட்ட அப் படையெடுப்பைத் தடுத்ததுடன் எதிர்த்துநின்ற புலிவீரர்கள், சிங்களப் படைகளின் எண்ணத்தை ஈடேறவிடாது தடுத்துத் திருப்பியனுப்பினர்.

இவ்விதம் குடாநாடு மீதான முற்றுகைப் போரின் ஆரம்பமே தோல்வி கண்டது.

### இரண்டாவது கட்டம்

இப்போது சிங்களப் படைகள் நேரடியாகவே குடாநாடு மீது முற்றுகைப் போரில் இறங்கின. 17-10-91 அன்று, காரைநகரிலிருந்து ஞானி மடம் வரை ஒரு படை நகர்த்தலைச் செய்து பூநகரிப் பகுதியை ஆக்கிரமித்து, கேரதீவு -சங்குப்பிட்டிப் பாதையை விழுங்கிக் கொண்டது. புலிகளின் பாரிய எதிர்த் தாக்குதல்கள் ஏதுமில்லாமல் இந்த இராணுவ நடவடிக்கையைச் சிங்களப் படைகள் நிறைவேற்றின.

ஆனையிறவு, மணலாற்றுச் சமர்களின் பின் புலிகள் இயக்கம் புதிய போர் உத்தியைப் புகுத்தியது. பரவலான முறையில் மின்னல் வேக அதிரடிகளைக் கொண்ட இப்புதிய போருபாயத்தை வரைந்த தலைவர் அவர்கள், அதை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தத் தொடங்கினார். இப்போருபாயத்தின் பிரதான நோக்கம், சிங்கள இராணுவ இயந்திரத்திற்கு அடிமேல் அடி கொடுத்து -அதைத் திணறடித்து -குடாநாடு மீதான முற்றுகைப் போருக்குத் தொல்லை கொடுப்பதுதான்.

இதன் அடிப்படையில் மட்டக்களப்பு-திருகோணமலை, மன்னார், மணலாறு, வன்னி என்று சிங்களப் படையணிகள் மீது புலிவீரர்கள் வெற்றிகரமான தாக்குதலைத் தொடுத்தனர்.

ஏறக்குறைய ஓராண்டுகாலம் தொடர்ந்து நடந்த இந்த மின்னல்வேக அதிரடிகளில் 1220க்கும் மேற்பட்ட படையினர் கொல்லப்பட்டனர்; அதேயளவு ஆயுதங்களும் மற்றும் வெடிமருந்துப் பொருட்களும் புலிவீரர்களால் கைப்பற்றப்பட்டன.

ஆயினும் இப்பேரிழப்புக்களுக்கு மத்தியிலும் சிங்களப் படைத்துறைத் தலைமை, முற்றுகைப் போரை அடுத்த கட்டத்திற்கு நகர்த்தியது.

### மூன்றாவது கட்டம்

கேரதீவு - சங்குப்பிட்டி பாதை மூடப்பட்டபின், கொம்படி -ஊரியான் பாதை மூலம் மக்கள் பயணம் போயினர். 28-05-92 அன்று வெற்றிலைக் கேணியிலிருந்து தொடங்கிய ஒரு இராணுவ நடவடிக்கை மூலம், இப்போக்குவரத்துப் பாதையும் மூடப்பட்டது. இந்த நடவடிக்கையுடன் குடாநாட்டுக்கான அனைத்துத் தரை மார்க்கமும் படையினரால் ஆக்கிரமிக்கப்பட்டது. இதனால் கிளாலி நீரேரியூடாக மக்களின் பயணம் தொடங்கியது. ஆரம்பத்தில் இந்த நீரேரிப் பயணத்தை அரசு பெரிய விடயமாக எடுத்துக் கொள்ளவில்லை. நினைத்த நேரத்தில் கடற்படையைக் கொண்டு அப்பாதையை மூடிவிடலாம் என்று அரசு நம்பியது. ஆகவே கொம்படி -ஊரியான் பாதையை மூடிய கையோடு வேறொரு இராணுவ நடவடிக்கையைச் செய்து, குடாநாட்டு முற்றுகையைத் தீவிரமான ஒரு கட்டத்திற்கு கொண்டு செல்ல முடிவெடுத்தது.

### நாலாவது கட்டம்

இந்த இராணுவ நடவடிக்கை மூலம் தீவுப்பகுதியிலிருந்து நீரேரியைத் தாண்டி, வலிகாமத்தின் கரையோரப் பகுதியை ஆக்கிரமிப்பதாக இருந்தது. ஏற்கனவே தீவுப்பகுதியில் நிலைகொண்டிருந்த படையினர் காரைநகர், அராலித்துறை, மண்டைதீவு ஆகிய இடங்களில் இருந்து



‘ஒப்பரேசன் தவளை’யில் எதிரியிடமிருந்து கைப்பற்றிவந்த விசைப்படகின் மீது தலைவர்.
‘இனித் தமிழினம் குனியாது - எமை எதிர்த்திடப் பகை துணியாது

படையெடுப்பைத் தொடங்கி யாழ் நகரப்பகுதி உட்பட வலிகாமத்தின் கணிசமான கரையோரப் பகுதியைக் கைப்பற்ற அரசு திட்டமிட்டது.

ஆனால், இப்படையெடுப்பு தொடங்கும் சமயத்தில் 8-8-92 அன்று, அராலித்துறையில் வெடித்த ஒரு கண்ணி, படையெடுப்புத் திட்டத்தையே முறியடித்தது. வடபிராந்தியத்தின் படைத்துறைத் தலைமை ஒரு வாகனத்தில் ஏறி படையெடுப்பை நெறிப்படுத்தச் சென்ற சமயத்தில், வேவுப்புலி வீரர்களால் நுட்பமான முறையில் புதைக்கப்பட்ட கண்ணியில் சிக்கி அவர்கள் கொல்லப்பட்டார்கள்.

### ஐந்தாவது கட்டம்

இதைத் தொடர்ந்து அரசின் கவனம், கிளாலி நீரேரி பயணத்தின் பக்கம் முழுமையாகத் திரும்பியது.

எச்சரிக்கைகள், குண்டுத் தாக்குதல்கள், கோரமான படுகொலைகள் மூலம் படகுப் பயணத்தை நிறுத்த அரசு முயன்றது. அதற்கு மாறாக கடற்புலி வீரர்களின் விடா முயற்சியும் - வீரமும் -தியாகமும் படகுப் பயணத்தை நடாத்திக் கொண்டிருந்தன. ஈழப்போர் -2 இன் பிரதான பொருதுகளமாக யாழ். நீரேரி மாறியது. நீரேரியில் சிங்களக் கடற்படை வைத்திருந்த இராணுவ மேலாதிக்கத்தைத் தகர்ப்பதற்காக, கடற்புலிகள் தினந்தோறும் கடற்சண்டையில் ஈடுபட்டனர். மெதுமெதுவாகக் கடலில் பலம்பெற்ற கடற்புலிகள், 25-8-93 அன்று நடந்த பாரிய கடற்சண்டையுடன், நீரேரியில் தமது மேலாதிக்கத்தை நிலைநிறுத்தினர்.

கடற்கரும்புலிகள் நடாத்திய தாக்குதல்களால் இரண்டு நீரூந்து விசைப்படகுகளுடன், நாகதேவன்துறைப் படகுத் தளத்தின் போரிடும் உறுதியும் மூழ்கடிக்கப்பட்டது.

நீரேரியில் கடற்புலிகள் மேலாதிக்கம் பெற்றுவிட்டனர் என்பதைத் தன்னளவில் ஏற்றுக்கொண்ட சிங்களப் படைத்துறைத் தலைமை, நீரேரிப் பயணத்தைத் தடுத்து முற்றுகைப் போரை முழுமைப் படுத்தும் நோக்கில் புதிய திட்டத்தை வரைந்தது.

### ஆறாவது கட்டம்

கிளாலி இறங்குதுறையைக் கைப்பற்றுவதன் மூலம் கடற்புலிகள் நீரேரி மீது வைத்திருந்த கடலாதிக்கத்தைச் செல்லாக்காசாக்க முடியும் என்று, படைத்துறைத் தலைமை எண்ணியது. ஆகவே, கிளாலியை ஆக்கிரமிக்க விரும்பி, 28-9-93 அன்று, ஆனையிறவில் இருந்து படையெடுப்பைத் தொடங்கியது. ஆனால், புலோப்பளையில் வைத்து புலிவீரர்கள் தொடுத்த பெரும் தாக்குதலில் அப்படையணி பேரிழப்பைச் சந்தித்தது. இருந்தாலும் சிங்களப் படையின் கௌரவத்தைக் காப்பாற்றுவதற்காக கிளாலி வரை வாரோட்டம் செய்த படையினர் மீண்டும் ஆனையிறவுக்கே திரும்பினர்.

இதனால், படைத்துறைத் தலைமை சிங்களப் பேரினவாதிகளின் கண்டனத்துக்குள்ளானது. இந்தக் கண்டனங்களில் இருந்து தப்புவதற்காக ‘இரண்டாவது யாழ்தேவி’ பற்றிப் படைத்துறைத் தலைமை கருத்து வெளியிட்டது.

### ஏழாவது கட்டம்

கிளாலி இறங்குதுறையை - மீண்டும் இராணுவம் ஆக்கிரமிக்க இருக்கின்றது என்ற செய்திகளும், நீரேரியை மறுமுனையில் இருந்து கட்டுப்படுத்துவதற்காக ஆனையிறவுத் தளத்தில் கடற்படை, ஒரு படகுத் தளத்தை அமைத்துக் கொண்டிருக்கிறது என்ற செய்திகளும், கொழும்புப் பத்திரிகைகளில் வெளிவந்துகொண்டிருந்தபோது, நீரேரியின் வேட்டை நாயான பூநகரிக் கூட்டுத்தளம் புலிகளின் தவளைப் பாய்ச்சலுக்கு உள்ளாகியது.

இதில் ஞானிமடம் - நாகதேவன்துறைக் கடற்படைத்தளம் முற்றாக அழிக்கப்பட்டது. கூட்டுத் தளத்தின் பெரும்பகுதியும் புலிவீரர்களால் வெற்றி கொள்ளப்பட்டது. நாகதேவன் படகுத்துறையிலிருந்து, கடற்புலிகள் ஐந்து நீரூந்து விசைப்படகுகளைக் கைப்பற்றினர். இந்த விசைப்படகுகளுடனும், ஞானிமடம் - நாகதேவன்துறை கடற்படைத் தளத்தின் அழிவுகளுடனும் நீரேரியின் ‘தனிக்காட்டு ராஜா’வாக கடற்புலிகள் மாறினர்.

குடாநாடு மீதான முற்றுகைப் போரின் ஏழாவது கட்டம் இது. புலிகள் உருவாக்கிய இந்த ஏழாவது கட்டத்துடன் குடாநாடு மீது சிங்கள அரசு விதித்த முற்றுகைப் போர் முடிவுக்கு வந்தது.

புலிகள் தமது இராணுவ பலத்தால் சிங்கள அரசின் இராணுவ முற்றுகையை உடைத்து, வடதமிழீழ மக்களுக்கென ஒரு போக்குவரத்துப் பாதையைச் சமைத்துவிட்டனர்.

இவ்விதம், இரண்டாவது ஈழப் போருக்கென்று சிங்கள அரசு தயாரித்த போர் முறைத் திட்டத்தை புலிகள் முறியடித்துவிட்டனர். ■

# இரத்தமும், தசையும், உயிருமாக...

## தென் தமிழீழத்து வாழ்வு

மன்னம்பிட்டி ஒரு சிறிய கிராமம். பொலநறுவை மாவட்டத்தின் எல்லையோடு அது அமைந்துள்ளது. பிரதான வீதியில் ஒருபக்கம் சிங்களக் கிராமத்தையும், அடுத்த பக்கம் முஸ்லீம் கிராமத்தையும் கொண்டிருந்த தமிழ் ஊர் அது. 1992 ஆம் ஆண்டின் துவக்கப்பகுதியில் ஓர் இரவு. சனங்கள் உறங்கினார்களோ இல்லையோ ஊர் பேச்சு முச்சற்றுக் கிடந்தது. சிங்கள -முஸ்லீம் காடையரோடு, இராணுவத்தினர் இருபக்கங்களாலும் நுழைந்தனர். துப்பாக்கிகளை விட அவர்களுக்கு அதிகம் பிடித்தமான கத்திகள், பொல்லுகள், வாள்கள், அலவாங்குகள் கைகளில் கிடந்தன. நாய்களின் வெறித்தனமான குரைப்பு ஊரைத் துடித்தெழச் செய்தது.

அன்று நடந்த கோரத்தின் அதிர்ச்சியிலிருந்து இன்றும் மீளாத ஒரு சிறுவன் எரிந்து சாம்பரான அந்த இரவின் கதையைச் சொன்னான் -

தாய்மாரைக் கட்டிப்பிடித்தபடி ஆழ்ந்து தூங்கிய பச்சிளம் குழந்தைகளை, கால்களில் பிடித்துப் பிடுங்கி இழுத்தார்கள். பதறி எழுந்தது .... "ஐயோ".... என் குழந்தை...." அன்னை சொல்லி முடிக்குமுன், வீறிட்டுக் கத்திய மழலையின் பிஞ்சு முகத்தைச் சுவரோடு ஓங்கி அறைந்து சிதறடித்து, "இந்தா.... பிடி....." எனத் தாயின் மடியில் எறிந்துவிட்டுப் போனார்கள்.

கணவனைத் தூக்கி இழுத்து பெற்றோலைத் தலையில் ஊற்றித் தீப்பெட்டியைத் தட்டிய போது, "ஐயோ!.... அவரை விடுங்கோ..." எனக் கதறியோடி வந்து கட்டிப்பிடித்த துணைவியையும் சேர்த்துக் கட்டி, "நீயும் அவரோடேயே போ...." என்று தீ மூட்டிய வெறியர்கள், மரண ஓலமிட்டு -துடித்துத் துடித்து மெல்ல அடங்கி கருகி முடியும்வரை கும்மாளமிட்டுச் சிரித்தார்கள்.


பயந்தொடுங்கி, பெற்றோருக்கிடையில், பதுங்கி ஒழித்த பெண் பிள்ளைகளை வெளியில் இழுத்தார்கள். பெற்றவர்கள் பார்த்து நிற்கவே, உடைகளைக் கிழித்தெறிந்தார்கள். உடல் சோர்ந்து, உணர்வு சோர்ந்து, உயிர் சோர்ந்து சாகும்வரை அவர்கள் மீது காமவெறியாடிய காடையர் கூட்டம் -போகும்போது -பிள்ளைகளின் பிணத்தைத் தூக்கிப் பெற்றவர்களின் கையில் கொடுத்துவிட்டு, எக்காளச் சிரிப்போடு வெளியேறியது.

மூன்று நாட்கள் நரவேட்டைக்குப் பிறகு -வயல்கள், வீடுகள், குடிசைகள், ஆலயம், பாடசாலை என -அந்தச் சின்னக் கிராமம் முற்றிலுமாகக் கருகிப் போய்க் கிடந்தது. மனித சஞ்சாரமே அற்று மன்னம்பிட்டி வெறிச்சோடிப் போயிருந்தது. வீதிகளில் இழுபட்ட பிணங்களை நாய்கள் நரிகளோடு, பறவைகளும் உணவாக்கின. துல்லியமான புள்ளிவிபரங்கள் இல்லையாயினும், கொல்லப்பட்டவர்களின் தொகை 250க்கும் அதிகம் என்பது பிழைக்காது. இத்தொகை 450 -500 வரைகூட இருக்கலாம். 1500 குடும்பங்கள் வரை வாழ்ந்த அந்தக் கிராமத்தின் அனைத்து அத்தனை குடிகளும் விரட்டியடிக்கப்பட்டனர்.

பாடசாலையின் தளபாடங்களை முஸ்லீம், சிங்கள அயல் கிராமங்கள் பங்கிட்டுக் கொண்டன. வீடுகளை உடைத்துக் கதவுகள், சாளரங்கள், ஓடுகளைச் சேதாரமில்லாமல் கழற்றி பத்திரமாக எடுத்து, பக்கத்துக் கிராமங்களுக்காக வாகனங்கள் ஏற்றிச் சென்றன. மேனி உருகிச் சேனை செய்து எம்மக்கள் சேர்த்து வைத்த நெல்மூடைகள், உழவு இயந்திரத் தொடுப்பிகளில் அடக்கி அப்புறப்படுத்தப்பட்டன. கொண்டு செல்ல வசதியற்று எஞ்சிய பொருட்கள் எல்லாம் நெருப்புக்குக் கொடுக்கப்பட்டன. அறுவடைக்குத் தயாராக இருந்த வயல்களின் வரம்புகளைத் தாவிக்கடந்த படைவண்டிகள், துடடித்துவிட்டுப் போயின.

கொக்கட்டிச்சோலையில் படுகொலை செய்யப்பட்ட குறைந்தது 167 பேரில் தாயும், தந்தையும், தனயனும்.

**"இத்தனை காலமாக பட்டுவிட்ட துன்பங்கள் போதும். இனி முடியாது."**



பரிபூரணமாக ஒரு ஊரழிப்பு நடந்து முடிந்தது.

மன்னம்பிட்டி ஒரு உதாரணம் மட்டும்தான்.

திருகோணமலைத் துவக்கத்தில் சாம்பல் தீவிலிருந்து, மட்டக்களப்பின் வாகரை, வாழைச்சேனை, கிரானுக்கூடாக அம்பாறைத் தொங்கலில் வீரமுனைவரை இதுதான் நடந்தது; இப்போதும் நடந்துகொண்டிருக்கிறது. எந்தக் கிராமமும் எந்த நேரத்திலும் வேட்டையாடப்படலாம். இன்று செழித்திருக்கும் எந்தவொரு ஊரும், நாளை செத்துப் போய்க்கிடக்கலாம். அந்த மக்கள் சொல்கின்ற துயரக்கதைகளை, இதயமுள்ள ஒருவரால் சொற்ப நேரத்துக்கப்பால் கேட்டுக்கொண்டிருக்க முடியாது; அப்படிக் கேட்கும் எவரும் அன்றிரவு தூங்க முடியாது. பொஸ்னியா, சோமாலியா என எங்கு என்ன நடந்தாலும் கூட -நவீன உலக வரலாற்றில் -மிகக் கோரமான இனவன்முறைக்குள் சிக்கி நசுங்கும் ஒரு மக்களினம் நாங்களாகத்தான் இருக்கும்.

தாங்கள் செய்கின்ற "திருவிளையாடல்கள்" பற்றிய தகவல்கள் வெளியில் போகாதவண்ணம், துப்பாக்கி வலைவிரித்து நிற்கும் சிங்கள தேசத்துப் படைகளின் கைகளில், எங்கள் தாயகத்தின் தென் பிராந்தியம் துவண்டு போய்க் கிடக்கின்றது.


கல்லாறைச் சேர்ந்த அவருடைய பெயர் இராசன். அவர் ஒரு கடற்தொழிலாளி. நள்ளிரவுப் பொழுதில் வந்தவர்கள் தட்டி எழுப்பிக் கூட்டிப் போனார்கள். தேடாத இடமில்லை; தேடியும் ஆளில்லை; என்றான பின் ஒருநாள் -"75,000 ரூபா பணத்தோடு வந்து ஆளைக் கூட்டிச் செல்லவும்" -ரெலோ முகாமிலிருந்து தகவல் வந்தது. இருந்ததையெல்லாம் 'விற்றும் சுட்டும்' சேர்ந்தது 15,000 ரூபா மட்டும்தான். "இதை வைச்சுக் கொண்டு ஆளை விடுங்கோ" என்று மன்டிக் கெஞ்சியவர்களிடம் பணத்தை வாங்கிக் கொண்டு, "நீங்கள் போங்கோ, ஆளை ஆனுப்பிவிடுகிறம்" என்றான் ஒரு 'ரெலோ'க்காரன். வாரமொன்றும் போய் வராத ஆளைத் தேடி 'ரெலோ' முகாம் போய் ஏனென்று கேட்டபோது, "நீங்கள் பணம் கொடுத்தது யாருக்கென்று எனக்குத் தெரியாது. பிடித்துவந்தது நான்தான். சொல்லியனுப்பியதைப் போல 75,000 ரூபா தந்துவிட்டு ஆளைக் கொண்டு போங்கோ" என்றான் அங்கிருந்த இன்னொரு 'ரெலோ'க்காரன்.

போனவர்கள் விக்கித்துப் போனார்கள். கத்தினார்கள். ஒவ்வொரு சதம் காசுக்கும் பாடுபடும் தங்கள் வறுமை நிலையைச் சொல்லி அழுதார்கள். கரைந்து போனது கண்ணீர்தான்; அந்தக் கல்நெஞ்சங்களில்லை. திரும்பிப் போகும் போது, "75,000 ரூபா" ஞாபகப் படுத்தி அனுப்பிவிட்டார்கள்.

ஊர்க்காரரிடம் கடன் வாங்கி, உறவுக்காரரிடம் கடன்வாங்கி, கையிலிருந்த காணியையும் விற்று, வீட்டிலிருந்த எல்லாவற்றையும் விற்று குறிப்பிட்ட தொகையோடு முகாமிற்கு ஓடினார்கள். எண்ணி வாங்கிக் கொண்ட 'ரெலோ'க்காரன், "வீட்டுக்குப் போங்கோ, ஆள் வருவார்" என்றான். நம்பமுடியவில்லைதான்; மாற்று வழியுமில்லையே. நாள் நகர்ந்தது. ஆனால் ஆள் வரவில்லை. வராத ஆளைத்தேடி முகாமுக்கு ஓடினார்கள். அலுவலக மேசையில் -எதையோ -எழுதிக் கொண்டு -வேலையில் மூழ்கிப் போய் இருந்தவரான ரெலோ அதிகாரி, குனிந்த தலை நிமிராமல் எழுதிக்கொண்டே சொன்னார் -"நாங்கள் அனுப்ப வேண்டிய இடத்திற்கு அனுப்பீட்டம். நீங்கள் அவருக்குச் செய்ய வேண்டியதுகளைச் செய்யுங்கோ!".

இது ஒரு உதாரணம்.

அவருடைய பெயர் இராசையா. கொக்கட்டிச்சோலை முனைக்காட்டை சேர்ந்தவர். 7 பிள்ளைகளின் தந்தையான அவருக்குச் சிறிய கடை ஒன்றிலிருந்து மட்டும்தான் வருமானம். ரெலோக் கும்பல் ஒரு இலட்சம் ரூபா கேட்டது. வேறு வழியற்ற நிலையில் குறித்த தொகையைச் செலுத்தினார். பற்றுச்சீட்டும் பெற்றிருந்தார். இன்னொரு இரவு -திரும்பவும் வந்து -அவரைப் பிடித்துக்கொண்டு போனவர்கள், இம்முறை பணத்தோடு, அவரது மகளையும், கொண்டுவரச் சொல்லித் திருப்பி அனுப்பிவிட்டார்கள். நிலைமை சிக்கலானது. 'ரெலோ'க்காரர்கள் அடிக்கடி வந்தார்கள். "சொன்னவற்றைக் கொண்டு வா" -மிரட்டினார்கள். பெரிய இழுபறி நடந்தது. வெளிநாடுகளுக்கோ, அல்லது வேறு மாவட்டத்திற்கோ ஓடி விடுமாறு ஊரவர்கள் ஆலோசனை சொன்னார்கள். ஆனால், எதுவரினும் எம் நிலம் விட்டு அசையோம், என அங்கேயே குடியிருந்தது அந்தக் குடும்பம். ஒரு காலை -கடைக்குப் போன மகள் காணாமல் போனாள். தேடினார்கள், ஓடித் திரிந்தார்கள் பயனில்லை. மறுநாள் -மிருகத்தனமான வகையில் பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கப்பட்டு, கந்தல் துணிபோல வீட்டுக்கு வந்தாள் பிள்ளை. 'ரெலோ' கும்பல் அன்றிரவும் வந்தது. "சொன்னபடி ஒரு லட்சத்தை நாளைக்கே தரவேண்டும்" உத்தரவிட்டது. "தரவில்லையானால் தலையிருக்காது" எச்சரித்தது. உருக்குலைந்து போன மகள், உத்தரவாதமில்லாமல் போன உயிர், நிம்மதியற்றுப்போன வாழ்வு. மறுநாள் மாலைப் பொழுதினில் அந்தக் குடும்பம் ஒட்டுமொத்தமாக நஞ்சருந்திக் கொண்டது.



**தென்தமிழீழ ஆற்றோரங்களில் இராணுவத்தால் வீசப்பட்ட தமிழர்களின் சடலங்களில் ஒன்று.**

ஊரவர்கள் ஓடிவந்தார்கள். ஆனாலும், இராசையா அவர்களையும், துணைவியாரையும், மகளையும், இரண்டு மகன்களையும் தவிர ஏனையவர்களை மட்டுமே அவர்களால் உயிரோடு காக்க முடிந்தது.

இது இன்னொரு உதாரணம்.

இதேபோன்று ஆயிரக்கணக்கில் நடந்த சம்பவங்களின் துயரங்களை இந்தப் பிராந்திய மக்கள் கதைகதையாக சொல்கின்றார்கள். ஆட்களைக் கடத்திப் பணயம் வைத்துப் பணத்தைக் கேட்பதும். முடிவில், ஆட்களையும் கொன்று பணத்தையும் கொள்ளையிடுவதும் வழமையாகிவிட்டது. எங்காவது ஒரு இடத்தில் இது எந்நாளும் நடக்கும். தொகை மாத்திரம் மாறுபடும். கடத்துகின்றவனின் தேவைக்கேற்பவும், கடத்தப்படுகின்றவர்களின் பொருளாதாரப் பின்னணியைப் பொறுத்தும் தீர்மானிக்கப்படும். பணயத் தொகையின் அளவு ஐம்பதாயிரத்திலிருந்து இலட்சக்கணக்கில் உயர்ந்து செல்லும்.

மாலை 6.00 மணிக்குப் பிறகு, "வீடுகளுக்கு வெளியே தலைக் கறுப்புத் தெரியக்கூடாது" என்பது இங்கு சட்டம், கட்டளை. என்னதான் உயிர்போகிற காரியமாக இருந்தாலும், மீறினால் உயிர்போகும். கருக்கல் பொழுதுகளில் போனவர்கள் "காணாமல் போனவர்களாய்" போய்விடுவார்கள், அல்லது கண்டதுண்டமாகக் காலையில் மீட்கப்படுவார்கள். "மயான அமைதி" என்பதின் மிகச்சரியான அர்த்தத்தை தென்தமிழீழத்து இரவுகளில் உணரலாம். இரவின் நிசப்தம் பயங்கரமானதாக இருக்கும். எந்த வீட்டுக்குள்ளும் எந்த நேரத்திலும் அவர்கள் நுழைவார்கள். அங்கிருக்கும் எவரையும் எந்தக் காரணத்தைச் சாட்டியும் இழுத்துச் செல்வார்கள். அப்படிக் கொண்டு செல்லப்பட்டவர்கள் வந்ததில்லை, வருவார்கள் என்ற நம்பிக்கை வீட்டிலுமில்லை.

"ஊரவங்க ஆராவது அவசரத்துக்கு வந்து கூப்பிட்டாலே, 'அவங்க தானோ?' எண்டு நெஞ்சு விறைச்சுப் போகும். எங்காச்சும் நாய் குலைச்சாலோ 'அவங்க தான் வர்றாங்களோ?' எண்டு பயம்மா இருக்கும்.... நம்ம சனங்கள் நிம்மதியாத் தூங்கி நாலு வருசமாச்சு மகனே" என்றார், வந்தாறுமூலையைச் சேர்ந்த நான்கு போராளிகளின் தாய் ஒருவர்.

'பெண்டுகள் சேனை'யைச் சேர்ந்த பூநகரிச் சமரில் களப்பலியாகிவிட்ட ஒரு புலிவீரனின் தாயார் சொன்னார். "விடியத் தால பாத்தா, ஆரிடையெண்டு அறியேலாத விதமா மனுசப் புணங்கள் தெருவோரத்திலையோ, ஆத்து மேட்டிலையோ கெடக்கும். தலையிருக்காது, கண்ணிருக்காது ... மண்டையப் பொளந்திருப்பாங்க .... ச்சீ..... அது ஒரு நரக வாழ்க்கை...."

தொடர்ச்சி 13ம் பக்கம்....

# தவளைத் தாக்குதலி

**1993** ஆம் ஆண்டு, கார்த்திகைத் திங்கள் முதலாம் நாள். மணலாற்றுத் துணைப்படை முகாமிற்கு முல்லை மாவட்டத் துணைப் படையில் பெரும்பகுதியினர் அழைக்கப்பட்டிருந்தனர். இரண்டாம் நாள் செவ்வாய்க்கிழமை மாலை 6.30 மணிக்கு தளபதி முகாமிற்கு வருகை தந்திருந்தார். சில நிமிட கலந்துரையாடலின் பின்னர், அணிகள் தனித்தனி பிரிக்கப்பட்டன. சண்டையொன்றுக்குச் செல்லப்போகிறோம் என்பது அனைவருக்கும் தெரிந்திருந்தது. ஆனால், எங்கே, எப்போது என்பது மட்டும் எவருக்கும் தெரியாது.

"எங்களுக்குள் என்ன பிரச்சினைகள் ஏற்பட்டாலும், அவற்றை இங்கு வந்து கதைத்துக் கொள்வோம். அதுவரை பொறுமையாக இருந்து, தரப்படும் பணிகளைச் செய்து, முல்லை மாவட்டத்தின் பெருமையை துணைப்படையின் பெயரினை காப்பாற்றிப் போடுங்கோ" என்ற வார்த்தைகளை மட்டும் எமது மாவட்டத்தின் தளபதி மீண்டும் மீண்டும் வலியுறுத்திக் கூறிக்கொண்டார்.

மழைத்துளிகள் விழ ஆரம்பித்தன. வீட்டின் நினைவுகளில் இருந்து அனைவரும் விடுபட விரும்பினோம். சமையல் கொட்டிலில் இருந்து குடம் ஒன்று எமது அணியினர் இருந்த பகுதிக்கு வந்து சேர்ந்தது. அதுதான் மிருதங்க இசைக்கருவி. பாடத் தொடங்கினார்கள். பாடத் தெரியாது என்று எவரும் இருக்கவில்லை. அனைவருமே பாடகராய் மாறினர். புரட்சிப் பாடல்கள், தத்துவப் பாடல்கள், பக்திப் பாடல்கள் எல்லாம் மாறி மாறி வந்தன. இனம்புரியாத இன்பமும், துன்பமும் கலந்த இரவாக அது நகர்ந்து கொண்டிருந்தது. பசியும் இல்லை, தூக்கமும் இல்லை. இரவு 11.30 மணியிருக்கும். வெளியே சென்றிருந்த தளபதி மீண்டும் வந்திருந்தார். தூறலாகத் தொடங்கிய மழை வேகமாகக் கொட்டியதை தளபதி நன்றாக நனைந்து வந்ததில் இருந்து அறிந்துகொண்டோம்.

"எல்லோரும் சாப்பிட்டுவிட்டீர்களா?" என்று தளபதி கேட்ட கேள்விக்கு, "ஆம்" என்று எல்லோரும் ஏக காலத்தில் பதில் கொடுத்தார்கள். ஆனால் பலர் சாப்பிடவில்லை என்பது எனக்குத் தெரியும். சண்டை என்று புறப்பட்டுவிட்டால் சாவு வருவதும் தவிர்க்க முடியாதென்பது அனைவருக்கும் தெரிந்ததே. ஆனால் வீணாக நாங்கள் மரணிப்பதற்கு எமது வீரர்கள் சந்தர்ப்பம் கொடுக்க மாட்டார்கள் என்பதும் தெளிவாகத் தெரியும். இருந்தாலும் சாப்பிடுவதில் எவருக்கும் புலன் செல்லவில்லை. ஒழுக்க விதிகள் பற்றி சில நிமிடங்கள் கலந்துரையாடிய பின்னர், "எல்லோரும் ஓடிச் சென்று வாகனங்களில் ஏறுங்கோ" என்று பணிப்பு விடுக்கப்பட்டது. ஓடிச்சென்று ஏறினோம். ஒன்றன் பின் ஒன்றாக அனைத்து வாகனங்களும் புறப்படத் தொடங்கின. இருளைக் கிழித்துக் கொண்டு பயணம் தொடர்ந்தது. எமது மாவட்டத்தை விட்டு வெளியே செல்கின்றோம் என்ற உண்மையை, சற்று நேரத்தின் பின் அனைவரும் புரிந்து கொண்டனர்.



மனித நடமாட்டம் அற்ற காட்டு வழியில் வாகனங்கள் ஓடிக்கொண்டிருந்தன. எல்லோரும் ஒருவரை ஒருவர் கேள்விக் குறியுடன் நோக்கிய வண்ணம் இருந்தனர். பலருக்கு ஏற்கனவே அந்தப் பாதை தெரிந்திருந்ததால் எங்கே செல்கின்றோம் என்பதைத் தெரிந்துகொண்டனர். இருப்பினும் மௌனமாக இருந்தனர். அன்றிரவு அமைதியாகவே விடிந்தது.


மறுநாள் காலை 9 மணியளவில் அனைவரும் ஒன்றுகூடினோம். மன்னார் மாவட்டத் தளபதி எம்முடன் கலந்துரையாடினார். "நீங்கள் என்ன பணிக்காக வரவழைக்கப்பட்டுள்ளீர்கள் என்பது எனக்குத் தெரியும். உங்களுடைய பணிக்குரிய நாள் வரும் வரை எங்களுக்கு இன்னுமொரு பணி செய்து தரவேண்டும். அதுவும் ஒரு பொறுப்பு மிக்க பணிதான். சமையற்பணிதான் அந்தப் பணி. இது உங்களுக்குப் புதிய இடம். கண்டபடி வெளியே செல்லாதீர்கள். எங்களுடைய வெற்றிக்கு உங்களது பூரண ஒத்துழைப்பை வழங்குவீர்கள் என்ற நம்பிக்கை எமக்கு உண்டு. இன்று மாலையிலேயே சமையல் பணியை தொடங்கலாம்" என்று அவர் சொல்லிக் கொண்டார்.

பூநகரி இராணுவ முகாம் தாக்குதலுக்கு உதவிப் பணிக்காக நாம் வந்துள்ளோம் என்ற உண்மை, அனைவருக்கும் தெரியலாயிற்று. எமது மாவட்டத்தை விட்டு ஏன் இங்கு எம்மை அழைத்துவந்தார்கள் என்ற கேள்வி அனைவரின் மனதிலும் ஒருமுறை தோன்றினாலும், அடுத்த கணம் அது மறைந்து போயிற்று. 'மணலாற்றுத் துணைப்படை (முல்லை மாவட்டம்) மன்னார் சண்டையில் பங்கெடுத்தார்கள் என்ற பெருமை மட்டுமல்ல, தமிழீழ மக்களை இது விழிப்படையவும் செய்யும்' என நினைத்துக் கொண்டோம். இதனைவிட எங்களை வளர்த்துப் பெருமை சேர்த்த அன்பண்ணனின் பிறந்த மண்ணை விடுவிக்கும் சண்டைக்கு வந்துள்ளோம் என்ற மகிழ்வு புதிய உற்சாகத்தைக் கொடுத்தது. எங்கள் பணி அவருக்கு எவ்வளவு மகிழ்ச்சியைக் கொடுக்கும் என்று நினைத்தபோது அனைத்துத் துயரங்களும் பறந்துபோயிற்று.

சண்டையுடனே தொடங்கும், ஓரிரு நாட்களில் வீடு திரும்பலாம் என நினைத்தோம். சமையல் அடுக்குகளைப் பார்த்தபோது, நாலைந்து நாட்களுக்கு நீடிக்கும் எனத் தெரிந்தது. ஒவ்வொரு நாள் இரவும் புதிய அணிகள் வந்துகொண்டிருந்தன. அதற்கு ஏற்ப சமையல் அளவும் அதிகரித்தது. எட்டாம் திகதி காலையில் இருந்து சமையலைத் திட்டமிட்டு நடத்த வேண்டியிருந்ததால், நான்கு அணிகளாக பிரிந்து சமைக்கத் தொடங்கினோம். தொடர்ச்சியான சமையல் சற்றுக் களைப்பை வைத்தது. ஆனால் எமது போராளிகள் இரண்டு மூன்று மாதங்கள், இரவு பகல் எனப் பாராது எடுத்த கடுமையான பயிற்சியை நினைத்தபோதெல்லாம் களைப்புத் தெரியாது போயிற்று. ஒருவாரத்துக்கு மேலாகிவிட்டதாலும், புதிய பழகிய போராளிகள் பலர் வந்து உரையாடத் தொடங்கியதாலும் வீட்டு நினைவுகள் மறந்து போயின.

**1993-11-9** ஆம் நாள் செவ்வாய்க்கிழமை. காலையில் மூத்த தளபதி சொர்ணமும் எமது மாவட்டத்தின் தளபதியும் வந்தனர். சலிக்காத எங்களின் பணி அவர்களை மகிழ்வடையச் செய்தது. உற்சாகம் தரும் வகையில் எம்முடன் கலந்துரையாடிவிட்டு, நாளைக் காலையில் மீண்டும் சந்திப்பதாக சென்றிருந்தனர். சண்டை நாளை தொடங்கும் என்பதை அனைவரும் எதிர்பார்த்தோம். ஏனெனில் அதற்கான இறுதி நடவடிக்கைகள் நடைபெற்றுக் கொண்டிருந்தன. தொடர்ச்சியான நெருப்பு வெக்கையில் நின்றதாலும், குளிப்பதற்கு நல்ல தண்ணீர் இல்லாமையினாலும் எம்மில் பலருக்குக் காய்ச்சல் கண்டிருந்தது. அருகே இருந்த மந்துக் காட்டில் மழைக்குத் தேங்கிய தண்ணீரை குளம் என்று சொல்லி பலர் குளிக்கச் சென்றார்கள். அதைக் குளம் என்று சொல்வதைத் தவிர வேறுவழியில்லை. அதன் பக்கத்தில் நாலைந்து நாவல் மரங்கள் நன்கு பழுத்துநின்றன. நாவலும் எம் வீரர்களும் பட்டதே பாடு. இரண்டு நாட்களில் மரத்தை வெட்டை கண்டார்கள்.

**1993-11-10** ஆம் நாள் புதன்கிழமை. காலையிலிருந்து சமையல் பணியிலிருந்து எமக்கு ஓய்வு தரப்பட்டது. நோயாளிகள் தவிர்த்து அணிகள் சீர் செய்யப்பட்டன. 9ம் திகதி இரவு வவுனியா, கிளிநொச்சி மாவட்டங்களில் இருந்தும் துணைப்படை அணிகள் வந்தன. காலை உணவுக்குப் பின் சொர்ணமண்ணனும், எமது மாவட்டத்தளபதியும் வந்திருந்தனர். அனைவரும் அணிவகுத்து ஓரிடப்படுத்தப்பட்டோம். சொர்ணமண்ணன் எங்களுடன் கருத்துக்களைப் பரிமாறிக் கொண்டார்.




இன்றிரவு நாம் பூநகரி இராணுவத் தளத்தை தாக்கியழிக்கப் போகின்றோம். இத்தாக்குதலில் வெற்றி எங்களுக்குத்தான் என்பதில் சந்தேகமில்லை. இந்தப்படைமுகாமில் ஒரு கேணல் உட்பட இரண்டாயிரம் இராணுவத்தினர் வரை இருக்கின்றனர். ஒருநாள் அல்லது இரண்டுநாள் அல்லது மூன்று நாட்கள்கூட இந்தச் சண்டை நீடிக்கலாம்; ஆனால் வெற்றி எங்களுக்குத்தான். நாம் அடித்து முன்னேறிக்கொண்டிருப்போம். காயமடைந்த வீரர்களையும்,

**"உங்களை நம்பி ஏணிப்<br>உறுதியாய்ப் பிடித்துக்<br>தளபதி சொர்ணம் கேட்<br>ஓங்கி ஒலித்தது.**

இராணுவத்தின் படைக்கலங்களையும் உடனுக்குடன் நீங்கள்தான் எடுத்துச் செல்ல வேண்டும். நீங்கள் சண்டைக்கு இறங்கத் தேவையில்லை. தேவையான வீரர்கள் அதற்காக இருக்கிறார்கள். நீங்கள் செய்ய வேண்டியதெல்லாம் இராணுவ உபகரணங்களையும், எமது காயமுற்ற வீரர்களையும் வேகமாக வெளியே எடுத்து வருவதுதான். நீண்டதூரம் இவற்றையெல்லாம் நீங்கள் தூக்கத் தேவையில்லை. உள்ளே நூற்றுக்கணக்கான உழவு இயந்திரங்கள் வருவதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. அவற்றையும் நீங்கள்தான் ஓட்டிச் செல்லப் போகின்றீர்கள். இந்த வெற்றி எமது விடுதலைப் போரினை புதிய பாதைக்கு இட்டுச் செல்லும். புலிகளின் கழுத்து நெரிக்கப்பட்டு விட்டது; அவர்கள் அழிக்கப்பட்டுவிட்டார்கள் என்று கருதும் சிங்கள அரசுக்கும் இராணுவத்திற்கும் எமது பலம் எத்துணை வலிமையானது என்பதை செயல் மூலம் எடுத்துக் காட்டப் போகின்றோம். எமது இந்தத் தாக்குதலின் வெற்றிக்கு, மண்கிண்டி இராணுவ முகாம் தகர்ப்புக்கு எவ்வாறு ஒத்துணையாக இருந்து செயற்பட்டீர்களோ அதேபோன்று செயற்பட வேண்டும். செயற்படுவீர்களா?" என்று கேட்ட கேள்விக்கு,

# துணைப்படையினர்



"ஆம்" என்று அனைவரும் ஒருமித்துப் பதில் கூறினார்கள். "உங்களை நம்பி ஏணிப்படிகளில் நாங்கள் ஏறலாமா? ஏணியை உறுதியாய்ப் பிடித்துக் கொள்வீர்களா?" என்றபோதெல்லாம் உற்சாகமாக, "ஆம்" என்ற குரல் ஓங்கி ஒலித்தது.

மாலை 4. 45 மணியளவில் சத்தியப் பிரமாணத்துடன் படை நகர்வுகள் ஆரம்பமாகின. மாலை 6. 00 மணிக்கெல்லாம் மழை கொட்டத் தொடங்கியது. என்றுமில்லாதவாறு அன்று

> களில் நாங்கள் ஏறலாமா?
> ாள்வீர்களா?" என்று
> போது, "ஆம்" என்ற குரல்

வானம் இடிந்துவிழுவது போன்று ஊற்றியது. நனைந்தபடியே முகாம் நோக்கி ஓடிக்கொண்டிருந்தோம். மழைக்காகக் காத்திருந்தால் இலக்கைத் தவற விடவேண்டி ஏற்படும். எதிர்நீச்சல் போட்டே வெற்றி கண்டு பழகிப் போன போராளிகள் அல்லவா!

பாழடைந்த பிரதான வீதி எங்கும் வெள்ளம் தேங்கிநின்றது. கொட்டும் மழையிலும் இலக்கினை நோக்கி ஓடிக் கொண்டிருக்கும் பெண் போராளிகளைப் பார்த்தபோது, எங்

**மணலாறு விஜயன்**

களுக்கெல்லாம் புதிய வேகம் பிறந்தது. எறிகணைகள், கனரக ஆயுதங்கள் என்பவற்றைச் சுமந்து கொண்டு எவ்வளவு வீராவேசத்துடன் ஓடிக்கொண்டிருந்தார்கள்! உலகில் எந்தவொரு நாட்டிலும் இத்துணைப் பலம் வாய்ந்த பெண்கள் படையணி இருந்திருக்க முடியாது. இரவு 10 மணிக்கெல்லாம் இராணுவ முகாமை அண்மித்துள்ள இடங்களில் நின்றிருந்தோம். எம்மைத் தாண்டி எம் தியாகக் குழந்தைகள் முன்னேறினர். வயல்வெளிகள் எங்கும் வெள்ளம் தேங்கிநின்றது. மழை விட்டிருந்தது. இராணுவ முகாம்களைத் தாக்கும் எல்லைக்குள் செல்வதற்கு அன்றைய இயற்கையின் செயல் பெரிதும் சிரமத்தைக் கொடுத்தது. இருப்பினும் பல மாதங்கள் அவர்கள் எடுத்த பயிற்சியின் முன்னே அது தூசாகி விட்டது. இராணுவ முகாமில் சுழன்று கொண்டிருந்த தொலைத்தூர ஒளிபாய்ச்சும் மின்குமிழ் தன் வேலையைச் செய்துகொண்டே இருந்தது. இடையிடையே இராணுவத்தினர் தாம் விழிப்புடன் இருப்பதை துப்பாக்கி வேட்டுக்களால் காட்டினர். இது எங்களுக்குப் புதுமையாக இருந்தாலும் எம் வீரர்களுக்குப் பழகிப்போனதொன்று.

நடுஇரவு தாண்டிவிட்டது. திடீரென துப்பாக்கிகள் பல வேகமாக இயங்கத் தொடங்கின. கடிகாரத்தைப் பார்க்கின்றேன். 1. 35ஐ காட்டியது. அனைத்துத் திசைகளிலும் வெளிச்சக் குண்டுகளைப் படையினர் வீசினர். திரும்பும் திசையெங்கும் எறிகணைகளும், துப்பாக்கிக் குண்டுகளும் வீரமுழக்கம் செய்தன. உடலில் உள்ள ரோமங்கள் குத்தி நின்றன. சில மணித்தியாலங்களில் எங்களின் பணி ஆரம்பமாகியது. காயமுற்ற எமது வீரர்களை, உயிர் கொடுத்த எமது உத்தமர்களை சுமக்கத் தொடங்கினோம். எங்களது வேகத்தை விட எமது வீரர்கள் பல நூறு மடங்கு வேகத்துடன் முன்னேறிக் கொண்டிருந்தனர். வேதனை ஒருபுறமும் மகிழ்வு ஒருபுறமுமாக ஓடி ஓடிச் சுமந்தோம். எமது வாகனச் சாரதிகள் வேகமாகவும் சாதுரியமாகவும் இயங்கிக் கொண்டிருந்தனர். சிங்கள தேசத்தின் வான்படை விமானங்கள் அனைத்தும் முழுவேகத்துடன் செயற்பட்டன. அவற்றின் தாக்குதலைக் கருத்தில் கொள்ளும் மனோநிலை எவரிடமும் இருக்கவில்லை.

தூக்கம், துயர், களை மறந்து தாக்குதலில் ஈடுபட்டுக் கொண்டிருந்த எம் வீரர்களைப் பார்த்தபொழுது தலை சுற்றியது. கண்ணீர் பொங்கியது. சிரித்துச் சிரித்து எதிரியின் காப்பரணை நோக்கி ஓடினார்கள். வீரவிளையாட்டொன்று, வெற்றியும், சோகமும் நிறைந்த வீரசாகசம் ஒன்று நடந்து கொண்டிருந்தது. மக்களின் துயர் துடைக்க ரத்த வேள்வி ஒன்று நடந்துகொண்டிருந்தது. துப்பாக்கிக் குண்டுகளின் நடுவே புயலாய்ப் பாய்ந்துகொண்டிருந்த பெண் புலிகளைப் பார்க்கின்றேன். என்ன வீரம்! என்ன தியாகம்! இவர்களின் வீரத்துக்கு மலையை ஒப்பிடுவதா? வானத்தை ஒப்பிடுவதா? கடலை ஒப்பிடுவதா?....... விளங்காத விந்தையான வீரத்தைக் கண்டுகொண்டிருந்தேன். நான்கு திசைகளிலிருந்தும் வந்த வெற்றிச் செய்திகளை 'வோக்கி ரோக்கி'கள் முழங்கிக் கொண்டிருந்தன. அன்று பகல் வந்ததும், பின் இரவு வந்ததும் பிரமை போலிருந்தது.

நாகதேவன்துறை கடற்படைத் தளமும் ஏனைய மூன்று படை முகாம்களும் அன்று முழுமையாக அழிக்கப்பட்டு இருந்தன. எஞ்சியிருந்த ஒரு படை முகாமை தாக்கியழிப்பதற்கான புதிய சண்டைகள் அன்றிரவே ஆரம்பமாகின. அன்றைய இரவு தான் எம்மையெல்லாம் வளர்த்தெடுத்த அன்பண்ணனின் வீரம் அவர் பிறந்த மண்ணில் விதையாகின்றது. நடுஇரவு தாண்டி விடிகின்ற காலையில் அவர் முடிவு எம்மை எட்டுகின்றது. பசி மறந்து களைமறந்து தூக்கம் மறந்து அழுதோம். அழுதால்தான் மனம் ஆறும். துணைப்படையை உருவாக்கி, எல்லையில் எம்மைத் துணிவோடு நிறுத்தி வேண்டியபோதெல்லாம் விரும்பிய துப்பாக்கிகளைத் தந்து, திசை மாறி நின்றவர்களுக்கு நேர்வழிகாட்டி, பூநகரி வரை வரும் துணிவைத் தந்து வளர்த்த 'அன்பு' அண்ணன் பிறந்த மண்ணில் மரணிக்கும் பாக்கியமும் பெற்றுவிட்டார். கண்முன் மறையாது நிற்கும் அந்த களநினைவுகளில், கடல்நின்று களம் வென்ற கடற்புலிகளின் வீரத்தை எழுதுவதா....? எதிரியின் உடல்மீது ஏறிநின்று 'புறம்' பாடிய பெண்புலிகளைப் பற்றி எழுதுவதா....? வான்படை வட்டமிட, வைத்த அடி நகராமல் சிங்களத்தை சிதறடித்த வீரப்புதல்வர்களின் விந்தைகளை எழுதுவதா...? எதிரியின் டாங்கியை எடுத்து ஓடி வந்த எங்கள் மறக்குலத்தின் வேகத்தை எழுதுவதா...? நாமென்ன எழுதுவது? உலக வரலாறே தன் சாதனைப் புத்தகத்தில் எழுதிவிட்டது!

வெற்றிமேல் வெற்றியை, துயரத்தின் சுமைகளை, இழக்கக் கூடாத எங்கள் 'அன்பை'ச் சுமந்தவர்களாய் நீங்காத நினைவுகளோடு 14ம் திகதி அதிகாலை மணலாறு நோக்கி எம் பயணம் தொடர்ந்தது. ■



## எல்லைகள் நோக்கி...

ஆதிக்கக் கரங்களால் பூமி சிதைந்தது.
அந்நிய ஆதிக்கம் ஈழத்தைத் தின்றது.
நம்பினோர் நெஞ்சங்கள் நெருப்பினில் வெந்தது.
நாளும் எம் தாயகம் நம்மை விட்டகன்றது.

வடக்கு கிழக்கின் வரலாறு பிரிந்தது.
வரலாறு, 'தமிழீழம் அந்நியனின்' என்றானது.
வந்தேறு குடிகளால் வரலாறு பிறழ்ந்தது.
வளமான தாய்நாடு பூகம்பம் ஆனது.

பொங்கும் தமிழினம் எரிமலை ஆனது.
பதியதோர் புலியினம் இங்கு உருவானது.
இளைய தலைமுறை இரந்தினிக் கேட்காது.
இம்சையால் எம் இதயம் என்றும் உருகாது.

தேசத்தின் வதைமுகாம் சிதைந்துமே மடியும்.
சிங்கள ஆதிக்கம் சிதறியே ஓடும்.
எங்களின் தேச எல்லைகள் நோக்கி
புலிமற வீரனின் பாதங்கள் விரையும்.

--- அன்பரசி

# கப்டன் துளசிரா !
# மீண்டும் உன்னுடன் பகிர்வதற்காய் நிறைய

**- சித்தா**

இருள் மௌனமாய்ப் பார்த்துக் கொண்டிருந்தது. ஆனால், அவர்களுக்கு அது ஒரு பொருட்டல்ல. நுளம்புச் சனியன் கை, கால், மூஞ்சி, ...... ச்சீ குத்திக் குத்தி மனுசற்றை உயிரை எடுக்கும். கை அடிக்க.... பற்கள் குளிரில் கிட்டிக் கொள்ளும். வயிற்றுக்குள் குளிர் பந்தாகச் சுருட்டி உள்ளுறுப்புக்கள் நடுங்கும் குளிர், ஆனால்......?

ஆ....ச்....ஐயோ, தும்மல் வாய்பிளந்து மூக்குளைஞ்சு.... ஆ...ச்... தும்மக்கூடாது; இல்லை நிச்சயம் அடக்கியபடி.....

பாம்பு ஒன்று நொளுநொளெண்டு வளுவளுத்தபடி முதுகாலை வழிய.... ஆட்டி விழுத்தலாம்....? உடல் கூசி.... ஐயோ அசையக் கூடாதே! அசைஞ்சா? அசையக்கூடாது அவ்வளவுதான்!

பசியோடு தாகம்..... விழி நித்திரைக்கு யாசிக்கும். விழித்திரு..... விழித்திரு உனக்கு நிறைய விடயம் தேவை. நிறையப் பொறுமை தேவை.

அந்த இருளில் நிழலோடு நிழலாய்.... கருமையோடு கருமையாய் ஓ! எங்கள் துளசிராவும் அதில் பச்சையாய் அந்தப் பெண் வேவுப்புலி கண்கள் சுழல ... காதுகள் தீட்டியபடி எதை எதைப் பார்க்கும்? எதிரியின் நகர்வு, ஆயுதம்.... எல்லாமே தேவை அவளுக்கு. அது முக்கியமானதும் கூட. மீண்டும் ஊர்ந்து.... அது எப்படி முடிந்தது இவளால் இவ்வளவு துரிதமாய்....? ஆச்சரியம் தரும் பெண் துளசிரா.

ஆழ்ந்து சதா சிந்திக்கும் கண்கள். சற்றுக் கோபத்தைப் பூசிய மிடுக்கான முகம். அன்பு இதயத்தில் இருந்தும் வார்த்தைகளில் கடுமை பூசி அனுப்பும் துளசி, எதையோ எழுதியபடி.... எதையோ தோழிகளுடன் பகிர்ந்தபடி.... எதையோ வாசித்த ... எதையோ அல்ல, வீரமும் தியாகமும் நிறைந்த கியூபா புரட்சி வீரன் 'சேகுவேரா' பற்றியோ கரிபால்டி, லெனின்..... அந்த வரிசையில் அமைந்த புத்தகங்களில் வரும் மனதைத் தொடும் சம்பவங்கள், வாக்கியங்கள்.... சகதோழியருடன் பகிர்ந்தபடி....ஓ! அது எங்கள் துளசிராவால் முடியும். அது அவளேதான்.
"தத் தெய்தாம் தித் தெய்தாம்" ஜதியின் ஒலியில் நனைந்தபடி நீ ஆசானாய் அபிநயித்தபடி... உன் தோழியர் ஆர்வத்துடன் பழகியபடி....

---

"இவ்வளவு இன்பங்கள் தொலைந்தது யாரால்?" கவிதை முழங்கும். திரும்பிப் பார்த்தால், அட.... நம்மடை துளசிரா.

"பாலஸ்தீன விடுதலை இயக்கத்தின் தலைவர்....?" கேள்விகள் தொடர்வது அதுவும் எங்கட துளசிராதான்.

வேவு நேரத்தில்,. "மூதேவி மாதிரிக் கிட்ட வாரான் அசையாதை" எனக்கூறி, தனியாக தான் மட்டும் முன்னால் ஊர்ந்து ஊர்ந்து .... தோழியின் காதில் கிசுகிசுப்பாய்க் கூறியவள் முன் பக்கம் கிடப்பாள்.

ஒருநாள் சாப்பாடு சரியாக வராததால் அவர்கள் அனைவரும் சோர்ந்தபடி.,.... "என்ன விசரப்பா மனுசனுக்குப் பசிக்குது". சிணுங்கிய அந்தச் சிறியவளை துளசி அழைத்து "பசிக்குதா? பசியை நினைக்காதேங்கோ... வேவுப்புலிகள் இப்படிச் சோரக்கூடாது, மனதைத் தைரியப்படுத்துங்கோ, அண்ணாவை நினையுங்கோ. எவ்வளவு கஸ்டம், துன்பம்....". தொடரும் அவளின் வார்த்தைகள், பசியை மட்டுமல்ல சோர்வையும் விரட்டும் தன்மை வாய்ந்தவை. துளசி, உன்னால் எப்படி முடிந்தது? நீ வாழ்க்கையில் நிறைய அனுபவங்கள் கண்டவள்போல்.... இனியார்? இப்படி அவர்களுடன் கதைச்சு...?

கரிபால்டியையும், கியூபாப் புரட்சியின் ஆன்மார்த்த உணர்வைத் தட்டும் சம்பவங்களையும் கோர்வையாய் கண்கள் மின்ன மின்னச் சொல்லும் துளசிரா நீயா...? சோர்ந்து போகும் தருணம் விழி ஏங்கி.... முகம் வானம் பார்த்து.....

ஓ துளசி! நீ நினைப்பது....

"அம்மா, என்ரை குஞ்சம்மா! என்னை மன்னி, நீ சீவியத்துக்கு என்ன செய்வாய்? எனக்குத் தெரியும் உன் கஸ்டம். ஆனால்,,,," கண்கள் பனித்து பெருமூச்செறிவாய். மீண்டும் உன் நினைவு தொடரும்.....

"நிமிர்ந்திரு அம்மா உன் பிள்ளைகள் இருவர் போராட்டத்தில்.... என்னை மன்னிப்பாயா?" மானசீக உரையாடல் அது. நட்சத்திரம் இவளை அமைதியாய்ப் பார்த்துக் கண் வெட்டும். ஆறுதல் அளிக்கும். இவள் கவிஞை என்பதால்.....

துளசிரா எனும் தாமரைச்செல்வியை (இயற்பெயர்) கால் கொஞ்சி அரவணைத்து மகிழ்ந்திருக்க, 1973-08-17 அன்று அவள் அழகைப் பார்த்துப் பார்த்து ரசித்த சின்னமணி, தவமணி மலைத்து நின்ற நாளாய், அவள் பிறந்தாள். செங்கதிரவன் முகம் பார்க்கும் போது சீண்டும் கடலையும், வானத்து நீலத்தைப் பார்த்தபடி நிமிர்ந்த பனைகளும், மணல் திடல் அராபியப் பிரமைதரும் வடமராட்சியின் கிழக்குப் பிரதேசமான வல்லிபுரக் குறிச்சி கிராமம் இவளை புதுப் பிரசையாகச் சேர்த்துக் கொண்டது.

சிறிது காலத்தின் பின், பசுமை படுத்திருந்து சிரிக்கும் கிளிநொச்சியின் 3ம் வாய்க்காலில் உன் சிறிய குடும்பம் குடியேறியது. உன்னுடன் ஓடிப்பிடித்து விளையாடி குதூகலித்திருக்க இரு தங்கை ஒரு தம்பி.... என்ன இனிமையான அந்த நாட்கள்! அப்பாவின் தோள்களில் தூங்கி.... அப்பாவுடன் நொடுநொடுத்து, ஆயிரம் கேள்விகள் கேட்டு....

அம்மாவின் குங்குமமும் அவர்கள் சந்தோசம் அனைத்தையும் வழித்தெடுத்தபடி, அவள் அப்பா1989 இல் காலமானார். அப்பாவைத் தழுவி மாலை போட்டு, சந்தனம் சாத்தி... அம்மா, அவள்தான் எவ்வளவு துன்பத்தையும் தாங்கியவள். "என்னை, தன்ரை கஸ்டத்தின் விடிவெள்ளியாய் நினைத்து கனவு நிறைச்சு ஏங்கியபடி...." என் கலங்கி உரைத்து மௌனித்தழும் துளசிரா.

"அப்ப துளசி ஏன் இயக்கத்துக்கு நீங்கள்...?" என வினவினால், "சீ, அது எனது கடமை, எனக்கு வீட்டுக் கஸ்டத்தைவிட நாடு..." தொடரும் அவளது உறுதி. "ஆனா தங்கச்சியும் என்னைப் போலவே... அதனால் சந்தோசம். அவள் இறுதிவரை போராட வேணும். இது என்ர விருப்பம்.... ஏன் கடைசி, விருப்பமும் கூட" எனக் கூறும் துளசிரா.....

தங்கைக்கு உணர்வும் அனுபவமும் பகிரும் கடிதங்கள்... ஓ துளசி, நீ வித்தியாசமானவள்தான். அந்த மௌனத்தில் எத்தனை அர்த்தங்கள் அம்மா!

துளசிராவைப் புதுப்போராளியாக மாற்றியது அந்தக் காடு. 13வது பயிற்சி முகாம் அது. அவள் படுத்திருந்து 'நிலை' எடுத்த மரம், பதுங்கித் தாக்குதலுக்காய் படுத்திருந்த அந்தப் புல்வெளி ...... அவள் படுத்தபடி நிமிர்ந்து பார்த்து கற்பனையில் மிதக்கும் அந்தச் சிறு குடில்.... மரங்களின் இடையில் சிரிக்கும் அந்த நட்சத்திரம்.... எல்லாம் அவளுக்கு அடிக்கடி கியூபாப் போராட்டத்தை நினைவுபடுத்துவதாய்.... முழுப் போராளியாய் திறமையும் ஊக்கமுமாக, துளசி எதிரியுடன் யுத்தமாட ஆரம்பித்தாள்.

மாங்குளம் எம்மவர் கைகளில் வீழ்ந்தபின் அதைப் பாதுகாக்கும் குழுவுடன் இவளும்....
ஆ. க. வெ. தாக்குதலில் எதிரியின் அங்குல நகர்வுக்கும் பதிலடி கொடுத்த பெண்புலி அணியில், இவளும் மூர்க்கமாக......

'மின்னல்' - எங்கள் இதயபூமியில் தாண்டவமாடிய எதிரி நடவடிக்கையில் எதிரியைக் காலொடித்து விரட்டியவர்களில் இவளும் முன்னணியில்....

எதில் நீ உன் திறமையைக் காட்டவில்லை? 'மின்னலில்' காலில் காயமுற்ற நீ சிறுகால ஓய்வுக்குப் பின்..

வேவுப்புலியாய், அப்பப்பா இவளுக்கு எத்தனை அனுபவங்கள்... மழையில் நனைந்து, வெயிலில் காய்ந்து... இருளில் இருளாக.... இலையாகி கருகாகி... கட்டையாகி..... ஏதோ ஏதோவெல்லாம் இவர்களால் எப்படி? ஓ, இவர்கள் வேவுப்புலிகள். எத்தனை சகிப்புத் தன்மை வேண்டும் இவற்றுக்கு. துளசி, உன்னிடம் அது நிறைந்திருந்திருந்தது. உன் விழிச்சிவப்பு அது கூறும்.

இரவு தரும் தனிமை. அந்த மௌனம் தரும் பயங்கரம். கட்டைகள் எதிரியாகி உருவகிக்கும். பயம் தரும் உருவமாக... திக்கென்று இதயம் அடித்துக் கொள்ளும். இதயம் கழன்றுவிழும்போல்... அந்தச் சரசரச் சத்தம். ஒருவேளை அந்த இழவு விழுவானோ? கிட்டக் கிட்ட அண்மிக்கும் அந்தச் சத்தம் 'சடார்'... இதயம் லப்டப்.. லப்டப்..ப்... நின்றுவிடும்போல் உதறிக்கொள்ளும். அந்த 'அரியண்ட' உணர்வு. இது சாதாரணமாய் ஏற்படும் அனுபவம். இதை இவளும் இவள் தோழிகளும் நிதானமுடன் மிகுந்த சகிப்புத் தன்மையுடனும் பிரித்தறிந்து, அலுக்காமல் இருக்கும் உறுதி துளசி, நீ இதில் ஊறியவள்.

குளித்து பல நாள் கூட இருக்கலாம். எத்தனை இரவுகள் நித்திரை இழந்து சிவந்து போன கண்கள். அலுப்பற்ற தொடர் பயணம். ஊர்ந்து ... நடந்து.... கிடந்து.... மறைந்து.... அவன் 'அசிங்கங்களின்' மேல் படுத்தபடி கூட எடுத்த தகவல்கள். பகலில் அவற்றின் சாயல்கள் கூட இன்றி துறுதுறுத்தபடி துளசி.... உன்னால் எப்படி இவற்றைத் தாங்க முடிந்தது? அதுவும் அறுவையும் சிரிப்புமாக.... எம் துளசியே. உன்னை இழந்துவிட்டோமோ நாம். ஏக்கம் இதயத்தில் வந்தமர்ந்தது.

எத்தனை தடவை துளசியும் குழுவும் அதிர்ச்சியான சம்பவங்களை அலுக்காமல் அநுபவித்துவரும்! நீண்ட நாள் எதிரியின் எல்லையுள் .... இரவில் தம் வீட்டு முற்றத்தில் திரியும் இரவுப் பிசாசுகள் போல்..... கண்கள் கழன்று... காதுகள் திரும்பி ஒலி சேகரிக்கும். இரவில் எதையோ தேடும்.. அது தடயமாக.... எதிரியின் நடவடிக்கையாய்... அவனின் ஆயு.... மொத்தத்தில் எல்லாமே உனக்குத் தேவை. உன் தகவல் சேகரிப்பும் துணிவும் உன்னை சண்டைக்கான சிறந்த வழிகாட்டியது உண்மை. அதனால்தான் உன்னை பத்தமேனிச் சண்டையில், உன் நகர்வு.... மிகவும் நுணுக்கமான உன் போர்த் தந்திரம்.... பொறுமை, கண்ணில் காயமுற்ற போதும் நீ மற்றவர்களுக்கு உதவிய உன் பண்பு, தாங்கும் தன்மை.... நீ வேவுப் புலிதான்; அதுவும் பெண்புலி.



கம்பிவேலி தாண்டும் இவர்கள் பாதங்களில் ஒன்றை எதிரி கண்ணிவெடி பதம் பார்க்கும். இழுத்தபடி... அல்லது உயிரைத் தியாகம் செய்யும் அந்தப் புனித யுவதிகளாய்.... கண்ணும் மனமும் பலநாள் பார்த்திருக்கும். எதிர்பாராமல் அது நடந்தது. 'அட விசரன் மாதிரி போக்கஸ் அடிக்கிறான். கிட்ட கிட்ட இவர்களுக்கு அண்மையில் அவன் அட! பத்து யார் இருக்குமா? இல்லை! மூன்று நாலு யார்.... அசையாமல் இறுகியபடி.... அப்பாடி. அங்காலை? 'அசிங்கம்' பண்ணியவன் மீண்டபோது, இதயமும் மூச்சும் இயங்கும். ஒருவேளை அவன் கண்டால் சிதறும் உடல், சிவந்த தசைத் துகள்களாக்கிக் கொள்ளும் தியாகம், துளசிரா நீ எத்தனை இரவை இப்படிச் சந்தித்திருப்பாய்! இவை உன்னைப் பாதிப்பதில்லை. நீ ஓர் திறமையான வேவுப்புலி. அதிலும் பெண்களில் தன்மானம் கூடியவள் நீ.

இவர்கள் மாயப் பிசாசுகள் போல் திரிவது எதிரியின் கண்ணிவெடி விதைத்த வயல்களுக்குள்தான். அதில் பாதை அமைத்து மரணத்தை இருமருங்கிலும் ஒதுக்கிச் செல்லும் துணிவுமிக்கவர்கள்.

இவ்வளவும், இவளை பூநகரிக்கும் வேவுப்பணிக்கு அமர்த்தக் காரணமாய் அமைந்தன. கால்கள் நடந்தன. கண்கள் துருவின; கைகள் ஸ்பரிசித்தன; காதுகள் கேட்டன. இருளிலும் தேடிய மறைந்து கிடந்த எதிரியின் அத்தனை விடயமும் தகவல்களாக ... அவை சண்டையாக உருவகம் பெற்று நிமிர்ந்து நின்றது துளசிபோல்.

"அங்கைபார் இந்த 'போக்கஸ் லைற்' சண்டை முடிந்து திரும்ப நாம் வரும்போது மானமிழந்துவிடும்." எத்தனை கனவடி உன் கண்களில். ஏன் திரும்பி அதை நீ பார்க்காமலே.... உன்னை நாம் இழந்துவிட்டோமே துளசிரா.

பூநகரியில் - அந்த ஜில்லித்துப் போன பனித்த இரவு. படையணிகள் பல அணிகளாய் நகர்வதில்.... ஒரு அணிக்கு இவள் பாதை காட்டி நகர்ந்தாள். உறுதியான உன் நகர்வும் உன் நாவு சொன்னதுபோல் சரியான வெளி. அவ்விடத்தை அடைந்தது அணி. கம்பிக் கட்டுக்கு நீ வைத்த 'டோபிடோ' காலை வாரியதால் ஒன்றும் பிசகி நிற்கவில்லை. மாறாய், மாற்றுவழி தேடியது உன் கூர்மதி. கைகால் அத்தனை துரிதமாய், வேகமான பெண்ணாய் இயங்கிய உன் யுத்த அறிவு, அத்தனை 'பொயின்ற்றும் கிளியர்' பண்ணியது உன் கிரனேற்றுக்கள், பாதையமைத்து விரைந்தாய்; சுழன்றாடினாய்; களம் உன்னைப் பார்த்துத் திகைத்தது. உன் திறமையை நெடுக நெடுக உரைத்து நிமிரும் உன் தோழியர் கண் சிவந்தது. எதனால் துளசி? உன்னை இழந்தோமே .... அதனால்.

உன் கண்களுக்கு தமிழீழத்தை பார்க்க ஆசை. ஆனால் நீ இறந்த பின் போராளிக்கு அவற்றை அளிக்கச் சொன்ன உன் நிமிர்வு, அண்ணாவை நினைவு கூர்ந்து பளபளக்கும் அந்தக் கண், வீட்டின் வறுமையில் வாடிச் சிவந்த அந்தக் கண், அறிவினில் ஜொலித்திருக்கும் உன் கண்கள். துளசி, நீ நிறையத்தான் கனவு சுமந்து நடந்தாய் பூநகரிக்கு. நினைவு இழந்து உயிரிழந்த உன் உடல்... அதே நிமிர்வுடன்தான் துளசி இருந்தது.

'போக்கஸ்' லைற் இல்லை. உன் நினைவுபோல் பூநகரி வீழ்ந்தது. எத்தனை உறுதியுடன் கூறிநின்றாய் துளசி!

இறுதிக்கணத்திலும் உன் இனிய இதயம் அந்தப் பாடலை ஏன் கேட்டது?

காற்றே நீயும்தானே பார்த்தாய் அவள் அழுவதை, ஏன்.. ஏன் அழுதாள்?

சாவுக்கு நீயே தேதி குறித்தாயா? அல்லது சாவு உனக்கு தேதி குறித்ததா?

"தாயக மண்ணின் காற்றே நீயும் மூசம்மா நான் சாகும்நேரம் கடலே நீயும் மூசம்மா" பாடிய

**தொடர்ச்சி 14ம் பக்கம் ....**

# கூண்டுக்கிளி

சிறுகதை

- மணலாறு விஜயன் -

செல்லக்குட்டியண்ணன் ஆர்மோனியப் பெட்டிக்கு முன் அமர்ந்திருந்தார். இப்போதல்ல, எப்போதுமே அவர் இசையினையும், இசைக்கருவிகளையுமே காதலித்தார். இசையைப் பற்றி அவர் எதுவுமே படிக்கவில்லை. ஆனால் அனைத்து இசைக்கருவிகளையும் இனிமையோடு இசைக்கக்கூடிய வல்லமையை தமிழன்னை அவருக்குக் கொடுத்திருந்தாள். பதிலுக்கு அவருடைய பிள்ளைகளை தன் விடுதலைக்காக எடுத்துக் கொண்டாள்.

செல்லக்குட்டியண்ணனின் விரல்கள் சுருதியை வருடின. அவருடைய நினைவுகளோ தொலை தூரத்திற்கு பறந்து சென்றது.

கொட்டுக் கிணற்றுப் பிள்ளையார் கோயில். அதனருகே சிறிய மலைக்குன்று; குன்றின் சாரலில் வயல்வெளிகள்; வயல்வெளிகளின் நடுவே அமைந்திருந்த ஓலைக்குடிசை.

அழகான இடம்; சுகமான காற்று; ஆற்றுப் படுக்கையைத் தொட்டுத் தழுவிவரும் குளிர்காற்றையும் பொருட்படுத்தாது அந்தக் குடிசை கலகலப்பாக இருந்தது. வேறொன்றுமில்லை. அன்று தைப்பூசம். தைப்பூசம் வருடாவருடம் வருவது தானே. அதற்காக இத்துணை மகிழ்ச்சியா?

வருடாவருடம் வரும் தைப் பூசத்தை விட மூன்று ஆண்டுகளுக்குப் பின் மூத்த மகன் வீட்டுக்கு வந்திருந்தான். அவன் என்ன வெளிநாட்டிலிருந்தா வந்திருந்தான்? இல்லை. இந்த மண்ணின் விடுதலைக்காக களத்தில் நின்றான். மகனைக் கண்ட மகிழ்ச்சி ஒருபுறமும், தைப் பூசநாளில் அனைவரும் வீட்டில் நிற்கின்ற மகிழ்ச்சி ஒருபுறமுமாக இரட்டிப்பு மகிழ்ச்சி அங்கு நிலவியது.

செல்லக்குட்டியண்ணன் வயலுக்குச் சென்று புதிரெடுத்து வெள்ளைத்துணியால் சுற்றிக் கொண்டு வந்தார். வரும் வழியில் கொட்டுக் கிணத்தானுக்கும் ஒருபிடி கதிர் வைத்துவிட்டுத்தான் வந்தார்.

புதுப்பானையில் புதிர்ப் பொங்கல் நடந்தது. நான்கு பிள்ளைகளுமே அன்றுதான் வீட்டில் ஒன்றாக இருந்து புதிர்ப் பொங்கல் உண்டனர். மனைவியுடன் பிள்ளைகளையும் சுற்றி இருத்திவிட்டு சாதத்தை கவளமாக்கி கைகளில் கொடுத்தார் செல்லக் குட்டியண்ணன். அன்று அவர் மனம் அளவற்ற மகிழ்ச்சியில் இருந்தது. எல்லோரும் கூடி உண்டு மகிழ்ந்த பூசம் அதுதான். அதன் பின்னர் ஓராண்டில் மகனை மாவீரர் இல்லத்தில் மட்டுமே தரிசித்தார். மூத்த மகன் மட்டுமல்ல, இன்று இரண்டாவது மகனும் அங்குதான் துயில்கின்றான்.

"அப்பா, பள்ளிக்கூடம் விட்டு வரேக்கை இந்தியனாமி வழியில மறிச்சு சப்பாத்துக் காலால அடிச்சுப் போட்டானப்பா! பள்ளிக்கூடத்துக்குப் போறதுக்கும், வாறதுக்குங்கூட சுதந்திரமில்லாமல் செய்து போட்டாங்களப்பா" என்று அழுதழுதுகொண்டே வந்து சொன்னான் இரண்டாவது மகன். அன்றிலிருந்துதான் அவர் இரண்டாவது மகனையும் காண முடியாமல் போயிற்று; மூன்று ஆண்டுகளுக்குப் பின் சிலாவத்துறை இராணுவ முகாம் தகர்ப்பில் வீரகாவியமான செய்தி வந்தது. செல்லக்குட்டியண்ணனும் அவரது மனைவியும் கலங்கவில்லை. அவர்கள் கலங்கமாட்டார்கள். ஏனெனில் பசுமையான வயல்வெளிகளின் நடுவே இருந்த அவர்களின் குடிசை கண்முன்னாலேயே இராணுவத்தால் தீயிடப்பட்டது. அனைத்தையும் இழந்து இன்று அகதி என்ற முத்திரையோடு இருக்கின்றார்கள்.

கடந்துபோன நினைவுகள் அவர் நெற்றியிலும், கன்னத்திலும் வியர்வைத்துளிகளாய் அரும்பிநின்றன. துவாய்த் துண்டினால் துடைத்துக் கொண்டார். கடந்துபோன நினைவுகளை விட நேற்று நடந்து முடிந்த சம்பவங்கள்தான் அவரை நிலைகுலைய வைத்தது.

ஃ ஃ ஃ ஃ

கலையரங்கத்தினுள் கிளியொன்றைக் கொண்டுவந்து கூட்டினுள் அடைத்து வைத்திருந்தார்கள். இரண்டு நாட்களாக உணவு எதையும் அது உண்ணவில்லை. தன் உறவுகளுக்கு குரல் கொடுத்து அழுதுகொண்டேயிருந்தது. தன் துயரக் குரல் தன் இனத்துக்குக் கேட்கும்; அவை எப்படியும் தன்னை வந்து காக்கும் என்ற ஒரு நம்பிக்கை அதற்கிருந்தது.

"அந்தக் கிளியை சுதந்திரமாக வாழவிட வேண்டும். அதனைத் திறந்து விடுங்கள்" என்று அங்குள்ள அனைத்துக் கலைஞர்களையும் செல்லக்குட்டியண்ணன் கெஞ்சிக் கேட்டுவிட்டார். அவருடைய வேண்டுதலுக்கோ அல்லது கிளியின் துயரக்குரலுக்கோ எவரும் செவி சாய்க்கவில்லை. பொழுது கவிழ்ந்தது. செல்லக்குட்டியண்ணன் கிளிக்கூட்டினருகே சென்றார். தன்னுடைய விரல்களை கூட்டில் வைத்தார். தன்னுடைய சொண்டினால் அவருடைய விரல்களை கவ்விக் கவ்வி கண்ணீர் விட்டு அழுதது. மனந்தாங்கமுடியாத வேதனையோடு வீட்டுக்குச் சென்றார். இரவு முழுவதும் அவரால் தூங்கமுடியவில்லை.

விடிந்ததும் விடியாததுமாக கலையரங்கத்துக்கு விரைந்தார். அவருடை யமனதில் உறுதியான முடிவிருந்தது. கலையரங்கத்தினுள் மெதுவாக நுழைந்தார். அங்கு நிற்கின்ற நாய் தன் திட்டத்தைக் குழப்பிவிடுமோ என்ற ஐயத்தில் மனம் படபடத்தது. கிளிக்கூட்டை நெருங்கி விட்டார். ஓயாமல் அழுதுகொண்டிருந்த கிளியின் குரலைக் காணவில்லை. அழுது களைத்து உறங்கிவிட்டது போலிருக்கிறது என்று நினைத்துக் கொண்டே கூட்டைத் திறந்தார். அங்கே தன் சிறகுகளை அகல விரித்தபடி...... அது நிரந்தரமாக உறங்கிவிட்டது. கண்களில் வடிந்தநீர் காய்ந்து கிடந்தது. இனி அது பறக்காது.....

செல்லக்குட்டியண்ணன் சில நிமிடங்கள் நெஞ்சை இறுகப் பிடித்துக் கொண்டார். நிலைப்படியில் சார்ந்தபடி இருந்துவிட்டார். கிளிக்காக அழுதுகொண்ட அவர் மனதை அதிகாலையில் வந்த சியாமசெட்டி விமானங்கள் திசை திருப்பின. வீட்டுக்குச் செல்லவோ அல்லது நிலையெடுத்துக் கொள்ளவோ அவகாசம் இருக்கவில்லை. அந்தளவு வேகமாக வந்து மளமளவெனக் குண்டுகளை வீசிவிட்டு அவை மறைந்துவிட்டன.

செல்லக்குட்டியண்ணன் வீடுநோக்கி அவ்சரமாக நடந்தார், அழுகுரல்கள் கேட்டன. யாருடைய வீடாக இருக்கும்?.....

மணியத்தாரின் வீடுதான்.

மணியத்தாரும் மனைவியும் தலையில் அடித்து அழுவதும் விழுவதுமாக இருந்தனர். நடப்பதற்கு என்ன இருக்கிறது? மணியத்தாரின் இரண்டு மக்களும் சிதறிக்கிடந்தனர்.

இயக்கத்துக்கு போய்விடக் கூடாது என்பதற்காக அவர்களை எவ்வாறெல்லாம் வளர்த்தார். புதுச் சைக்கிள் கேட்டால் புதுச் சையிக்கிள்; புது உடுப்புக் கேட்டால் புதுஉடுப்பு, கேட்டதெல்லாம் வாங்கிக் கொடுத்தார். தேசவிடுதலைக்கு பிள்ளைகளைக் கொடுத்த தாய் தந்தையர்கள் பற்றி வாய்க்கு வந்தபடி விமர்சித்தார்கள். "மற்றவர்கள் போல் நாங்கள் பிள்ளைகளை வளர்க்கவில்லை" என்று பிள்ளை வளர்ப்பில் தாங்களே முன்னோடிகள் என்பதுபோல் பேசினார்கள். மண்கிண்டி சண்டையில் காயமடையும் வீரர்களுக்கு இரத்த தானமாவது கொடுப்போமெனச் சென்ற தமது பிள்ளைகளிரண்டையும் காலில் பிடித்து அழுதார்கள். "இயக்கத்துக்குப் போகவும் வேண்டாம். இரத்த தானம் கொடுக்கவும் வேண்டாம். அப்படிப் போவதாயின் எங்களது பிணத்தின் மேலாக ஏறித்தான் செல்ல வேண்டும்" என்றெல்லாம் தடுத்தார்கள். இன்று பிள்ளைகளின் பிணத்தின் மீது கிடந்து அழுகிறார்கள்.

நிலத்தில் படிந்த இரத்தக் கறைகளை எறும்புகள் மொய்க்கத் தொடங்கின. அந்தரத்தம் மண்ணில் ஊறிவிடக் கூடாது என்பதில் எறும்புகள் கவனமாக இருந்தன.

"இயக்கத்தில் போய் செத்திருந்தாலும் நாலுபேர் என்னைப் போற்றி இருப்பாங்களே..... மாவீரரின் தாயென்று வரலாறு எழுதியிருப்பாங்களே..." என்று மணியத்தாரின் மனைவி அறிவு மயங்கிய நிலையில் புலம்பிக் கொண்டிருந்தாள்.

'இழந்தபின் கிடைத்த ஞானம்' என்று மனதுக்குள் நினைத்துக் கொண்ட செல்லக்குட்டியண்ணன் அவ்விடத்தை விட்டு நகர்ந்தார். ஏனோ அவ்விடத்தில் நின்று அனுதாபம் தெரிவிக்க அவருடைய மனம் விரும்பவில்லை. கூட்டில் இறந்து கிடந்த கிளி; வீட்டில் சிதறிக்கிடந்த மணியத்தாரின் பிள்ளைகள்; இரண்டுமே மாறி மாறி மனதில் எழுந்து நிற்க வீட்டினை அடைந்தார். அவருடைய மனம் அமைதியை விரும்பியது. மூடிக்கிடந்த 'ஒகன்' இசைக்கருவியை தூக்கி மடியில் வைத்துக் கொண்டார். இரண்டு மூன்று தடவைகள் அது இசையெழுப்பியிருக்கும்.

பின்புறத்திலேயிருந்து இரண்டு மிருதுவான கரங்கள் அவரின் தோள்களைப் பற்றின. தனது மகள்தான் என்பது அவருக்குப் புரிந்தது. மெல்ல அவளின் கரங்களைப் பிடித்தவாறு அண்ணாந்து நோக்கினார்.

"அப்பா, நானும் இயக்கத்திற்குப் போகட்டுமா....? சும்மா இருந்தும் சாகிறதை விட நாட்டுக்காய் சாகலாமப்பா. அண்ணாக்களின்ர இடைவெளியை என்னால நிரப்ப முடியுமப்பா. என்னப்பா?..... போகட்டுமா?...."

செல்லக்குட்டியண்ணனின் கண்கள் நிரம்பின. மகளின் முகத்தைக் கண்ணீர் மறைத்தது. கூண்டில் இறந்து கிடந்த கிளியை நினைத்தார். மணியத்தாரின் பிள்ளைகளை நினைத்தார். அவரை அறியாமலே அவரின் தலை அசைந்தது.

கண்ணீரைத்துடைத்து விட்டு மகளைப் பார்த்தார். அவள் அங்கு இல்லை. செல்லமாய் வளர்த்த கிளி. சுதந்திரத்துக்காய் தன் சிறகை விரித்துவிட்டது.

இப்போது அவருடைய மனதில் அமைதி எற்பட்டது. கூண்டில் இருந்த கிளியை தான் திறந்துவிட்டதாயும் அது சுதந்திரமாக பறந்துவிட்டதாயும் ஒரு பிரமை.

"அப்பா, முத்தையன்கட்டுக்கு இண்டைக்கு இசைநிகழ்ச்சிக்கு போகவேணுமெண்டு சொன்னனீங்களல்லேயப்பா". கடைக்குட்டி மகனின் குரல் நேற்றைய நினைவுகளிலிருந்து இவரை திருப்பியது. மகனைப் பார்த்து சிரித்துக் கொண்டார். "இவனும் கூண்டுக் கிளியா? இல்லை. இவனுக்கு இன்னும் சிறகு முளைக்கவில்லை." என்று மனதுள் நினைத்தபடி புறப்படத் தயாரானார் செல்லக்குட்டியண்ணன். ■



## விடுதலை தேவி!

திக்குகள் அதிர
தீயவர் ஒழிய
பசியோடு வயிறது
பற்றியெரிய

விசுபருபமெடுத்த
விடுதலை நெருப்பே,

உந்தன்
அடிமுடி அறிந்து
அழிக்க முடியாமல்
பிரளயங்கள் அன்று
பின் வாங்கிச் சென்றன.

வெம்மையின் முன்னால்
வெற்றி கொள்ள முடியாமல்
வெறியர் படை
மிரண்டோடியது.

தேசத்தின் தாகமறிந்து
தீர்த்து வைத்த தியாகியே,
விடுதலைக்கு
மூச்சுக் கொடுத்தவளே,

காற்றுக்குள் உன்னை
காண்கிறது காலம்
தண்ணீருக்குள் உன்னை
தழுவுகிறது தமிழ்.
உணர்வுக்குள் உன்னை
உணர்கிறது உரிமை.

அந்தோ.....!
அண்டங்களின் ஐம்புலன்களின்
அறிவுக்கப்பாலும்
நீண்டு நீண்டு செல்லும்
நினைவானாள் பூபதி.

(அன்னை பூபதியின் நினைவுநாள் ஏப்ரல் 19.)




## அத்தியாயம் - 8

இரவுப்பொழுது ஓடிக்கொண்டிருந்தது.

எமது அணிகள் முகாமினுள் நுழைந்து தாக்குதலை ஆரம்பித்தது. எதிர்த் தாக்குதலின்மையால் எமது எதிர்ப்பை நிறுத்தி எச்சரிக்கையுடன் முகாம்களிலும் காவலரண்களிலும் நுழைந்தார்கள். அங்கொன்றும் இங்கொன்றுமாக இராணுவ உடல்கள் சிதறிக் கிடந்தன. சில கட்டடங்கள் எரிந்து கொண்டிருந்தன.

அதிகாலை 3.00 மணியளவில் முற்றாக முகாம் சல்லடையாகத் தேடப்பட்டது. அங்குமிங்குமாக ஆயுதங்களும் உடல்களும் சிதறிக் கிடந்தன. ஆயுதங்களை அப்புறப்படுத்தினோம். **எமது தாக்குதலுக்கு ஈடுகொடுக்க மாட்டாது கரும்புலித் தாக்குதலின் பின் எதிரிகள் முகாமை விடுத்து மலைக் காவலரணிற்கு அருகாக லக்சபானா மின்சாரத் தூண்களை அண்டிய காடுகளில் இறங்கி ஓடத் தொடங்கியதை ஊகித்துக் கொண்டோம்.** ஆயினும் அவர்களை இருட்டில் தொடர்வது ஆபத்தானது என்பதனால் பின்புறமாகச் செல்லவில்லை.

மறுதினம் காலைப்பொழுது மலர எமது வீரர்கள் இராணுவத்தை கனகராஜன் குளத்திற்கு முன்பாக வழிமடக்கித் தாக்குவதை வோக்கி மூலம் அறிந்தோம். உலங்குவானூர்திகள் இரண்டு அந்தக் காட்டுப்புறத்தைச் சுற்றி வட்டமிட்டுச் சுடுவது தெரிந்தது.

காலை 6.15 அளவில் முகாமில் மீட்பு வேலைக்காகச் சென்று கொண்டிருந்தோம். நாம் சென்ற பாதை வவுனியாப் புறமான பிரதான வீதியிலாகும். வீதியின் இருமருங்கும் மிதிவெடிகளை இராணுவம் தாறுமாறாக விதைத்திருப்பதனால். பிரதான வீதியை விட்டு இறங்கவில்லை. எமது பிரதான வீதிக் காவலரணைக் கடந்து செல்லச்செல்ல எமக்குள் ஒரு இனம்தெரியாத உற்சாகம் பிறந்தது. தொலைவில் நின்று ஒளித்து ஒளித்துப் பார்த்து, என்று எமக்குக் கிட்டும் என ஏங்கிய கட்டடங்கள், மாந்தோப்புக்கள், தென்னைகள், காவலரண்கள் எல்லாமே எமக்கு அருகருகாக வந்தன! ஏதோ ஒரு உந்துதலினால் ஓடிஓடிப் போனோம்!

உடைந்த சிதறிய காவலரண்களும், எரிந்துகொண்டிருந்த கடைக் காவலரணும் எம்மை வரவேற்றன. அருகே நின்ற வீரை மரம் எமது செல் வீச்சினால் முறிந்துபோய் வீதியைத் தடைபோட்டது. கடைக் காவலரணுள் சிலிப்பர்க் கட்டையில் மூண்ட தீ இன்னமும் விளாசி எரிந்தது. எரிந்து கிடந்த காப்பரணை எட்டிப் பார்த்தேன். மூன்று எதிரிகள் எரிந்து எலும்புக்கூடாகக் கிடந்தார்கள். அருகருகாக ரி.81 ரக துப்பாக்கிகள் எரிந்து இரும்புப் பகுதி எஞ்சிக் கிடந்தது.

"டேய் என்னை மட்டும் விட்டிட்டு நீங்கள் மட்டும் வந்திட்டியள், பொறுக்கியள்"! என மாஸ்ரர் பேசியபடி உற்சாகமாய் ஓடி வந்தார்.

கூப்பிட்டுப் பார்த்தும், நீங்கள் எங்கேயோ சப்பலுக்கு போட்டியள்"! என்று அழகு சொன்னான். அழகை நான் காட்டிவிட அவனைப் பேசித் திட்டினார்.

"இங்க ஓடியாங்கோ! முந்தநாள் அடியில எரிஞ்ச பொயின்ற் இதுதான். ஓடிவந்து பார்த்தார்.

"அட, அருமந்த ரைபிள்களும் எரிஞ்சு போச்சு. ஒரு தடி எடுங்கோ. தட்டி எடுத்துப் பார்ப்பம்".

"அது உதவாது. பரலெல்லாம் வளைஞ்சு போச்சு". தரையில் போட்டபடி கூறினேன். தொடர்ந்து கடைக்குள் இறங்கினோம்.

"உங்க பாருங்கோ" அவன் சாமான்களையும் கிற் பாக்குகளையும் தொப்பிகளையும் கொடியில் காயப்போட்ட உடுப்புகளையும் காட்டினார்.

"நியாயமான பேர்தான் இருந்திருக்கிறான்கள். வாங்கோ கடைக்குப் பின்னால் போய் கிணற்றடியைப் பார்ப்பம்".

"டேய்".

எங்கட பொடியளின்ர பொடியைப் பார்த்தேன். இரு போராளிகளின் சடலங்கள் ஒன்று ஒன்றை இழுத்தபடியிருந்தன. என்னை அறியாது கண்ணீர் திரை கட்டியது. வாத்தியார் வெறித்துப் பார்த்தார். "முந்தநாள் செத்த பொடியளின்ர பொடி போலக் கிடக்கு".

"ஓமடாப்பா, நல்லா உள்ளுக்க வந்து காயப்பட்டவனை தூக்கப் பார்த்திருக்கிறாங்கள்". வோக்கியை எடுத்து அறிவித்தபின் அருகில் சென்று பார்த்தேன். பின்புறமாக மாஸ்ரரும் நின்றார்.

முதலாமவன் நெஞ்சிலும் வயிற்றிலும் குண்டைத் தாங்கியிருக்கின்றான். தூக்க வந்தவனுக்கு நெற்றியில் இடது புறமாக பெரிய துவாரம் இருந்தது. பின்புறமாக மூளையோடு இல்லாமல் வெளியாக இருந்தது.

"மச்சான், அவசரப்பட்டு பொடியத் தூக்காதே, றிலீஸ் சுவிச் ஏதாவது வைச்சிருப்பான்". றிலீஸ் சுவிச் என்பது ஏதாவது பொருளின் கீழாக வெடிப்பொருளை அழுத்தி வைப்பதாகும். கனமான பொருள் அகற்றப்பட்டவுடன், வெடிப் பொருள் வெடிப்பதற்கான அதிர்வு வழங்கித் தொழிற்படும். இது பலத்த சேதத்தை உண்டுபண்ணக் கூடியது.

ஏற்றமுறையில் இரு சடலங்களையும் ஆராய்ந்தபின், கடைக்குள் ஆளுக்கொருவராய் தூக்கிச் சென்று சீமெந்தில் வளர்த்தினோம். இரு சடலங்களிலும் ஏராளமான துப்பாக்கி கத்திக் குத்துக்களை அவதானிக்க முடிந்தது.

"பார்த்தியளே எங்கட பொடிக்கு எவ்வளவு பைனட்சாச் பண்ணியிருக்கிறான்கள். தங்கட வெறிப் புத்தியை பொடியிலை காட்டிட்டுத்தான் போயிருக்கிறான்கள்" என்று கூற, மாஸ்ரர் வெறித்தபடி நின்றார். "எங்கே போகப் போறிங்கள் காட்டைவிட்டு"!

தனக்குள் கறுவிக்கொள்வது எனக்குக் கேட்டது.

நெற்றியில் சூடுபட்ட போராளியின் வயிற்றுப்பாகம் தாறுமாறாக கிழிக்கப்பட்டுக் கிடந்தது. மற்றையதில் ஏராளமான பொத்தல்கள். ஒரு போர்முனை எத்தனைதான் உக்கிரமாக இருந்தாலும் போரில் பெரும் இழப்புக்களும் ஆத்திரமூட்டும் செயல்களும் மலிந்தாலும், எதிரி வீரனின் உயிரற்ற உடல் கிடைக்கப் பெறும் பட்சத்தில் கைப்பற்றிய வீரர்கள் பின்னர் ஊறு செய்ய மாட்டார்கள். தகுந்த மரியாதையுடன் இறுதிக் கிரியைகளை இராணுவ முறையில் செய்வது, எந்த இராணுவமோ அரசுகளோ தமது கடமையாகக் கொள்ளும் விடயமாகும்.

**ஆயினும் சிங்கள இனவெறியர்கள் இதற்கு முரணானவர்கள். தமக்கு இழப்புக்கள், தோல்விகள் ஏற்படும் பட்சத்தில் போராளிகளது இறந்த சடலங்களையே குதறுபவர்கள். இவர்கள் மக்களுக்குள் நுழைந்தால் எத்தனை பெரும் கொடுமைகளை இழைப்பர்?** அப்படியான செயற்பாட்டிலிருந்து அவர்கள் மீளமுடியாதவர்கள். இந்நிலையில் இவர்கள் போராளிகளில் இருந்து பெருமளவு வேறுபட்டு நின்றார்கள். அடக்கப்படும் மக்களை எதிரி மேலும் அடக்கையில்தான் எமது போராளிகள் முளைவிட்டுப் பெருகுகின்றார்கள். இதனை எந்த ஆதிக்க சக்திகளும் இறுதிவரை உணர்வதில்லை... உணரினும் உணராதவராய் நடிப்பர். இது அவர்களது இயல்பு.

இவ்விதம் போராளிகளது உடல்களைச் சின்னாபின்னப்படுத்துவதில் இவர்களுக்கு ஆத்ம திருப்தி ஏற்படுகிறது போலும்!

உடல்களை மூடிவிட்டபின் கிணற்றடியை நோக்கிச் சென்றோம். நிறைய உடைகள் கொடிகளில் சிதறிக் கிடந்தன. பலவற்றில் இரத்தம் கிடப்பது தெளிவாகத் தெரிந்தது. கிணறு பெரிதான சுற்றளவில் கட்டப்பட்டதாகத் தெரிந்தது. கட்டுக்கள் உயரமாகக் கட்டப்படாமல் ஆபத்தானதாக இருந்தன. அதனைக் கடந்து மாந்தோட்டத்தில் நுழைந்தோம். ஏராளமான மாங்காய்கள் சிதறிக் கிடந்தன. சில மரங்கள் முறிந்து சிதைந்து கிடந்தன.

"லியோ, இங்கபார், பிவ்ரி எம்ரியள் நிறையக் கிடக்கு"!

"ஓ, உதாலதான் அடிச்சடிச்சு வித்ரோ பண்ணியிருக்கிறான் போல"! கரையோர சிலிப்பர் கட்டைகளைச் சுட்டிக்காட்டினேன். அவை 50 கலிபர் சூடுகளிற்கு அரணாக இருந்தமையால் முன்னால் கிடந்த பற்றைகள் தொட்டந் தொட்டமாய் கருகிக் கிடந்தன. அவ்வடையாளம் நேராக மலைக் காவலரண் வரை சென்றது.

"இங்க பார் ரத்தக் கறைபட்ட உடுப்புக்கள்"!

"ஓ அதிலையும் கனக்கக் கிடக்கு! ஞாயமாத்தான் செத்தும் காயமும் பட்டிருக்கிறான்கள். ஏலாமத்தான் காட்டுக்குள்ள இறங்கியிருக்கினம்".

ஆங்காங்கே சிதறிக்கிடந்த ரவைகளை ஒன்றாகக் குவித்து வைத்தோம். கைக்குண்டுகள், துப்பாக்கி எறிகணைகள் பெருமளவு ஆங்காங்கே இருந்தன. அவற்றைப் பக்குவப்படுத்தியபின் ஆபத்தான நிலையில் இருந்த குண்டுகளை மெதுவாகத் திரட்டி 'எச்சரிக்கை' என மரத்தில் குறித்து அடியில் குவித்துச் சென்றோம். இவ்வாறு சேர்க்கப்பட்டவற்றில் பாவனைப் பொருட்களும் கிடந்தன.

பகைவனைப் பொறுத்தவரை சிறிய இன்ரமீடியம் ரவைகளும் எம் ரவைகளும் மண்ணில் புதைந்து கிடந்து, சேகரிப்பதில் சிரமத்தைத் தந்தன. ஆயினும் நாம் ஒவ்வொரு ரவையாகக் கூட நேரத்தைச் செலவிட்டுக் கிண்டி எடுத்தோம். அரிய பொருட்களைப் போல போராளிகள் கவனமாக மண்ணைத் துடைத்து ரவைப் பெட்டிகளில் இடுவதில் ஆர்வம் காட்டினர். ரவைகளைப் பெறுவதற்காய், இடிந்து கிடந்த தூண்களை மிகக் கஸ்ரப்பட்டு அகற்றித் தேடினோம். நேற்றைய மதியத்தின் பின் உணவற்றிருக்கும் போராளிகள், இரவு முழுவதும் யுத்தத்தை நடாத்திய பின் இன்றும் இவ்வளவு ஆர்வத்துடன் தம் கடமையைத் தொடருகிறார்கள். **இந்தக் கணத்தில் மக்களிடம் ஒன்றைத் தெரிவிக்க விரும்புகிறேன்.** என்னவெனில், எதிரி எம்மைவிட ஆட்பலத்திலும் ஆயுத பலத்திலும் மிகுந்து நின்று போரை நடாத்துகையில், பெருமளவு நாம் நம்பி இறங்கும் பலம் யாதெனில், அது உளஉறுதியும் கொள்கைப் பற்றும் ஈழ மக்களின் மண்ணின்பாற் கொண்ட அன்புமேயாகும். இவையே அசைக்க முடியாத காவலரணில் பெரும் ஆயுதத்துடன் இருக்கும் எதிரியை நாம் காப்புத் தளமற்ற வெட்டை வெளிகளூடு முன்னேறி அழிக்க உதவும் எமது கவச குண்டலங்களுமாகும். இவற்றை எமது மக்கள் நினைவில் நிறுத்திக் கொள்வது சிறப்பானது. அத்துடன், எதிரியிடமிருந்து கைப்பற்றும் ஒவ்வொரு ஆயுதமுமே நாளை அவனைக் களத்தில் எதிர்க்கின்றது. ஆயுதங்களைக் கைப்பறச் சென்று வீரமரணமடைந்த போராளிகளை எண்ணிப் பாருங்கள். எதிரியிடம் மீட்கும் ஒவ்வொரு ரவையும் நாளை எமது அந்நியனின் பாதங்களைக் குறைக்கும். எதிரியிடமிருந்து கைப்பற்றுதலை இயன்றளவு சுறுசுறுப்புடன் செய்வது இதற்காகவேயாம். இவற்றின் மூலம் எம்மை வலுவாக்கி அந்நிய ஆதிக்கத்தை உடைத்து, சுதந்திர ஈழ மலர்விற்காக போராளிகள் கணமும் உழைப்பார்களென்பது நிச்சயம். அந்த மைந்தர்களின் தாகத்தை மக்கள் தீர்க்க வேண்டும். எல்லோர்களாலும் இயலாதுவிடினும் அதனை மதித்தாவது நடக்கப் பழகிக் கொள்ளல் வேண்டும். இதுவே மாவீரர்களின் ஆசைக் கனவு.

"மாஸ்ரர், வாங்கோ, பெரிய காம்புக்கு போய்ப் பார்ப்பம்".

அழைத்துச் சென்றேன். பிரதான வீதியூடாக நடக்கும் போது எனது சிறுவயது எண்ணங்களை நினைத்துப் பார்த்தேன்.

"மாஸ்ரர் இந்த இடங்களைப் பார்த்தவுடன் எனக்கு முந்தின ஞாபகம் வருகுது".

"ஏன், என்ன நடந்தது"?

"ஒன்றும் நடக்கேல்ல. 83. 84 களில எங்கட வீடு புதுசாக மன்னங்குளத்தில கட்டினனாங்கள். அப்ப முல்லைத்தீவு பஸ் வந்தா சந்தியில நிற்கும், அதில இறங்கினாப் பிறகு நேரா வாற வவுனியா, கொழும்பு பஸ்காரங்கள் ஏத்தமாட்டாங்கள். அதாலை நடந்துதான் வீட்டுக்கு அநேகமாகப் போவம். சில நேரம் லொறி வரும். நடந்து போகேக்கை நானும் அம்மாவும் தான் போனனாங்கள். எங்களுக்கு முன்னாலை இரண்டு பெடியள் சைக்கிளில் வர, உதுக்குள்ளயிருந்து இரண்டு ஆமி வந்தாங்கள். நாங்கள் அவங்களைக் கடக்கிறதுக்கு இன்னும் 50 அடி இருக்கும். சைக்கிளை நிற்பாட்டச் சொல்லாமல் கிட்ட வந்தவுடனே ஒரு உதை ஒன்றை ஓடுறவனுக்குவிட பொத் என்று விழுந்தான்கள். அதற்குப் பிறகு துவக்கால விளாசித் தள்ளிப் போட்டு குளறக் குளற இழுத்துப் போனாங்கள். நாங்கள் திரும்பிப் பார்க்காமல் ஒட்டம் பிடித்தோம்".

"அவங்களுக்கு என்ன நடந்தது"?

"எங்களுக்குத் தெரியாது, ஆரோ சொல்லிச்சினம் காட்டில யானை மிதிச்சதென்று ஆஸ்பத்திரியில பொடியப் போட்டவங்களென்று. வீட்டுக்காரச் சனமும் ஏன் தாய்மார்கூட, தங்கட பிள்ளையள் என்று நம்பவில்லையாம். பிறகு உடுப்பைப் பார்த்துத்தான்..."

**'இராணுவ முகாம் மாங்குளம்' எனும் சிங்கள வாசகம் சீமெந்துச் சுவரின் மேலாக இப்போ காயத்தோடு காட்சியளித்தது. இதே இடம்தான், முன்பு வெறியர்கள் மக்களைக் கொடுமைப்படுத்திய இடம். சுதந்திரமாக எல்லா நேரமும் திரியவோ, அக்கம் பக்கம் பார்க்கவோ அனுமதியில்லாத அந்த சூனியப் பிரதேசம், இன்று சுதந்திரக் காற்றை இதமாக சுவாசிக்கின்றது.** பிரதான முகாமின் வாசலூடாக இறங்கி கற்கள் இறுக்கிய பாதையில் உள்ளே சென்றோம். ஆக்கிரமிப்புச் சின்னங்கள் சிதறி அலங்கோலமாகக் கிடந்தன.

முன் கட்டடத்துள் ஏராளமான மேசைகள், கதிரைகள், சொகுசான மெத்தைகளுடன் உடைந்துபோய்க் கிடந்தன. அடுத்த அறையில் பெரிய குளிர்சாதனப் பெட்டி பொத்தல்களாகத் தெரிந்தது. ஓடுகளும் சீற்றுக்களும் நொருங்கி சின்னாபின்னமாகக் கிடந்தன. அடுத்த அறைகள் யாவற்றிலும் ஸ்பிறிங் கட்டில்கள் ஏராளமாக மெத்தைகளுடன் நிறைந்து கிடக்க, பலவற்றிலும் உறைந்த குருதித் தடங்களை ஈக்கள் மொய்த்தபடி இருந்தன.

மேன்மேலும் பல பொருட்கள் அங்குமிங்குமாய் சிதறிக் கிடந்தன. மிகப் பிரமாண்டமான அறை ஒன்றில் நுழைந்தோம். அது முற்றாக உணவுப் பொருட்களால் நிறைந்து கிடந்தது. சீஸ்ரின்கள், ரின்பால், மீன்ரின்கள், லக்ஸ்பிறே, மா, அரிசி, தேயிலை இவ்வாறு ஏராளமான பண்டங்கள் சேமிக்கப்பட்டிருந்தன. போராளிகளது வாழ்வையும் இராணுவச் சொகுசையும் ஒப்பிட்டுப் பார்த்தேன். காடுகளிலும் கல்லு முட்களிலும் நடந்து திரியும் அஞ்சாத இளம் புலிகள் எங்கே? சொகுசு வாழ்வில் சுகம் காணும் அந்நியர்கள் எங்கே?

**(தொடரும்....)**

**இது ஒரு புதிய போர்ப்பரணி !**
பிரபாகரனின் சகாப்தத்துடன் தொடங்கிய ஈழத்தமிழரின் வீரமரபை அடித்தளமாகக் கொண்டு உருவாக்கப்பட்ட ஒரு போர்க்கால இலக்கியம் இது. ஆழமான புரிந்துணர்வை -அளவிட முடியாத அன்புறவை -வாட்டுகின்ற துன்பங்களிலும், பொங்குகின்ற இன்பங்களிலும் பங்கெடுக்கின்ற உயிருக்குயிரான நேசிப்பை -ஒருவரில் மற்றவர் நம்பிக்கை கொண்டு, ஒருவருக்காக மற்றவர் உயிர்கொடுத்துப் போராடும் புலிவீரர்களின் போராட்ட வாழ்வை, தான் தரிசித்த நிகழ்வுகளையும் பெற்ற அனுபவங்களையும், சிறந்த எழுத்தாற்றலுடன் ஓர் இலக்கியப் படைப்பாக வடித்திருக்கின்றான், தன்னை முழுமையாகவே தாயக விடுதலைக்காக அர்ப்பணித்து நின்ற ஒரு புலிவீரன் கப்டன் மலரவன் (லியோ).

அதேவேளை இப் புலிவீரனின் போராட்ட வரலாற்றையும், பல சாதனைகளையும், மறக்க முடியாத பல சம்பவங்களையும் கொண்டதாகவே இந்நூல் இருக்கின்றது. 'போர் உலா' என்ற இந்தப் பரணி, தமிழீழத்தின் போர்க்கால இலக்கியத்திற்குக் கிடைத்த ஒரு பொக்கிசமாக என்றைக்கும் விளங்கும்! . இதனை நாம் இங்கு தொடராகத் தருகிறோம்.

# தமிழீழ மேன் முறையீட்டு நீதிமன்று

**தமிழீழ விடுதலைப் புலிகளின் நீதி நிர்வாகப் பிரிவினர், தமிழீழ சட்டக்கோவையின் பிரகாரம் மாவட்ட மன்றுகளை அமைத்து நீதி பரிபாலனத்தைச் செம்மையாக செய்துவருவதை யாவரும் அறிவோம். தமிழீழ நீதி நிர்வாகப்படிமுறை வளர்ச்சியின் அடுத்த அம்சமாக, 'மேல்முறையீட்டு நீதிமன்று' அமைக்கப்பட்டுள்ளது. இதன் திறப்பு விழா 19-03-94 இல் நடைபெற்றது. மாவட்ட நீதிமன்றுகளின் தீர்ப்புக்களில் திருப்தியடையாத கட்சிக்காரர்கள், மேன்முறையீடு செய்வதற்கே மேன்முறையீட்டு நீதிமன்று அமைக்கப்பட்டுள்ளது. இதன் உருவாக்கம், நோக்கம், செயற்பாடுகள் ஆகியவற்றை தமிழீழ மக்கள் அனைவரும் அறிந்துகொள்ளும் பொருட்டு அதனை விளக்கும் கட்டுரையை இங்கு பிரசுரித்துள்ளோம்.**

தமிழீழ விடுதலைப் புலிகளின் நீதி நிர்வாகப் பிரிவினரின் நீதி நிர்வாகப் படிமுறை வளர்ச்சியின் அடுத்த அம்சமாக மேன்முறையீட்டு நீதிமன்றம் அமைக்கப்பட்டு அதன் திறப்பு விழா அண்மையில் நடைபெற்றது. ஏற்கனவே இயங்கிவரும் மாவட்ட நீதிமன்றுகளில் குடியியல், குற்றவியல் வழக்குகளிலும் தொழில் பிணக்குகளிலும் வழங்கப்படும் தீர்ப்புகளில் திருப்தி அடையாத கட்சிக்காரர்கள் தகுந்த காரணங்களுடன் மேன்முறையீட்டு நீதிமன்றுக்கு மேன்முறையீடு செய்யலாம்.

### மேன்முறையீட்டு சபை

தமிழீழத் தேசியத் தலைவர் வே. பிரபாகரன் அவர்களால் நியமிக்கப்பட்ட நீதியாளர்களிடமிருந்து தெரிவு செய்யப்பட்ட மூவர் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் ஒன்றாக அமர்ந்து மேன்முறையீட்டுச் சபையாக இயங்குகிறார்கள். இம்மூவரில் ஒருவர் பெண் என்பதும் இங்கு விசேடமாகக் குறிப்பிடத்தக்கது. இவர்கள் தம் முன் மேன்முறையீடு செய்யப்பட்டுள்ள வழக்கு நடவடிக்கை நிகழ்வுகளின் தொகுப்பையும், தீர்ப்பையும் மறுபரிசீலனை செய்வார்கள். அவசியம் எனக்கருதினால் வழக்குடன் சம்பந்தப்பட்ட எத்தரப்பினரையும் தம் முன் அழைத்து கூடுதல் விளக்கங்களையோ, தகவல்களையோ பெற்றுக்கொள்ளவும், மேலதிகமான சான்றுகளையோ, ஆவணங்களையோ ஒப்படைக்குமாறு கட்டளையிடவும் மேன்முறையீட்டு நீதிமன்று நீதியாளர்களுக்கு அதிகாரம் உண்டு.

மேன்முறையீட்டு நீதிமன்றின் முடிவு எந்த நீதிமன்றத் தீர்ப்புக்கு எதிராக மேன்முறையீடு செய்யப்பட்டதோ அந்நீதிமன்றினூடாகவே கட்சிக்காரர்களுக்கு அறிவிக்கப்படும்.

மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தீர்ப்பே இறுதியானதென்பதுடன், அது அத்தீர்ப்புடன் சம்பந்தப்பட்ட யாவரையும் முழுமையாகக் கட்டுப்படுத்தும் அதிகாரம் கொண்டதாகவும் அமைகிறது.

### சட்ட அறிஞர்கள்

மேன்முறையீடு செய்யப்படும் வழக்குகள் ஏற்கனவே மாவட்ட நீதிமன்றுகளில் சட்ட அறிஞர்களின் முன்னிலையில் அலசி ஆராயப்பட்டவைகளாகவே இருக்குமென்பதாலும் அதற்கு மேலும் தேவையற்ற வாதப் பிரதிவாதங்கள் இப்போர்க்கால சூழ்நிலையில் தேவையற்றவையாகவும் கால தாமதத்தை ஏற்படுத்தக்கூடியவையாகவும் அமையும் என்பதைக் கவனத்தில் எடுத்து மேன்முறையீட்டு நீதிமன்றின் முன் சட்ட அறிஞர்கள் தெரிபடுவது தவிர்க்கப்பட்டுள்ளது. காலப்போக்கில் தமிழீழத்தின் சமூக பொருளாதார விஞ்ஞான வளர்ச்சிக்கும் நீதி நிர்வாகத்துறையின் முன்னேற்றத்திற்கும் ஏற்றவாறு பல மாற்றங்கள் ஏற்படலாம்.

### நடைமுறை

அடுத்ததாக, மேன்முறையீடு செய்யும் வழிமுறைகளை இங்கு ஆராய்வோம். ஒரு நீதிமன்றின் தீர்ப்பில் மனநிறைவு ஏற்படாத கட்சிக்காரர் எவரும் மேன்முறையீடு செய்யலாம். தமிழீழ சட்டக்கோவையின் பிரகாரம் மேன்முறையீடு செய்பவர் தீர்ப்பு வழங்கப்பட்ட பதினான்கு நாட்களுக்குள் நீதிமன்றத்தை திருப்திப்படுத்தக்கூடிய காரணிகளை எழுத்தில் சமர்ப்பித்தால் நீதிமன்று மேல் விசாரணைக்கு அனுமதி வழங்கும். அவ்வாறாக அனுமதி வழங்கப்பட்ட திகதியிலிருந்து இருபத்தியொரு நாட்களுக்குள் வழக்கைப்பற்றியும் தனது தரப்பு நியாயத்தைப் பற்றியும் முழுமையான விளக்க உரைகளை ஐந்து பிரதிகளில் எழுத்து மூலம் தயாரித்து மேன்முறையீட்டு விண்ணப்பத்தைச் செய்யலாம். அவ்விதம் விண்ணப்பிக்கும் போது மேன்முறையீட்டு செலவுக் கட்டணமாக ஆயிரம் ரூபாவையும் மன்றில் செலுத்த வேண்டும். இம்மேன்முறையீட்டு வழிமுறைகள் சகலகுடியியல், குற்றவியல் வழக்குகளுக்கும் தொழில் பிணக்குச் சம்பந்தமான பிணக்குகளுக்கும் பொருத்தமுடையதாகும்.

### இறுதி முடிவு

மேன்முறையீட்டுச் சபையினர் விசாரணைகளை தாம் பொருத்தமெனக் கருதும் முறையில் சுதந்திரமாகவும் தலையீடுகள் எதுவுமின்றியும் மேற்கொள்வர். அதுவுமில்லாமல் தமது குழுவின் விசாரணை முடிவை ஆகக் கூடியது ஆறுமாத காலத்திற்குள் முடித்து சம்பந்தப்பட்ட நீதிமன்றுக்கு அனுப்ப வேண்டும். முடிவை அந்த மன்றுதான் கட்சிக்காரர்களுக்கு அறிவிக்கும். இம்முடிவு இறுதியானதும் மாற்றமுடியாததுமாகும்.

தற்போது தமிழீழ மேன்முறையீட்டு நீதிமன்றின் முன்னர், யாழ் மாவட்டத்தில் இயங்கும் சுன்னாகம், சாவகச்சேரி, பருத்தித்துறை, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்ட நீதிமன்றங்கள் வழங்கிய தீர்ப்புக்களில் பதின்நான்கு வழக்குத் தீர்ப்புக்களுக்கு எதிராக மேன்முறையீடு செய்யப்பட்டுள்ளது. இவற்றுள் 12 தீர்ப்புக்கள் குற்றவியல் சம்பந்தமானவையாகவும், ஏனைய இரண்டும் குடியியல் சார்ந்த காணி வழக்குகளுமாகும்.

### கருணை மனு

மக்கள் தம் குறைகளை மேன்முறையீடு செய்யும் உரிமை மேன்முறையீட்டு நீதிமன்று அமைப்புடன் நிறுத்தப்படவில்லை. தமிழீழச் சட்டக்கோவையில் தமிழீழத் தேசியத் தலைவருக்கு மேன்முறையீடு செய்யும் வாய்ப்பும் மக்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. எந்தவொரு குற்றச்சாட்டிலும் ரூபாய் ஒரு இலட்சத்துக்கு மேல் அபராதம் விதிக்கப்பட்ட அல்லது, ஐந்து வருடங்களுக்கு மேற்பட்ட கடூழிய சிறைத்தண்டனை விதிக்கப்பட்ட குற்றவாளிகள் எவரும் தமது தவறுக்கு மன்னிப்புக்கோரி தண்டனையைக் குறைக்குமாறு, தமிழீழத் தேசியத் தலைவருக்கு குறித்த நீதிமன்றில் கருணை மனு சமர்ப்பிக்கலாம். அதற்கான தேசியத் தலைவரின் கட்டளை நீதிமன்று ஊடாகப் பகிரங்கப்படுத்தப்படும். இதுவுமல்லாமல் மாவீரர் தினத்தை முன்னிட்டு வருடந்தோறும் தமிழீழத் தேசியத் தலைவர் குற்றவாளிகளுக்கு வழங்கப்பட்ட தண்டனைகளைக் குறைக்கவோ, மன்னிப்பு வழங்கவோ ஒரு பிரகடனத்தை வழங்குவார். கருணை மனு கோரும் உரிமை பாதிப்புக்கு உள்ளாகியுள்ளேன் என்று கருதும் நபரினால் மாத்திரமே செய்யப்பட வேண்டும். அவருக்காக இன்னொருவர் செய்வது தவிர்க்கப்பட வேண்டும். பாதிக்கப்பட்டவர்களின் துன்பத்தில் மற்றவர்கள் இலாபம் அடைவதைத் தவிர்ப்பதற்காகத்தான் இந்நடைமுறையாகும். ■

# இரத்தமும் தசையும்...

எந்த நேரத்தில் எவருக்கு என்ன நடக்கும் என்பதை ஊகிக்க முடியாது. எப்போதும், எவரும், என்ன விதமாகவும் கொல்லப்படுவார்கள். காலையில் கண்டு கதைத்துவிட்டுப் போனவர், மதியத்திற்குள் கழுத்தறுபட்டுக் கிடப்பார். கொல்லப்படுவதற்குக் காரணங்கள் சொல்லப்படுவதில்லை. வேறிடமென்றால் செத்துக்கிடக்கும் தெரு நாயை அப்புறப்படுத்தக்கூட ஆளிருக்கும். ஆனால் இங்கு... ஊரோரம் இரண்டு உடல்கள் கிடப்பதை எல்லோரும் காணுவார்கள். நரி, காகம், நாய்கூடத் தின்றுவிட்டுப் போகும். ஆனால், யாரும் தொடமுடியாது. உரித்தானவர்கள் மட்டுமே எடுத்துச்சென்று, வீட்டார் மட்டுமே சடங்கு செய்து, ஊரார் கூடாமல் அடக்கம் செய்ய வேண்டும். பக்கத்து வீட்டுக்காரர் எட்டிப்பார்த்தால்கூட, "இந்தக் கண்ணாலதானே பார்த்தாய்" என்று தோண்டி எடுத்துக் கொண்டு போய்விடுவார்கள், அல்லது "இந்தக் கையாலதானே தூக்கினாய்" என்று வெட்டிக்கொண்டு போய்விடுவார்கள்.

"பொம்பிளைப் பிள்ளையள வீடுகளில் வைச்சிருக்கிறதைப் போல பயங்கரம் வேறையில்ல மகன்... அது பெரிய சீரழிவு" என்று சினந்து கொண்டார். பெரிய கல்லாறைச் சேர்ந்த, இரண்டு பெண் போராளிகளின் தாய் ஒருவர்.

'பாடசாலை முடிகிற நேரம் இலக்கத்தகடில்லாத ஒரு வெள்ளை நிற வான் ' வீதிக்கு வரும். சிங்கள -முஸ்லிம் ஆயுதபாணிகளோடு துரோகக் கும்பல் ஆட்களும் உள்ளே இருப்பார்கள். பள்ளிக்கூடத்திலிருந்து வீடு செல்லும் பெண்பிள்ளைகளை தெரிவு செய்து தூக்கிப் போடுவார்கள். வீதியால் வரும் இளவயதுப் பெண்களைப் பார்த்து, முகாம்களின் வாசலில் பல்லிளித்துக் கொண்டு நிற்கும் கூட்டம், நள்ளிரவில் வீடுகளுக்குள் புகுந்து இழுத்துக் கொண்டு போகும். வீதிச் சோதனைக்காக நிறுத்தப்படும் பயணி ஊர்திகளிலிருந்து பெண்கள் இழுத்திறக்கப்படுவார்கள். இவற்றுக்கெல்லாம் ஏன்? எதற்கு? எங்கே? என்ற கேள்விகளுக்கு இடமில்லை. அப்படிக் கொண்டு செல்லப்படுபவர்களில் அநேகமானவர்கள் வருவதில்லை, வந்தவர்களுக்கு மனநிலை சரியில்லை. இன்னும் சிலர் - உடைகளற்ற உடலில் நகங்களும், பற்களும் பதிந்த கொடூரமான காயங்களோடு ஊருக்கு வெளியே உயிரற்று மீட்கப்பட்டார்கள்.

பெற்றவர்களுக்கு முன்னால், கணவன்மார்களுக்கு முன்னால், உடன் பிறந்தவர்களுக்கு முன்னால், ஊரவர்களுக்கு முன்னால் கூட காடையர் கூட்டத்தின் காம வெறிக்குப் பலியாக்கப்பட்ட பெண்பிள்ளைகள் பலர். வெலுக்காக் கண்டிக்கு அருகில் மூங்கில்மலை சுற்றிவளைக்கப்பட்ட போது, திருமணமாகி ஒரு வாரம் கூட ஆகியிருக்காத சின்னவன்-கமலா தம்பதிகளில், கணவனுக்கு முன்னால் மனைவிக்கு நடந்தது, அவற்றுள் ஒரு சம்பவம்.

தென் தமிழீழத்தின் ஒவ்வொரு அங்குல நிலத்திலும், மிகப் பெரிய துயரம் படிந்து கிடக்கின்றது. அங்கு வாழும் ஒவ்வொரு தமிழனுக்குப் பின்னாலும், சொல்லில் அடங்காத சோகம் இருக்கின்றது.

மன்னம்பிட்டியிலிருந்து வெள்ளை வானில் ஏற்றிச் செல்லப்பட்டு, உமித்திடலில் உயிரோடு எரித்துக் கொல்லப்பட்ட கணக்கற்ற தமிழர்கள் -

கொக்கட்டிச்சோலை உடும்பன் குளத்தில் கல்லில் வைத்துப் படுக்கச் சொல்லி, தலையில் பாறாங்கல்லால் அடித்துச் சிதறடிக்கப்பட்ட மூன்று இளைஞர்கள் -

'ரெலோ' க் காரர்கள் பிடித்துக் கொடுத்துப் பார்த்து நிற்க, முஸ்லிம் காடையர்கள் பாலியல் வன்முறையால் உயிர்பிரியச் செய்த, ஆரையம்பதியைச் சேர்ந்த விஜி என்ற 9 ஆம் வகுப்பு மாணவி.

செங்கலடியிலிருந்து புல்லுமலைக்கு நகர்ந்த சிங்களப்படை வெலுக்காக் கண்டிக்குள் நுழைந்த போது, "ஆமி வாறான்.." என்ற குரல் கேட்டு "ஆமியா... " என ஏங்கிய போது மூச்சு நின்றுபோன பூரணிக்கிழவி -

அக்கரைப்பற்று சின்னப்பள்ளி எனுமிடத்தில், முஸ்லிம்கள் காரில் கட்டி இழுத்து நாராய்க் கிழித்த தனபால் -

பெரியகல்லாறு தேவாலயத்திற்கு முன்னால், சதைக்கும்பமாகக் வெட்டிக் குவிக்கப்பட்டிருந்த 35 ஆண்களுக்குள் அடங்கிய, இரு கண்களும் பார்வையிழந்த ஒரு தந்தை -

கன்னன்குடாவுக்கு அருகில் கடுக்காமுனை எனும் இடத்தில் கிணற்றுக்குள் இறக்கிவிட்டு, கல்லுகளால் தூக்கி எறிந்தே கொலை செய்யப்பட்ட பேர்தெரியாத 4 இளைஞர்கள் -

ஊரைவிட்டு ஓடும்படி சிங்களப் படை மிரட்டியபோது, காலாதி காலமாக நான் குடியிருந்த நிலத்தை விட்டு -கணவனோடு நான் களித்து வாழ்ந்த குடிசையை விட்டு எழேன் என்றதற்காக, படுத்தபடுக்கையிலேயே சாக்குக் கட்டுகளைப் போட்டு, மண்ணெய் ஊற்றி, குடிசையோடு எரித்துச் சாம்பராக்கப்பட்ட 80 வயது மணி ஆச்சி -

இலுப்பையடிச் சேனையில் திருமணமாகிய அடுத்த நாளே, ஒன்றாகச் சேர்த்துக் கட்டிவிட்டு ரயர் மாலை போட்டுக் கருக்கப்பட்ட புதுத்தம்பதிகள் -

மட்டக்களப்பு நகரிலிருந்து, இலக்கத்தகடில்லாத வெள்ளை வானில் கடத்திச் செல்லப்பட்டு, கண்களைத் தோண்டிவிட்டு, சாக்குகளில் கட்டி ஆற்றுக்குள் போடப்பட்ட ஏராளமான மாணவர்கள் -

கல்முனையில் - தாங்கள் பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கிவிட்டு, நகரின் மத்தியில் உடைகளைந்து நிற்க வைத்து, முஸ்லிம்கள் கற்களால் எறிந்தே தங்கள் மதமுறைத் தண்டனையை நிறைவேற்றிய 16 வயதுச் சிறுமி-

இடித்துக் கொல்லக் கலைத்து வந்த கவச வண்டிக்குத் தப்ப ஓடுகையில், சில்லுக்குள் அகப்பட்ட சேலையை அவிழ்த்துவிட்டும் ஓடும்போது, நடுவீதியிலேயே கவச வண்டியால் துரத்தி ஏற்றி நசுக்கப்பட்ட பாண்டிருப்புப் பாடசாலை ஆசிரியை-

உடுப்பன்குளத்தில், புல்லுமலையில், மகிழடித்தீவில், காத்தான்குடியில், அம்பாறை 'சென்றல் காம்ப்' பில், வீரமுனையில், களுவாஞ்சிக்குடியில், பனிச்சங்கேணியில், முதலிக்குளத்தில், கிளிவெட்டியில், திருக்கோவிலில், சாய்ந்தமருதுவில், சாம்பல்தீவில் என ஒவ்வொரு கிராமத்திலும் 100, 200, 300 என கூட்டம் கூட்டமாகவும், சிறுசிறு தொகைகளிலும், தனித்தனியாகவும் படுகொலை செய்து குவிக்கப்பட்ட ஏறக்குறைய 15,000 வரையிலான எமதினிய மக்கள் - இவர்கள் எல்லோரும் எங்கள் தாயகத்துக்கு உரமாகப்போனவர்கள்.

தமிழீழத்தின் விடுதலைப் போராட்டத்திற்கு, அதன் தென் பிராந்தியம் செலுத்திய விலை மிகமிக அதிகம்.

படுவான்கரையைச் சேர்ந்தவரும், லொறி ஓட்டுநரும், இரண்டு பிள்ளைகளைப் போராட அனுப்பிவிட்ட தந்தையுமான ஒருவர் கீழே உள்ளதைச் சொன்னார்.

"40 வருடங்களாக நாங்கள் முயற்சி செய்துவிட்டோம், முடியவில்லை. அதைவிட மேலாக இந்த நான்கு வருடங்களுக்குள் நிறையத் துன்பப்பட்டுவிட்டோம், நன்றாகப் படித்துவிட்டோம். இனி எப்போதும் சிங்களவர்களோடு சேர்ந்து வாழ்வதைப்பற்றி நாங்கள் சிந்திக்கவே முடியாது."■



# 'இது உள்நாட்டு பிரச்சினையல்ல'

■ அமெரிக்க செயலாளரிடம் முறையீடு

தென்தமிழீழத்தில் மட்டுநகருக்கு, அமெரிக்காவின் தென்னாசிய விவகாரங்கள் உதவிச் செயலாளர் செல்வி றொபின் ராபேல் விஜயம் செய்தபொழுது, இது உள்நாட்டு பிரச்சினை எனக்கூறி நழுவிச் செல்லும் போக்குமாறி, 'வெளிநாட்டு அரசாங்கங்களின் பிரதிநிதிகள், அர்த்தமுள்ள தீர்வுகளை முன்வைத்து போரை நிறுத்தும்படி சிறீலங்காவுக்கு ஆலோசனை கூறவேண்டும்' என சிறீலங்க அரசாங்கத்தின் ஆதரவாளர்களே கேட்டுக்கொண்டுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

சிறீலங்காப் பாராளுமன்றத்தின் உறுப்பினர் ஒருவர், ' மட்டக்களப்பில் சிவில் நிர்வாகம் நடைபெறவில்லை; இராணுவ மேலாண்மையுள்ள ஆட்சியே நடைபெறுகின்றது' எனச் செல்வி றொபின் ராபேலுக்குச் சுட்டிக்காட்டியதாகவும் தெரியவருகிறது. ■

# மேலும் பல....

யதாகவும் அவர்கள் அனைவருமே தன்னை அமைதி வழித் தீர்வுக்கு சிறீலங்கா அரசாங்கத்தை வற்புறுத்தும்படி கேட்டுக்கொண்டுள்ளதாகவும் கூறியுள்ளார். அத்துடன் மக்ஸ் பேர்ஜர் என்கிற கனடிய சட்ட வல்லுனர் அவர்களுக்கு கனடிய 'மக்கள் பிரதிநிதிகள் சபை' (House of Commence) ஸகார் பரோ கிழக்கு உறுப்பினர் டக் பீட்டர்ஸ், அல்கோமா மனிடுவினின் கனடிய சட்டசபை உறுப்பினர் மைக்கல் ஏ பிறவுண் ஆகியோர் எழுதிய கடிதத்தில் தாங்கள் கனடிய அரசாங்கத்திடம் சிறீலங்கா அரசாங்க்த்தை பேச்சு வார்த்தை மூலம் அமைதி வழித் தீர்வுக்கு வற்புறுத்தும்படி வலியுறுத்தியுள்ளதாக கூறியுள்ளனர்.

இதற்கிடை மக்ஸ் பேர்ஜர், ஒன்டாரியோ லிபரல் கட்சித் தலைவர் லின் மக்லீட்டுக்கு சிறீலங்கா ஜனாதிபதி டி. பி. வி. ஜயதுங்காவுக்கு தாம் அனுப்பி வைத்த கடிதத்தின் பிரதி ஒன்றை அனுப்பியதற்கு லின் மக்லீட் அளித்துள்ள பதிலிலும், தாம் கனடிய அரசாங்கத்திடம் சிறீலங்கா அரசாங்கத்தை அமைதி வழித் தீர்வு காண்பதற்கு வற்புறுத்தும்படி வலியுறுத்த உள்ளதாக உறுதிமொழி அளித்துள்ளார்.

திரு. தொண்டமான் அவர்களை அமைதி வழித்தீர்வு காண்பதற்கான வழிமுறைகள் பற்றி ஆலோசிப்பதற்காக கனடா வரும்படி அழைப்பு விடுக்கப்பட்டதும், அதனை சிறீலங்கா ஜனாதிபதி டி. பி. விஜயதுங்கா அனுமதிக்காததும் அனைவரும் அறிந்ததே.

### 'சர்வதேசச் சதி'

இதற்கிடையில், "அமைதி வழித் தீர்வுக்கான பேச்சுவார்த்தை என்பதே சர்வதேசச் சதித்திட்டம்" என சிங்கள பௌத்த பிக்குவான பொலரத்னா கூறியுள்ளார். "அமைதிப் பேச்சுவார்த்தைக்கு எந்த ஒரு காரணமுமில்லை. யுத்தம் மூலம் தீர்வு காண்பது ஒன்றே சரியான வழி. இனப்பிரச்சினை குறித்து பேச்சுவார்த்தை நடாத்த வேண்டும் என்பதே ஒரு சர்வதேசச் சதி. இச்சதிக்கோ, புலிகளின் சதிக்கோ அல்லது தொண்டமானின் சதிக்கோ சிங்கள மக்கள் பலியாகிவிடக் கூடாது" என இவர் வலியுறுத்தியுள்ளார். ■

# இலங்கை இனப்....

செய்யும்போது இந்தியாவினுடைய பிரதிபலிப்பு மூன்று நேர அட்டவணைகளைக் கொண்டதாக உள்ளது. 1983 முதல் 1987 வரை இந்தியாவின் பங்களிப்பு தீவிரமானதாக இருந்தது. ஒரு நடுவராக கூட இந்தியா செயற்பட்டது. இதனுடைய முயற்சி 1987 இல் இலங்கை -இந்திய ஒப்பந்தத்தின் மூலம் உச்சக்கட்டத்தை அடைந்தது. 1987 முதல் 1990 வரை இந்தியா இலங்கையின் ஏற்றுக்கொள்ளாத நிர்வாகியானது. 1990 இல் இலங்கைப் பிரச்சினையில் இருந்து தன்னை விடுவித்துக்கொள்ள வி. பி. சிங் அரசாங்கம் நடவடிக்கை எடுத்தது. 1990 மார்ச்சில் இந்தியப் படை வெளியேற்றப்பட்ட தினத்திலிருந்து இன்றுவரை இந்தப் பிரச்சினையில் இந்தியா பிரிவுபட்டிருந்தாலும் ஒரு அக்கறையுள்ள அவதானியாக இருந்து வருகின்றது. இலங்கைப் பிரச்சினை சர்வதேச உணர்வுகளில் பெரிதாகத் தோற்றாத போதிலும் கூட, இது பொதுவாக தென் ஆசியாவுக்கும் இந்தியாவுக்கும் முக்கியத்துவம் உள்ள பகுதியாகவே தொடர்ந்தும் உள்ளது."

### கூட்டணி-ஈ. பி. ஆர். எல். எவ் பொருத்தப்பாடு அற்றவர்கள்

இலங்கை நிலைமையிற் பாரிய அளவிலான மாற்றங்கள் இடம் பெற்று வருகின்றன. முதலில் தமிழ் அரசியலின் போக்கைப் பார்த்தால் ஈ. பி. ஆர். எல். எவ். அமைப்பும் தமிழர் விடுதலைக் கூட்டணி அமைப்பும் ஜனநாயக நீரோட்ட நடவடிக்கையில் பங்குபற்றுபவர்களாக இருப்பதற்கு, தம்முடைய பதவிக்கால முயற்சிகளைத் தொடர்ந்த அதேவேளையில், தமிழர்களுடைய அபிலாசைகள் தொடர்ந்தும் பூர்த்தி செய்யப்படாத நிலையில் இவர்கள் பொருத்த மற்றவர்களாகியுள்ளனர். விடுதலைப் புலிகள் வடக்கு -கிழக்கு தமிழ் அரசியலை தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளனர்.

### இனமக்களின் வீரத்தலைவர் பிரபாகரன்

விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் பிரபாகரன் தொடர்பான விமர்சனங்களோ, அவரது தீவிரபோக்கையும், எதிர்த்து நிற்கும் அணுகுமுறையையும் வெறுப்பவர்களோ எப்படியிருந்தாலும் அவர் தன்னை ஒரு தனியாட்சிக்கான கெரில்லாப் படைத்தலைவர் என்ற நிலையிலிருந்து ஓர் இனமக்களின் வீரத்தலைவராகத் தன்னை மாற்றிக் கொண்டுவிட்டார்.

### 1982 - 1986 காலநிலை

அதேவேளை 1982 -1986 கால கட்டத்தில் சிறீலங்கா அரசாங்கம் கடைப்பிடித்த நிலைப்பாட்டையே ஜனாதிபதி டி. பி. விஜயதுங்கா மீண்டும் கையாள்கிறார் என எண்ணத் தோன்றுகிறது. அரசியல் தீர்வு தேவை என்பதை உதட்டளவில் மட்டும் கூறிக்கொண்டு, தமிழர்களுக்கு எதிரான இராணுவ அரசியல் நிலைப்பாட்டை மேற்கொள்வதே இந்த நிலைப்பாடாகும். இரு பாதைக் கோட்பாட்டை சிறீலங்கா ஜனாதிபதி கடைப்பிடித்து வருகின்றார். தமிழர்களுக்கு எதிரான தீவிரமான இராணுவ நடவடிக்கை முதலாவது. இரண்டாவது, முதலாவது நடவடிக்கை வெற்றியளித்தால் எதிர்த்தரப்பினரை இணக்கமொன்றுக்குள் கொண்டு வருவதற்கான நெருக்குதலை கொடுத்தல் என்பனவே அவரது இரு பாதை நடவடிக்கை. இந்த நடவடிக்கை வெற்றியளிக்கக் கூடியதொன்றல்ல.

### மலையகத்தின் புதுநிலை

மற்றொரு முக்கிய விடயமாக மத்திய மலையகத்திலும் தென் பகுதியிலும் உள்ள அண்மைய இந்திய வம்சாவழித் தமிழர்களின் விடயமுள்ளது. அரசியல் உடைவு காரணமாக ஏற்பட்டுள்ள ஒரு மனவேதனையை இவர்கள் அனுபவித்துக் கொண்டுள்ளனர். தமிழர்களுடைய இந்தக்குழுவின் குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய தலைவராக உள்ள தொண்டமானின் பிடி, பல வருடங்களின் பின்னர் விடுபட்டுச் செல்கின்றது. இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் அதற்குள்ளே ஏற்பட்டுள்ள நிலைமைகளால் ஒரு பதற்ற நிலையை எதிர்நோக்கியுள்ளது. பழைய தலைவர்களின் மயக்கத்திலிருந்து இளைஞர்கள் விடுபட்டுள்ளனர்.

### புறக்கணிக்க முடியாது

இலங்கைப் பிரச்சினையிலிருந்து இந்தியா தன்னை விடுவித்துக் கொண்டுள்ளபோதிலும் கூட, இந்தப் போக்குகள் மற்றும் நடவடிக்கைகளை இந்தியாவால் புறக்கணிக்க முடியாது. ராஜீவ் காந்திக்கும் ஜெயவர்த்தனாவுக்கும் இடையே 1987 இல் கைச்சாத்தான ஒப்பந்தம் பற்றி எதிரான விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டபோதிலும், இது பல்லின பல மொழி மதங்களைக் கொண்ட ஒரு தீவாக இலங்கையைக் குறிப்பிட்டுள்ளது. எனவே தமிழர்களுக்கு நியாயமானவற்றைக் கொடுக்க வேண்டுமென இலங்கை அதிகாரிகளை நெருக்குவதாகவே, இந்தியப்பணி இருக்க வேண்டும். விடுதலைப் புலிகள் உட்பட தமிழர்களுடனான தொடர்புகளை மீள உருவாக்கி பேச்சுவார்த்தைக்கான பாதையை மீண்டும் கொண்டுவரவேண்டும்." ■

# தீர்வு வராது.....

நடைபெறும் இந்த யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவர, எம்மாலான முயற்சிகள் செய்வோமென நான் பலமாக நம்புகிறேன்" எனக் குறிப்பிட்டுள்ளார்.

### நெருக்குதலே நோக்கு

சிறீலங்கா ஜனாதிபதிக்கு, யுத்தமொன்றின் மூலம் தமிழீழ விடுதலைப் புலிகளை பலமிழக்க வைக்கலாம்; அவ்விதம் தனது நோக்கு வெற்றிபெறுமானால், அவ்வேளையில் தனது அரசியல் தீர்வை திணிப்பதற்கு பேச்சு வார்த்தை என்ற பெயரில் ஆட்களை அனுப்பலாம் என்பதே நோக்காக இருந்து வருகிறது. பாரிய யுத்தத்தைத் தொடங்குமுன் மிகக் கடுமையான விமானக்குண்டு வீச்சுக்களை நடாத்துவதும் அவரின் இராணுவக் கருத்துக்களில் உண்டு. எனவே இந்த தமிழின அழிவுகளை நடாத்து முன்பாக பேச்சுவார்த்தையில் ஈடுபட்டால், தனது தீர்வை திணிக்கமுடியாது என்பது அவரது உள்ளக்கிடக்கை. இது ஒருபுறம் இருக்க, பேச்சுவார்த்தையை எவர் தொடங்கினாலும் ஏற்றுக்கொள்ளக் கூடிய தீர்வு என்று ஒன்று முன்வைக்கப்பட்டால், அதனை நிறைவேற்ற வேண்டிய நிலை ஒன்று ஏற்படும். அதனை தவிர்ப்பதற்கு பேச்சு வார்த்தையை தவிர்ப்பதே சிறந்தவழி என சிறீலங்கா ஜனாதிபதி கருதுவதாக வேறு விமர்சகர்கள் கூறுகின்றனர். தென் மாகாணத் தோல்வியால் ஐக்கிய தேசியக் கட்சி நிலைகுலைந்து போயுள்ள நிலையில், பேச்சு வார்த்தைக்குப் போவது தனது பௌத்த சிங்கள மேலாண்மைக்கு இழுக்காகிவிடுமென சிறீலங்கா ஜனாதிபதி கருதி, சபாநாயகரை யாழ் செல்ல வேண்டாமெனத் தடுத்தார் என, கொழும்பு அவதானிகள் சிலர் கூறுகின்றனர். எது எப்படியிருப்பினும் அமைதித் தீர்வு என்பது சிறீலங்கா ஜனாதிபதியின் உதட்டளவு என்பதும் போர் வெறியே அவரின் செயலளவு என்பதும் மீண்டும் ஒருமுறை நிருபிக்கப்பட்டுள்ளது.

### புலிகள் தடையில்லை.

அமைதிவழித் தீர்வுக்கு புலிகள் தடையாக இருப்பதாக விசமப் பிரச்சாரம் செய்பவர்களுக்கு இச்சம்பவம், யார் தடையாக இருக்கிறார்கள் என்பதைத் தெளிவுபடுத்தியுள்ளது. அண்மையில் இலண்டனில் இருந்து வெளிவரும் மாத சஞ்சிகை ஒன்று, 'விடுதலைப்புலிகளே அமைதி வழித் தீர்வுக்கு தடையாக இருக்கின்றனர்' என்ற கருத்துப்பட கட்டுரை ஒன்றைப் பிரசுரித்திருந்தது. இத்தகைய போலித்தனமான பிரசுரங்களுக்கு சிறீலங்காவின் செயற்பாடு உண்மையில் யார், அமைதிக்கு குழிபறிப்பவர்கள் என்பதை தெளிவுபடுத்தி முற்றுப்புள்ளி வைக்கின்றது.

### யுத்தமே வரும்

சிறீலங்கா ஜனாதிபதியின் போக்குகளை கூர்மையாக அவதானித்து வரும் விடுதலைப் புலிகள், அமைதித்தீர்வு வர சிறீலங்கா ஜனாதிபதி அனுமதிக்க மாட்டார்; யுத்தத்தையே முன்னெடுத்துச் செல்வார் என்பதை உணர்ந்து, அதற்கான முன்னேற்பாடுகளில் ஆயத்தமாகவே உள்ளனர்.

அண்மையில் மீசாலை விக்னேஸ்வரா மகாவித்தியாலயத்தில் சாவகச்சேரி வட்டப் பொறுப்பாளர் திரு. பொற்கோ தலைமையில் இடம்பெற்ற, சாவகச்சேரி வட்டத்திற்கு உட்பட்ட 9ம், 10ம், 11ம், 12ம் (1993), 1ம், 2ம் (1994) மாதங்களில் வீரச்சாவடைந்த மாவீரர்களின் நினைவஞ்சலிக் கூட்டத்தில் பேசிய யாழ். மாவட்ட அரசியல் பொறுப்பாளர் திரு. இளம்பரிதி அவர்கள், "பொதுமக்கள் எண்ணுகிறார்கள் அமைதி வரப்போகிறது என்று. இந்தமுறை பிரச்சினை தீரும். வெளிநாடுகள் முன்னிற்கிறார்கள் என்பது மக்களின் எண்ணம். ஆனால், உண்மை நிலை என்ன என்பதைத் தெட்டத் தெளிவாக மக்கள் உணரவேண்டும். கடந்த சில மாதங்களாக அரசு -புலிகள் பேச்சுக்கு இடையில் சமாதானக் குழுக்கள் என்று திருச்சபையினர் இங்கு வந்துபோனார்கள். இது மக்களுக்குத் தெரியும். இவர்கள் எம்மிடம் கூறினார்கள், அரசு சமாதானத்துக்குத்தான் விரும்புகிறது. அந்த அடிப்படையில்தான் வந்திருக்கிறோம் என்றார்கள். நாம் கூறினோம், நாமும் பொதுமக்களும் சமாதானத்தைத்தான் விரும்புகிறோம். ஒரு சுமுகமான வழி வரவேண்டுமாக இருந்தால் பொருளாதாரத்தடை நீக்கி யுத்தத்தினை நிறுத்தி பேசுங்கள் என்று நீங்கள் அரசிடம் ஏன் கேட்கவில்லை என கேட்டபோது அவர்கள் மௌனமாகிப் போனார்கள். சிறீலங்கா அரசாங்கம், ஒருபுறம் உலக நாடுகளுக்கு தாம் சமாதானத்தை விரும்புவதாகக் கூறி உலகை ஏமாற்றி சீனாவிடம் 500 கோடி ரூபாவுக்கு ஆயுதத்தினை இறக்கியுள்ளது. இதைவிட அநுராதபுர மருத்துவ மனையில் 42 பிரபல வைத்திய நிபுணர்களை ஒழுங்குசெய்து வைத்துள்ளது. இப்படியான ஒரு பெரிய அளவிலான புதிய முறையிலான யுத்தம் ஒன்றை அரசு நடத்த இருக்கிறது. அது எங்கு இடம் பெறப்போகிறது என்று தெரியாது. ஆனால் குறிப்பாக யாழ் குடாநாடு மீதுதான். எதிரி இப்போது தென்பகுதியில் பிரச்சார யுத்தம் நடத்துகிறான். யுத்தத்தின் நாட்கள் நெருங்குகிறது. தீர்வு வராது; எங்களை நோக்கி வருவது யுத்தமே."

"சிறீலங்கா அரசு, ஆட்பலத்தை வைத்து போரை நடத்தப்போகிறது. எமது பக்கம் மக்கள் நிற்பார்கள். எதிரிக்கு பாரிய பதிலடி விழும். அப்போது எம்மண் விடுவிக்கப்படும். நாம் அப்போதுதான் சுதந்திரமாக சொந்த வளத்திலும், சொந்தப் பலத்திலும் வாழமுடியும்."

"எமது போராட்டமானது பத்து ஆண்டுகளுக்கு முன்னும் பின்னுமாக பல உதாரணங்களையும் முத்திரைகளையும் உலகிற்கு பரப்பி நிற்கிறது. நீண்ட தியாகங்களுக்கிடையிலும் ஒரு வெற்றியின் விளிம்பில் நின்றுகொண்டிருக்கிறது. இதற்கெல்லாம் காரணம் எமது மண்ணையும் மக்களையும் நேசித்து வீரமரணம் அடைந்த மாவீரர்களே" என்று கூறினார். ■

# கப்டன் துளசிரா...

தோழி இங்கு குலுங்கிக் குலுங்கி அழுதாள் துளசி. இந்தப் பாடல் வரியில் நீ இனி அடிக்கடி வந்துபோவாய்.

சாகும்போது சாதனைதான் படைத்தாய். உனக்கு அன்று ஓய்வும்கூட. நீ இழந்துபோன அத்தனை நித்திரையையும் வெறியுடன் அனுபவிப்பவள்போல எத்தனை அழகாய்த் தூங்கினாய் துளசி!

இப்போதெல்லாம்....

"தத் தெய்தாம் தித் தெய்தாம்" என்ற ஜதியில் நீ தெரிவாய்.

வேவு நேரத்தில், அந்த மௌனித்த இருளில் காற்றோடு உன் குரல், "ஏய் கவனம் அசையாதை..." என்பதுபோல கிசுகிசுத்து நிற்கும். சிவந்து போன உன் தோழியர் கண்களில், உன்னைக் காண்போம் அதை உன் கண்களாய்....

மௌனித்த தோழியில் நீயாக....

ஓ அந்த அன்னையின் விசும்பலில் தெறிக்கும் உன் பிரிவுத்துயர்... அந்த போராளித் தங்கையை இறுகவைத்திருக்கும் உன் இழப்பு.... உன் சின்னத் தம்பி, தங்கையின் விழிநீர்த்திரையில் உன் முகமாய்......

உன் அன்னைக்காய், உன் சகோதர்க்காய், மௌனித்தழும் உன் தோழியர்க்காய்..... நிமிர்வதற்காய்....

காற்றிலே நுழைந்து கவிஞையாய், நடிகையாய், நடன ஆசிரியையாய், சுழன்றாடும் வேவுப் புலியாய், "தத் தெய்தாம் தித் தெய்தாம்" ஜதியில் வந்து போகமாட்டாயா எமக்காய் ஓர் தடவை?

அந்த இருளை ஸ்பரிசித்து, நீயாக நினைத்தது மனம். உன்னுடன் பகிர்வதற்காய் நிறைய நிறைய விடயங்கள் துளசி.

மீண்டும் நீ வா, ஒரு தடவை எமக்காய்.....! ■

# பெரும் நிதிநெருக்கடியில் யாழ் மருத்துவமனை

கொடுப்பனவுகளை மேற்கொள்ளுவதற்கு போதிய நிதி இன்மையால், யாழ். போதனா வைத்தியசாலை பெரும் நெருக்கடிகளை எதிர்நோக்கியிருக்கிறது. இதனைச் சீர்செய்வதற்காக யாழ்ப்பாணத்திலுள்ள அரசாங்க இலாகா பிரிவொன்றிலிருந்து கடன் அடிப்படையில் நிதியைப் பெறுவதற்கு யாழ் போதனா வைத்தியசாலை முயற்சி மேற்கொண்டுள்ளது.

அண்மைக்காலமாக இவ்வைத்தியசாலைக்கு தேவையான நிதி அரசாங்கத்தால் வழங்கப்படாமையாலேயே இந்நிதி நெருக்கடிக்கு காரணமெனக் கூறப்படுகிறது. அரசாங்க நிதி கிடைத்தால் மட்டுமே இந்த நிதியை மீளவும் வழங்கமுடியும் என்றும் தெரியவருகிறது. ■

# நிகழ்வும் நினைவும்

- திலீபன் -

# ஆழக்குழிக்குள் வீழ்ந்துகொண்ட ஐ.தே.க. ஆனை !

சிறீலங்காவின், ஆளும் ஐக்கியதேசியக் கட்சிக்குள் பூசல்கள் உருவாகியுள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

ஒருபெரும் ஆளுமையுள்ள தலைவர் இல்லாதமையின் விளைவுகளை இப்பூசல்கள் இனம்காட்டுகின்றன. முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசாவின் மறைவின் பின் ஜனாதிபதியாகப் பொறுப்பேற்றுக் கொண்ட டி.பி.விஜயதுங்கா தனது நிலையினை படிப்படியாகக் கட்சியினுள் பலப்படுத்தும் முயற்சியில் தொடர்ச்சியாக ஈடுபட்டு வந்தார். எனினும், கட்சிக்குள் அவருக்கு எதிரான போக்குகள் இருக்கவே செய்தன. இருந்தும் அப்போக்கு பலம்பெற முடியாத சூழல் ஒன்று இருந்தது.

சற்றுமே எதிர்பாராத வண்ணம் பதவியேற்றுக்கொண்ட விஜயதுங்கா, தனது நிலையினைப் பலப்படுத்திக் கொள்ளவும், தனது கருத்தமைவினை சுதந்திரமாக வெளிப்படுத்திக் கொள்ளக் கூடிய நிலைமைகளைக் கருத்திற் கொண்டும் தனது சுயமுகத்தினை வெளிப்படுத்தினார்; தனது இனவாதப் போக்கினைப் பகிரங்கப்படுத்தினார். இது தீவிரவாத பௌத்த அமைப்புக்களின் ஆதரவினை அவருக்குப் பெற்றுக் கொடுத்தது.

பிரேமதாசா ஆட்சியின் கீழ் தலையாட்டிப் பொம்மையாக இருந்த ஆதங்கத்தினை தணித்துக் கொள்வதற்காக மட்டுமன்றி, அடுத்த ஜனாதிபதித் தேர்தலின் மூலம் ஜனாதிபதியாக முடிசூடிக் கொள்ளும் ஆசையின் நிமித்தமாக தனக்கு போட்டியாளர்கள் உருவாகாது காய்களை நகர்த்தும் செயற்பாட்டினை விஜயதுங்கா மேற்கொண்டு வந்தார். பிரேமதாசா குடும்பத்தினர் அரசியலில் முன்னணிக்கு கொண்டு வராது தடுக்கப்பட்டனர். பிரேமதாசாவின் ஆதரவாளர்களும் ஓரம்கட்டப்பட்டனர். ரணில் விக்கிரமசிங்கா பிரதமர் என்ற நிலையில் இருந்தாலும், விஜயதுங்கவின் இடத்திற்குப் போட்டி போட முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டார். பிரேமதாசாவின் விசுவாசி சிறிசேனகுரே ஐக்கிய தேசியக் கட்சியின் செயலாளராக, அமைச்சராக இருந்தபோதிலும் அவரது நிலை கண்காணிப்புக்கு உட்படுத்தப்பட்டே வந்தது.

கட்சியினுள் பிரேமதாசா எதிர்ப்புப் போக்கு தலையெடுத்தமை, அனுரா பண்டாரநாயக்கா, காமினி திசாநாயக்கா போன்றோர் கட்சிக்குள் சேர்த்துக் கொள்ளப்பட்டமை போன்றவைகள் பல்வேறு மட்டத்தினர் மத்தியில் அதிருப்தியினை ஏற்படுத்தியபோதும் அவர்களால் பெரிதாக எதுவும் செய்ய முடியவில்லை.

ஜனாதிபதியின் இனப்பிரச்சினை தொடர்பான நிலைப்பாடும் கட்சிக்குள் ஒரு சிலருக்கு அதிருப்தியினை ஏற்படுத்தியிருந்தது. உண்மையில் இந்த அதிருப்தி, இனப்பிரச்சினை தொடர்பான நிலைப்பாட்டால் ஏற்பட்டது என்பது தவறு. ஐக்கிய தேசியக் கட்சியினுள் பலரும் ஜனாதிபதியின் நிலைப்பாட்டினையே தமது நிலைப்பாடாகவும் கொண்டிருந்தனர். ஆனால் ஜனாதிபதி செய்ததைப்போல் 'பச்சையாக' அதனை வெளிப்படுத்துவது, சிறுபான்மையினரின் வாக்குகள் மீது தாக்கத்தினை ஏற்படுத்தும் என்பதே அதிருப்தி கொண்ட பிரிவினரின் வாதம். ஏற்கனவே 'ரணில்' மேலோட்டமாக இதனை விஜயதுங்காவின் காதில் போட்டதாகவும் அவர் அதனை அலட்சியம் செய்ததாகவும் செய்தி ஒன்று தெரிவிக்கிறது.

இப்படியாக, அதிருப்திகள் மத்தியிலும், விஜயதுங்காவின் ஆளுமை மேலோங்கியிருந்த நிலையில் நடைபெற்ற தென் மாகாணத்திற்கான மாகாணசபைத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி தோற்றுப் போனமை அக்கட்சியினை உலுப்பத் தொடங்கியுள்ளது.

உண்மையில் இத்தோல்வி ஏன் ஏற்பட்டது என்ற உண்மையான காரணங்களைக் கண்டறிவதனை விட, தமது அரசியல் முரண்பாடுகளை அதிருப்திகளைத் தீர்த்துக் கொள்வதற்கு காரணங்களைத் தேடி அடுக்கும் செயற்பாடுகளும் நடைபெறுகின்றன.

தென்மாகாணசபைத் தேர்தல், ஜனாதிபதியின் இனப்பிரச்சினை தொடர்பான நிலைப்பாட்டிற்கு பலன் எதனையும் கொடுக்காத ஐக்கிய தேசியக் கட்சியில் அனைவருக்கும் ஏமாற்றத்தினைக் கொடுத்துள்ளது. சிங்கள பௌத்த பெரும்பான்மையே வெற்றியைத் தீர்மானிக்கும் சக்தியாக உள்ள தென்மாகாணத்திலேயே இனப்பிரச்சினை குறித்த பயங்கரவாதப் பிரகடனம் எடுபடவில்லையாயின் ஏனைய இடங்களின் நிலைமை என்ன என்ற கேள்வி இன்று ஐக்கிய தேசிக் கட்சிக்குள் எழுகின்றது.

ஐக்கிய தேசியக் கட்சியின் இன்றைய கவலை தோற்றுப்போன தென்மாகாணம் தொடர்பானது மட்டுமல்ல. அதன் முக்கிய பிரச்சினை இனிவரப் போகின்ற ஜனாதிபதி, பாராளுமன்றத் தேர்தல்கள் தொடர்பானது. பிரதமர் ரணில், சிறிசேனகுரே சார்ந்தவர்கள் விஜயதுங்காவினை ஜனாதிபதி வேட்பாளராக வைத்துக் கொண்டு ஐக்கிய தேசியக் கட்சி ஜனாதிபதித் தேர்தலில் வெல்ல முடியாது என்ற நிலைப்பாட்டைக் கொண்டவர்களாக இருக்கின்றனர் என்றே எண்ணத் தோன்றுகிறது. இவர்களது இந்த நிலைப்பாட்டினை வலுப்படுத்தக் கூடிய காரணங்களும் உள்ளன. தமிழ், முஸ்லீம் வாக்குகள் இன்றி ஐக்கிய தேசியக் கட்சியானது ஜனாதிபதித் தேர்தலில் வெல்ல முடியாது. அவ்வாறு வெல்வதாயின் இழக்கப்படும் தமிழ், முஸ்லீம் வாக்குகளை ஈடுசெய்யக்கூடிய அளவுக்கு மேலதிகமான சிங்கள வாக்குகளை ஐ.-தே.க. பெற வேண்டும். ஆனால், நடைபெற்ற தென்மாகாண சபைத் தேர்தல், இனப்பிரச்சினை தொடர்பான ஜனாதிபதியின் பகிரங்க இனவாதம் கூடுதலான சிங்கள வாக்குகளைப் பெற்றுத்தரும் என்ற நம்பிக்கையினை இல்லாதொழித்துள்ளது. எனவே, ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிபெற வேண்டுமானால் தமிழ், முஸ்லீம் வாக்குகள் மீது கவனம் செலுத்த வேண்டியது அவசியமாக உள்ளது.

இன்றுள்ள, அரசியல் சூழ்நிலையினை வைத்து நோக்கும்போது, ஐ.தே.க.வினால் தமிழ், முஸ்லீம் மக்களின் வாக்குகளைக் கவருவது இலகுவானதல்ல என்பது புலனாகின்றது. விஜயதுங்காவிற்கு பதிலாக ரணில் ஜனாதிபதி வேட்பாளராக வருவது என்பது எவ்வளவு தூரம் நடைமுறைச் சாத்தியம் எனும் கேள்வி ஒருபுறமிருக்க, ரணில் ஜனாதிபதி வேட்பாளராகினால் கூட, தமிழ் - முஸ்லீம் வாக்குளை எவ்வளவு தூரம் கவர முடியும் என்பது கேள்விக்குரியதாகவே உள்ளது. ஐ.தே.க. -தொண்டமான் உறவில் ஏற்பட்டுள்ள விரிசல், ஐ.தே.க. -அஸ்ரப் உறவில் உள்ள விரிசல் போன்றவையும், எதிர்க்கட்சிகள் அணியான மக்கள் அணிக்கு ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெறுவதற்கான வாய்ப்புக்கள் அதிகரித்திருப்பதான கணிப்பும் தமிழ் -முஸ்லீம் கட்சிகளை ஐ.தே.க.-யில் இருந்து தூரத்தள்ளி வைக்கக் கூடும். இருந்தபோதும், தொண்டமானுடன் மீண்டும் சுமூக நிலையினை ஏற்படுத்தும் முயற்சியில் முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனா தலைமையிலான குழுவினர் இறங்கியுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது. ஐக்கிய தேசியக் கட்சியின் வெற்றிக்கு மலையகத் தமிழ் மக்களின் வாக்குகள் எவ்வளவு தூரம் முக்கியமானது என்பதனை ஜே.ஆர். ஐ விட இன்று நன்கு உணர்ந்தவர்கள் எவரும் இருக்க முடியாது.

எது என்னவாக இருப்பினும், தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காண உருவாக்கப்பட்ட மாகாணசபை சிறீலங்காவின் அரசியலில் எவ்வாறு புகுந்து விளையாடுகின்றது என்பதனை, இன்றைய ஐக்கிய தேசியக் கட்சிக்குள் ஏற்பட்டுள்ள பூசல்கள் வெளிப்படுத்துகின்றன. தமது கட்சிக்குள் எத்தகைய பூசலும் இல்லை என கொழும்பு மேயரும் ஐ.தே.க.யின் பொருளாளரும் கணேசலிங்கம் மறுத்துள்ளார். எனினும் முழுப்பூசணிக்காயை சோற்றினுள் மறைக்க முடியாது. அது தலையை நீட்டத்தான் செய்யும். கடந்த 'நிகழ்வும் நினைவும்' பகுதிக்கு 'எமக்கு வெட்டிய குழியில் விழுந்தெழும்பும் பேரினவாதிகள்' என்று தலைப்பிட்டிருந்தேன். இன்று குழிக்குள் ஆழ விழுந்துள்ளது, ஐக்கிய தேசியக் கட்சியின் ஆனை; நாளை சிங்கள பௌத்த பேரினவாதமும் விழும் -இதில் சந்தேகமில்லை. ■

## போரும் சமா.....

சமாதானக் கதவுகளை இறுகப் பூட்டி வைத்திருக்கிறது. இந்த சூழ்நிலையில் மீண்டும் மீண்டும் சந்தித்து, மீண்டும் மீண்டும் சொன்னதையே சொல்லிக் கொண்டிருப்பதில் அர்த்தமில்லை. கொழும்பிலுள்ள அரசியல் செவிடர்களுக்கு இங்கிருந்து எத்தனை தடவைகள் சங்கை ஊதினாற்போலும் கேட்கவா போகிறது? ஆயர் விசயமறிந்தவர். அதனால் அவர் மீண்டும் சந்திப்பை வற்புறுத்தவில்லை.

ஆயர்கள் இங்கு வந்தபோது சர்வோதயத் தலைவர் ஆரியரத்தினாவும் இங்கு வந்தார். அவரைப் புலிகளின் சார்பில் அரசியல் துணைப்பொறுப்பாளர் கரிகாலன் சந்தித்தார். ஆயருக்குச் சொல்லப்பட்டதே அவருக்கும் சொல்லப்பட்டது.

வந்தவர்கள் திரும்பிவிட்டார்கள். அவர்கள் எதையுமே புதிதாகக் கொண்டுவரவில்லை; எதையுமே புதிதாகக் கொண்டு செல்லவுமில்லை. தமிழ் மக்கள் சமாதானத்தை விரும்புகிறார்கள்; புலிகளும் சமாதானத்தையே விரும்புகிறார்கள். இந்தப் பழைய செய்தியைத்தான் கொண்டு சென்றிருக்கிறார்கள். இதைத்தான் கொழும்பிலும் சொல்லப் போகிறார்கள். கொழும்பிலும் புதிதாக எவ்வித திருப்பமும் ஏற்படப் போவதில்லை.

போரை முடிவுக்குக் கொண்டுவர அரசாங்கம் விரும்பவில்லை; பொருளாதார நெருக்குதலைத் தளர்த்தவும் விரும்பவில்லை. போரையும் பொருளாதார நெருக்குதலையும் அரசியல் அழுத்தமாகவே அரசு கணிக்கிறது. இந்த அழுத்தங்களோடு பேச்சு என்ற பொறியை வைக்க அரசு விரும்புகிறது. புலிகள் எந்த அளவிற்கு விட்டுக் கொடுப்பார்கள், எந்தளவிற்கு இறங்கிவருவார்கள் என்பதை நாடி பிடித்துப் பார்ப்பதே அரசாங்கத்தின் நோக்கம். இந்த நோக்கில்தான் சமாதானத் தூதுகளையும் அரசாங்கம் ஊக்குவிப்பதுபோலத் தெரிகிறது.

இனி வருவது தேர்தல் யுகம். இந்தக் காலகட்டத்தில் கவனமாகக் காய்களை நகர்த்த வேண்டும் என்பது, ஆட்சிபீடத்தில் அமர்ந்திருப்பவர்களுக்கு நன்கு தெரியும். இந்தக் காலத்தில், சிங்களப் பேரினவாதத்திற்கு தீனி போடுவதையே அரசியல்வாதிகள் விரும்புவார்கள். தமிழர்களுக்கு நீதி வழங்குவது அரசியல் தற்கொலையாக முடியும். எனவே, இந்தக் கட்டத்தில் புலிகளுடன் பேச்சுக்களை நடத்தி, தமிழர் பிரச்சினையைத் தீர்க்க உருப்படியான தீர்வுத் திட்டம் ஒன்றை முன்வைப்பது, அரசாங்கத்தின் நோக்கமல்ல.

போருக்கு ஓய்வு கொடுப்பதை அரசு விரும்பாததற்குப் பல காரணங்கள் உண்டு. இராணுவம் இன்னும் மேலாதிக்க நிலையை எட்டிவிடவில்லை. தோல்விக்கு மேல் தோல்வியைச் சந்தித்து படையினரின் மனவுறுதி தளர்ந்திருக்கிறது. இன்றைய சூழலில் இராணுவ சமபலம் புலிகளுக்குச் சார்பாக இருக்கிறது. இந்த நிலைமையில் போரை நிறுத்திக் கொள்வது புலிகளுக்கே அனுகூலமாக அமையும் என, அரசு அஞ்சுகிறது. பலத்தின் ஆசனத்தில் அமர்ந்துகொண்டு, ஆதிக்க வலிமையுடன் -அதிகார தோரணையில் -பேசுவதையே அரசு விரும்புகிறது. அதற்கு இன்னும் சந்தர்ப்பமும் சூழ்நிலையும் சரியாக வரவில்லை. அதற்கு வெற்றிகள் வேண்டும்; போர்ச் சாதனைகள் புரியவேண்டும்; ஆக்கிரமிப்பு வேலைகளைச் செய்ய வேண்டும்; புலிகளை இராணுவ ரீதியில் பலவீனப்படுத்த வேண்டும். இதையெல்லாம் செய்து காட்டலாம் என இராணுவத் தலைமை நம்புகிறது. அதற்கான தயாரிப்புக்களையும் செய்கிறது. ஆகவே, போருக்கு ஓய்வுகொடுப்பதை இராணுவம் விரும்பவில்லை. போரைத் தொடர்வதில் தேர்தல் அனுகூலங்கள் இருப்பதாகவும் அரசு நினைக்கிறது. தமிழர் பிரச்சினைக்கு தீர்வு காணாது தட்டிக்கழிக்கலாம், தமிழரின் பயங்கரவாதம் என்ற கோசத்தின் கீழ் சிங்களவரின் தேசியவாதத்தில் குளிர்காயலாம்; பேரினவாத சக்திகளை தனக்குச் சார்பாக அணிதிரட்டிக் கொள்ளலாம்; சமூக பொருளாதார பிரச்சினைகளையும் திசை திருப்பிவிடலாம்; இதனால் போரைத் தொடர அரசு விரும்புகிறது.

படைகளுக்கு ஏற்பட்டுவரும் பேரிழப்புக்கள் காரணமாக யுத்தத்திற்கு எதிரான குரல் ஒன்றும் தென்னிலங்கையில் எழுகிறது. இது பாமர மக்கள் மட்டத்தில் இருந்து எழும் அங்கலாய்ப்பு. பணத்திற்காக பிள்ளைகளை இராணுவத்திற்கு அனுப்பி பிணத்தைக் கூட பார்க்கமுடியாத பெற்றோரின் அவலக்குரல். இது மெல்ல மெல்லப் பலம் பெற்று வருகிறது. அத்துடன் உதவி வழங்கும் உலக நாடுகளும் ஓரளவு அழுத்தம் போடுகின்றன. புலிகளை வெல்ல முடியாத ஒரு போரில் பெருந்தொகைப்பணம் விரயமாகிறது. யுத்தமும் முடிவில்லாத கதையாகத் தொடர்கிறது. அரசின் வலுவுக்கு இது அச்சுறுத்தலாக அமைகிறது. இலங்கையில் பெருமளவு முதலீடு செய்வதற்கோ அன்றி இத்தீவை உலக முதலாளியத்தின் ஒரு வர்த்தக வலயமாக மாற்றுவதற்கோ, முடிவில்லாமல் தொடரும் இப்போர் ஒரு முட்டுக்கட்டையாக இருக்கிறது. இதனால் சமாதான வழியில் பிரச்சினையைத் தீர்க்க முயலுமாறு மேற்குலகம் சிறீலங்காவுக்கு அழுத்தம் போடுகிறது. போருக்கு எதிராக எழும் இந்த ஆட்சேபக் குரல்களை திருப்திப்படுத்துவதற்காக சமாதான பேச்சில் அக்கறை காட்டுவது போல அரசாங்கம் நடிக்கிறது. 'சமாதானப் பேச்சுக்கு அரசு தயாராக இருக்கிறது; ஆனால் புலிகள் பேச்சை விரும்பவில்லை' என்ற பொய்ப் பிரச்சாரத்தையும் மேற்கொண்டு வருகிறது. இந்தச் சூழ்நிலையிலும் தலைவர் பிரபாகரன் கொழும்புக்கு வரமாட்டார் என்பதை நன்கு தெரிந்திருந்தும், அவர் கொழும்புக்கு வந்து தன்னுடன் பேசலாம் என ஜனாதிபதி அழைப்பு விடுவதும், 'அழைத்தாலும் அவர் வருகிறார் இல்லையே' எனப் பின்பு புலம்புவதும் விசமத்தனமான பிரச்சாரம் அன்றி வேறொன்றுமல்ல.

உலகத்திடமிருந்து கடன் வாங்கும் பருவகாலம் நெருங்கிவிட்டது. இந்தப் பருவ காலத்தில் சமாதானத் தூதுக்களை ஊக்குவிப்பதும், சமாதானத்திற்கான பொய்ச் சமிக்ஞைகளைக் காட்டுவதும், வருடாவருடம் சிறீலங்கா அரசு மேடையேற்றும் அரசியல் நாடகமாகும். புளித்துப் போன இந்த நாடகத்தை மேற்குலகத் தனவந்தர்கள் சலிப்புறாமல் ரசித்துக் கொண்டிருப்பதுதான் எமக்கு வியப்பாக இருக்கிறது. ■

நன்றி:'விடுதலைப் புலிகள்'

## கொழும்பில் குண்டுவெடிப்பு

கடந்த வார இறுதியில் கொழும்பில் நடந்த குண்டுவெடிப்புக்களைத் தொடர்ந்து, கொழும்பும் அதன் சுற்றுப் புறப் பகுதிகளும் சிறீலங்கா இராணுவத்தினாலும் பொலிசாராலும் தமிழர்கள் கைதுகள் பெருமளவில் நடாத்தப்பட்டு வருகின்றன. கைது செய்யப்பட்ட தமிழர்களின் எண்ணிக்கை 500 என சிறீலங்கா தெரிவித்தபோதிலும் உண்மையான தொகை அதை விட மிக அதிகம் எனத் தெரிய வருகிறது. ■



# ஓய்வு

பாதை வெகு தூரமானது.
எனினும்
பயணம் செய்கின்றோம்.
பாதையில் வளைவுகளை - இல்லை
காட்டாறுகளை
கடக்கவேண்டியிருந்தது.
கடந்தோம்.
தீக் கங்குகளை
சுமக்க வேண்டியிருந்தது.
சுமந்தோம்.
கால்கள் சேற்றினுள்
புதைந்து மேலெழும்.
சேற்றின் நிறம் சிவப்பு.
இருந்தாற்போல சில
மேடுகள் தட்டும்.
குனிந்து பார்த்து
ஓடிக் கடப்போம் - அவை
எமது தோழர்களின்
புதைகுழிகள்.
வானை முட்டும்
வெற்றிச் சங்கின் ஓசை
காதை நிறைப்பதை
உணர்ந்து கொள்கிறோம்.
ஆயினும்
பயணம் முடியும் நேரம்
பாதையின் நீளம் குறுகி வருகிறது.
நாங்கள் களைத்துவிட்டோம்.
எனினும்
ஓய்வெடுக்கப் போவதில்லை.
ஓய்வுக்கென்றொரு
சந்ததி உண்டு.
அவர்களின் ஓய்வுக்காய்
நாங்கள் உழைப்போம்.

- தமிழ்க்கவி


U.T.O
211 Katherine Road
London E6 1BU, UK
T/F 081-470 8593

L.T.T.E
Postbox 47, 7600 Struer
Denmark. Tel/Fax
97-841231

W.T.C.C
HOF JECKLIN, 7415 RODELS
SWITZERLAND
Tel/Fax: 081-831797

T.C.G
Post Fach - 340251
51624 Gummersbach - 34
Germany

T.C.C
Via Mariano Stabile - 34
90139 Palermo, Italy
T/F091-611 3179

T.C.C
341 Rue des Pyrenees
75020 Paris, France
Tel 435 81142 F435 81191

T.C.C
P.O.Box 375, Preston
Victoria 3072, Australia
T: 03-470 6441 F: 560 8224

T.C.C
P.O.Box 1699 Vika
0110 Oslo - 1, Norway
Tel 022-191260 F-190114

T.C.C
Groot Hertoginnelaan 106
2517 BL Den Haag, Nederland
Tel 070-346 1963 F-384 0683

T.C.C
Glomminge Grand-29
16362 Spanga, Sweden
Tel 08-7612943


Printed by Observer Group Newspapers,